நிமிர்வோம்
தடைகளைத் தகர்த்து...

திராவிடர் விடுதலைக் கழக மாத இதழ்
செப்டம்பர் 2019 / ரூ.20
www.dvkperiyar.com
nimirvomdvk@gmail.com

ஆசிரியர் குழு
கொளத்தூர் மணி
விடுதலை இராசேந்திரன்

வினியோகப் பொறுப்பு
சூலூர் பன்னீர்செல்வம்

இதழ் வடிவமைப்பு
வெல்கின் கணினி

அலுவலக முகவரி
95, டாக்டர் நடேசன் சாலை
அம்பேத்கர் பாலம்
மயிலாப்பூர், சென்னை 600 004
தொலைபேசி எண்:
044-24980745

அனைத்துத் தொடர்புகளுக்கும்
இரா. உமாபதி
72992 30363
வெ. மனோஜ்
7373684049

# புத்தம் மதமல்ல; மார்க்கம்!

விநாயகன் சிலை ஊர்வலங்கள் மதம் சார்ந்தவை அல்ல; மதத்தின் அரசியலுக்காகவே நடத்தப்படுகின்றன. எனவே இதைத் தொடர்ந்து திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து ‘பெரியார் கைத்தடி’யை குறியீடாக்கி எதிர் ஊர்வலங்களை நடத்தி வந்தது. இந்த ஆண்டு எதிர்வினையாக புத்தர் சிலை ஊர்வலத்தை சென்னையில் திராவிடர் விடுதலைக் கழகத்தினர் நடத்தினார்கள். இந்துத்துவ மதவாத அரசியலுக்கு மாற்றாக மக்கள் சமத்துவத்தை மார்க்கமாக்கி பரப்பிய புத்தர் எதிர்வினையாக முன்னிறுத்தப்பட்டார். இது குறித்து பல விவாதங்கள் தொடங்கியிருக்கின்றன. விவாதங்கள் தொடங்கும்போதுதான் பார்வையும் தெளிவாகும்; அந்த வகையில் விவாதங்களை வரவேற்கவே வேண்டும்.

இந்து மதத்திலிருந்து வெளியேறி அம்பேத்கர் – புத்த மார்க்கம் தழுவியபோது, எடுத்த உறுதிமொழிகளில் ஒன்று – ‘இராமன், விநாயகன்’ உருவங்களை வணங்க மாட்டோம் என்பதாகும்.

பெரியார் 1953ஆம் ஆண்டு விநாயகன் சிலை உடைப்புப் போராட்டத்தை நடத்தினார். அதற்கு அவர் தேர்வு செய்த நாள் புத்தர் பிறந்த நாளாகக் கொண்டாடப் படும் மே 27ஆம் தேதி. “என்னை கீழ் ஜாதியாகப் பிறப்பித்ததற்காக உடைக்கிறேன்; என்னை சூத்திரன் – வேசி மகன் என்று கற்பிப்பிப்பதற்காக உடைக்கிறேன் என்பதாக சொல்லிக் கொண்டே உடைக்க வேண்டும்” என்று பெரியார் அறிவுறுத்தினார்.

“புத்தர் நிறுவியது ஒரு மதம் அல்ல; தனக்கோ தான் நிறுவிய மார்க்கத்திற்கோ தெய்வீகம் இருப்பதாக அவர் கூறவும் இல்லை என்று அம்பேத்கர் – ‘புத்தரும் அவர் தம்மமும்’ என்ற நூலில் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

> “தனக்கு தெய்வீகத் தோற்றுவாய் உண்டு எனக் கூறிக் கொள்ளா விட்டாலும் மோசே (Moses) தனது போதனைகளுக்கு தெய்வீக சக்தி உண்டு என்றார். ஏசு தனக்கே தெய்வீகம் உண்டு என்றார்; தான் கர்த்தரின் ஒரே குமாரர் என்றார். கிருஷ்ணன் தானே கடவுள், தனது உரையே கீதை என்றார். புத்தர் தனக்கோ, தனது அறவுரைகளுக்கோ இத்தகைய தெய்வீகம் எதையும் இருப்பதாகக் கூறிக் கொள்ளவில்லை. தனது அறவுரைகள் குறையே இல்லாதவை என்றும் அவர் உரிமை கோரவில்லை. தனக்கு ஏற்பட்ட புரிதல் வரை, விடுதலைக்கான உண்மையான வழி இதுவே என்றுதான் கூறினார்”

– என்று அம்பேத்கர் தெளிவுபடுத்துகிறார்.

இதே கருத்தையே பெரியாரும் கூறினார்.

> “கடவுள் இருக்கிறார் அல்லது இல்லை என்று புத்தர் எதைச் சொல்லி இருந்த போதிலும் அவர் கூறிய ஓர் உண்மைய மட்டும் யாருமே மறுக்க முடியாது. அதாவது எதையும் உன் சொந்த புத்தியைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து ஏற்றுக் கொள்” என்று அவர் சொல்லிய இந்த உண்மையை மட்டும் யாரும் மறுக்க முடியாது. இன்றுவரை புத்தரைத் தவிர வேறு யாருமே அவனவன் சொந்த புத்தியின்படி நட என்று சொல்லவே இல்லை” – என்றார் பெரியார். (‘விடுதலை’ 3.6.1956)

கடவுளை மறுக்கும் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் இப்போது ‘புத்தர் கடவுளை’ ஏன் தூக்கிப் பிடிக்கிறார்கள் என்று சங் பரிவாரங்கள் கேட்கின்றன. புத்தரை போராட்ட அடையாளமாக்குவதா என்று வேறு சில முகாமிலிந்து எதிர்வினைகள் வருகின்றன. இந்தக் கேள்விகளுக்கு அம்பேத்கரும், பெரியாரும் தந்திருக்கிற விளக்கங்களே சரியான பதில்.

பார்ப்பனிய ஊடுருவலால் புத்தரின் சிந்தனைகள் சிதைக்கப்பட்டதை வரலாறு கூறுகிறது. மியான்மரில் புத்தரைப் பின்பற்றுவதாகக் கூறும் சர்வாதிகார ஆட்சி, இஸ்லாமியர்கள் வெறுப்பைக் கக்குவதும், இலங்கை புத்த பிக்குகள் தமிழர்களுக்கு எதிராக சிங்கள வெறித்தனத்தைக் கட்டவிழ்த்து விடுவதும் புத்த மார்க்கத்தின் நெறிக்கு நேர் எதிரானவை; வர்ணாஸ்ரமத்துக்கு எதிராக மக்கள் சமத்துவத்தைப் பேசுவதே உண்மையான ‘புத்த தம்மம்’ என்பதை பேராசிரியர் லட்சுமிநரசு போன்ற ஆய்வாளர்களும் அம்பேத்கரும் பெரியாரும் வெளிச்சமாக்கி யுள்ளனர். அதுவே நாம் மதிக்கும் – பவுத்தம்!



# மாநில அடையாளங்களை அழிப்பதால் உருவாகும் ஆபத்து

*– பிரேர்ணா சிங் –*

***மா**நிலங்களின் தனித்துவத்தை அழித்து ஒற்றை தேசியமாக இந்தியாவை மாற்றத் துடிக்கிறது பா.ஜ.க.வின் நடுவண் ஆட்சி. மாநிலங்களுக்கான அடையாள உணர்வுதான் வளர்ச்சிக்கும் சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் ஆதார சுருதியாக இருக்கிறது என்பதை ஆய்வு நோக்கில் முன் வைக்கிறது, கட்டுரை.*

---

நாம் வாழும் இடம்தான் நமது வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது. அருகருகே உள்ள வெவ்வேறு நாடுகளில் குழந்தைகள் இறப்பு விகிதம் தொடங்கி கல்வி என்று பல்வேறு விஷயங்களில் மிகப் பெரிய வேறுபாடுகள் இருப்பதை உணர முடியும். அமெரிக்காவின் ஹெய்ட்டி மாநிலத்தில் பிறக்கும் குழந்தை, அங்கிருந்து 50 மைல்கள் தொலைவில் உள்ள கியூபாவில் பிறக்கும் குழந்தையை ஒப்பிட தனது முதல் பிறந்த நாளைக் கொண்டாடும் வாய்ப்பை 12 மடங்கு அதிகம் பெற்றிருக்கிறது. அதேபோல், நீங்கள் மேற்கு ஆப்பிரிக்க நாடான புர்கீனா பாஸோவில் பிறந்தவர் என்றால், அண்டை நாடான கானாவுடன் ஒப்பிடும்போது நீங்கள் கல்வியறிவு பெறாதவராக இருப்பதற்கான வாய்ப்பு இரண்டு மடங்கு அதிகம்.

ஒரே தேசத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடையிலும் இதுபோன்ற வேறுபாடுகள் உண்டு. இந்தியாவின் சில மாநிலங்கள், வளர்ச்சியடைந்த நாடுகளைவிடச் சிறப்பான நிலையில் இருப்பதையும் பல மாநிலங்கள் வளர்ச்சி குன்றிய ஆப்பிரிக்க நாடுகளுடன் ஒப்பிடும் அளவுக்கு இருப்பதையும் உதாரணமாகச் சொல்லலாம். ராஜஸ்தானில் ஜெய்ப்பூருக்கு வெளியே உள்ள பகுதிகளில் 1960-களில் பிறந்தவர்களின் கல்வியறிவை, அதே காலகட்டத்தில் தென்னிந்திய மாநிலமான தமிழ்நாட்டில் பிறந்தவர்களுடன் ஒப்பிடும்போது, ராஜஸ்தானில் பிறந்தவர்கள் மத்தியில் கல்வியறிவின்மை இரண்டு மடங்கு இருப்பது ஓர் உதாரணம். இன்றைய நிலவரத்தை எடுத்துக்கொண்டால்கூட, உத்தர பிரதேசத்தின் வடக்கு - மத்திய பகுதிகளில் பிறந்த பெண்களை விடவும், கேரளத்தைச் சேர்ந்த பெண்களின் ஆயுட்காலம் சராசரியாக 15 ஆண்டுகள் அதிகம்.

**மாற்றங்கள் எங்கே நடக்கின்றன?**

ஒரே சட்ட அமைப்பு, தேர்தல் முறை, நிதி அமைப்பின் கீழ் வரும் மாநிலங்கள், சமூக முன்னேற்றம் எனும் விஷயத்தில் மிகப் பெரிய வேறுபாடுகளைக் கொண்டிருப்பது ஏன்?

இங்கு நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம். இந்தப் போக்குகள் காலங்காலமாக ஒரே மாதிரியாகத் தொடர்வதில்லை. அதிகம் இல்லை, வெறும் நூறு ஆண்டுகளுக்கு முன்பு, பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் உத்தர பிரதேச மாநிலம் (அப்போது மத்திய மாகாணம்), சிறப்பாக நிர்வகிக்கப் பட்ட மாநிலங்களில் ஒன்று என்று அறியப்பட்டிருந்தது. அம்மாநிலத்தில் பணியில்

சேர்வதற்கு, கிழக்கிந்திய கம்பெனி அதிகாரிகள் போட்டிபோடுவார்கள். அக்காலகட்டத்தில் இன்றைய தென்னிந்திய மாநிலமான கேரளப் பகுதி ஊழல், பஞ்சம் என்று பல்வேறு பிரச்சினைகளில் சிக்கித் தவித்தது. சென்னை மாகாணத்துடன் இணைக்கப்பட்டுவிடும் அபாயத்தை அது தொடர்ந்து எதிர்கொண்டு வந்தது.

1880-களில், உத்தர பிரதேசத்துடன் ஒப்பிட, கேரளம் பல்வேறு வகைகளில் பின்தங்கிய நிலையில் இருந்தது. ஆனால், இன்றைய நிலை தலைகீழ். இவ்வளவு பெரிய மாற்றம் வெறும் நூறு ஆண்டுகளில் எப்படிச் சாத்தியமானது?

இவ்விஷயத்தில் எனக்கு முன்பாக, ஆய்வுகள் செய்த அறிஞர்கள் பலர், வெவ்வேறு காரணிகளை முன்வைத்தார்கள். உதாரணமாக, ஒரு மாநிலத்தின் வளம் ஒரு காரணியாகக் குறிப்பிடப்பட்டது. அதாவது, வளமான மாநிலம் என்றால் அதனிடம் நிறைய பணம் இருக்கும். எனவே, சமூக நலத்திட்டங்களுக்கு நிறைய நிதி வழங்க முடியும் என்பது அந்த வாதம். இன்னொரு வாதம் - வர்க்க அரசியல். மற்றொரு வாதம் - இன அடிப்படையிலான ஒற்றுமைத் தன்மை. ஆனால், இந்திய மாநிலங்களுக்கு இந்த வாதங்கள் எதுவுமே பொருந்துவதில்லை என்பதைப் பல உதாரணங்கள் வழியே என்னால் நிரூபிக்க முடியும். உண்மையான காரணம் எது என்றால், மாநிலங்களுக்கிடையிலான இணக்கத்தன்மை, ஒற்றுமைத்தன்மை. மிக முக்கியமாக, ஒரே மாநிலத்தவர் என்ற அடையாள உணர்வு, மாநிலத்துக்கே உரிய ஒற்றுமை உணர்வு ஆகியவற்றின் அடிப்படையிலான சமூக நலக் கொள்கைகள். நான் இந்தப் பிராந்திய ஒற்றுமையைக் குறிக்கும் அடையாளச் சொல்லாக 'துணை தேசியவாதம்' என்பதைப் பயன்படுத்து கிறேன்.

### பிராந்திய உணர்வற்ற உத்தர பிரதேசவாசிகள்

நாம் 1950-களுக்குச் செல்லலாம்; அங்கே நான் சொல்லும் வாதங்களுக்கான வேர்கள் இருக்கின்றன. அப்போதைய மாநில மறு சீரமைப்பு ஆணையத்தின் ஆவணங்களை ஆய்வு செய்தபோது, அந்த ஆணையத்துக்கு வந்த கோரிக்கைகளைப் பார்க்க முடிந்தது. "நான் இந்த

**உத்தர பிரதேசக்காரர்கள் தாங்கள்தான் முழு நாடும் என்று சிந்தித்தார்கள் அல்லது சாதி, மத அடிப்படையில் சிந்தித்தார்கள். பிராந்திய உணர்வு என்று ஒன்று வெளிப்படவில்லை.**

மாநிலத்தில் வசிக்க விரும்புகிறேன் எங்கள் மாநிலம் இப்படி இருக்க வேண்டும்" என்று யார் வேண்டுமானாலும் கோரிக்கை அனுப்ப முடியும். கேரளம் என்ற மாநிலத்தின் உருவாக்கத்துக்காக ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இரத்தத்தால் கையெழுத்திட்ட கோரிக்கைகளை நான் கண்டேன். அதாவது, கேரளம் என்பது ஒரு மாநிலமாக ஆவதற்கு வெகுகாலத்துக்கு முன்பிருந்தே மலையாளிகளின் பிராந்திய உணர்வு, கேரளம் எனும் அடையாளத்தை இயல்பாகவே உருவாக்கியிருந்தது.

சரி, அதேசமயத்தில் மத்திய மாகாணமா யிருந்த உத்தர பிரதேசம் எப்படி இருந்தது? புதிய மாநிலத்துக்கு என்ன பெயர் தேர்வுசெய்யப்படும் என்று டெல்லியில் இருந்தவர்கள் காத்திருந்த போது, உத்தர பிரதேசத்திலிருந்து வந்த தந்தியில் மாநிலத்தின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது அது, 'இந்துஸ்தான்'. நேரு, "என்ன விளையாட்டு இது? இது ஒட்டுமொத்த இந்தியாவின் பெயரல்லவா" என்று கேட்க, அடுத்த தந்தி டெல்லிக்குப் போனது. அதில் குறிப்பிடப் பட்டிருந்த பெயர் 'ஆரியவிரத்'. அதுவும் மறுதலிக்கப்படவே, 'ராமராஜ்யம்' என அனுப்பி வைத்தார்கள். கடைசியில் நேரு தலையிட்டு, 'உத்தர பிரதேசம்' எனும் பெயரை இறுதி செய்தார். அதாவது, அன்றைய உத்தர பிரதேசக்காரர்கள் தாங்கள்தான் முழு நாடும் என்று சிந்தித்தார்கள் அல்லது சாதி, மத அடிப்படையில் சிந்தித்தார்கள். பிராந்திய உணர்வு என்று ஒன்று வெளிப்படவில்லை. இன்று வரை ஒரு பிராந்திய உணர்வை அது பெற்றுவிட்டது என்று சொல்ல மாட்டேன்.

நான் உத்தர பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஒருவரைப் பேட்டி கண்டபோது, அவரிடம், "தமிழ்நாட்டினர் தமிழர்கள் என்று சொல்லிக்

கொள்கிறார்கள். கேரளத்தவர்கள் தங்களை மலையாளிகள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். நீங்கள் எப்படி உங்களைச் சொல்லிக் கொள்வீர்கள்?'' என்று கேட்டேன். அவர் ''பையா - அண்ணாச்சி'' என்று சொல்லிக் கொள்வேன்'' என்று சொன்னார். இந்தியாவின் மையப் பகுதியில் உள்ள மிகப் பெரிய மாநிலத்திலிருந்து வெளிப்படும் மனப்பான்மை இது. நீங்கள் அங்கே தேர்தல் பிரச்சாரத்தில் கடந்த காலங்களில் பேசப்பட்ட விஷயங்களை ஆய்வு செய்தால் இது புலப்படும், ''தேசியப் பாதுகாப்பு, பாகிஸ்தான் அச்சுறுத்தல், இந்தியைத் தேசிய மொழியாக எப்படி முன்னெடுப்பது'' இப்படித்தான் தேர்தல் பிரச்சாரங்கள் நடக்கும் அல்லது சாதி, மதம் சார்ந்த விஷயங்கள் செல்வாக்கு செலுத்தும். அங்குள்ள அரசுகளின் பட்ஜெட்களும்கூட, தேசிய அளவிலான விஷயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் அமைந்தன. எளிமையான தொனியில் நான் குறிப்பிடும் இந்த விஷயங்கள் எளிதானவை அல்ல. இந்த மாநிலங்களின் வளர்ச்சிகளின் தன்மை குறித்த முக்கியமான விஷயத்தை அடிப்படையாகக் கொண்டவை.

### தமிழ்நாடு எனும் முன்னுதாரணம்

ஆக, நான் குறிப்பிடும் பிராந்திய உணர்வு - 'துணை தேசியம்' இந்தியாவிலுள்ள ஒரு மாநிலத்தின் வளர்ச்சியில் மிகப் பெரிய செல்வாக்கைச் செலுத்துகிறது என்று சொல்வேன். அது தேசம் எனும் கருத்தாக்கத்துக்கு எதிரானது அல்ல; பிராந்திய உணர்வும் தேசிய உணர்வும் இரண்டும் ஒரே தளத்தில் இருக்க முடியும்; ஒன்றுக்கொன்று பகிர்ந்தளித்துக் கொள்ளவும் முடியும். இங்கே தமிழ்நாட்டைத் தான் முக்கியமான உதாரணமாக்குவேன். சுதந்திர இந்தியாவிலேயே முதன்முறையாகப் பிரிவினைக் குரல்கள் எழுந்த மாநிலங்களில் ஒன்று தமிழ்நாடு. இன்றைக்கும் பிராந்திய உணர்வு கொண்டவர்கள், அதேசமயம், தங்களைப் பெருமைக்குரிய குடிமக்களாகவும் கருதுபவர்கள்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாட்டின் பிற மாநிலங்களைப் போலவே தமிழ்நாடும் பின்தங்கியிருந்தது. 1900-களுக்கு முன் இருந்த 'மதறாஸ் மாகாணம்' எழுத்தறிவற்றவர் களையும் நோயாளிகளையும் அதிக எண்ணிக்கை யில் கொண்டது. தமிழர்கள் தங்களுடைய மதிப்பு

**சக்திவாய்ந்த<br>மக்கள் இயக்கத்தின் அடிப்படையில்<br>உருவாகும் சிவில் சமூகமே<br>இதன் அடிப்படையாக இருக்கிறது.**

மிக்க இலக்கியச் சொத்துகளைப் பற்றிய எண்ணமே இல்லாமல் சுணங்கியிருந்தனர். பழந்தமிழ் இலக்கியங்களும் ஏடுகளும் தனியாரிடம் தூங்கிக்கொண்டிருந்தன.

தமிழ்த்தாயும் திருவள்ளுவரும் வரலாற்றின் பழைய ஏடுகளில் பதுங்கியிருந்தனர். செம்மொழி தமிழ் என்பதும் உலகிலேயே மிகவும் மூத்த நாகரிகங்களுள் ஒன்று திராவிடர்களுடையது என்பதும் தெரியாமல் ஒருவித அறியாமை நிலவியது. கல்வி, சுகாதாரம், பொருளாதார வளர்ச்சியிலும் இதே நிலைதான்.

அந்நாட்களில் மதறாஸ் மாகாண மக்களின் சராசரி ஆயுட்காலம் 23 வயது. கல்வி, வேலை வாய்ப்பில் மேல்சாதிக்காரர்களின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தி, பிற்படுத்தப்பட்டோரையும் தாழ்த்தப்பட்டோரையும் அதிகாரப்படுத்தும் பணிக்கு பார்ப்பனரல்லாதோர் இயக்கமான நீதிக் கட்சி வித்திட்டது. பெரியாரின் சுயமரியாதை இயக்கம் வளர்ந்து, நீதிக் கட்சியையும் உள்ளடக்கி அது 'திராவிடர் கழக'மானபோது, கலாச்சார ரீதியாகத் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டது. 1967 வரை தமிழ்நாட்டை ஆண்ட காங்கிரஸ் கட்சியும் கூட இந்தத் தமிழ் தேசிய - சமூக நீதி அலையி லிருந்து தப்ப முடியவில்லை. காங்கிரஸின் கொள்கைகள் தேசிய அளவில் வேறாகவும் தமிழக அளவில் வேறாகவும் இருந்தன.

### எங்கும் தமிழ் எதிலும் தமிழ்

அண்ணாவின் அரசியல் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' அலையை உருவாக்கியது. அரசியல் மேடைகளில் பழந்தமிழ் இலக்கியங்கள் ஏறின. குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுதலில் தொடங்கி, அரசியல் மேடைகளில் பழந்தமிழ் இலக்கியங்களை ஏற்றியது வரை ஒரு பெரும் மாற்றம் நிகழ்ந்தது.

திமுகவின் எழுச்சி, தமிழ் தேசிய இயக்கத் தலைவராக அண்ணாவை உயர்த்தியதோடு, தமிழ்

தேசிய இயக்கம் பரவுவதிலும் முக்கியப் பங்கு வகித்தது. பிராந்திய உணர்வை மீட்டிய அண்ணா, பிராந்தியங்களின் அதிகாரத்துக்காகவும் சுயாட்சிக்காகவும் குரல் கொடுப்பவராகவும் இருந்தார். இன்றைக்கு நாட்டிலேயே துணை தேசியவாதத்துக்கு முன்னுதாரண மாநிலங்களில் ஒன்றாகச் சுட்டப்படும் தமிழ்நாட்டில், பிராந்திய உணர்வுடன் சமூக நலத்திட்டங்கள் பிணைக்கப்பட்டதற்கான மிகச் சிறந்த குறியீடாக அண்ணாவின், ‘ரூபாய்க்கு ஒரு படி அரிசி’ திட்டத்தை நாம் குறிப்பிடலாம்.

பிராந்திய அடையாள அரசியல் - துணை தேசியவாதம் எப்படி முதன்மையாகிறது? **சக்தி வாய்ந்த மக்கள் இயக்கத்தின் அடிப்படையில் உருவாகும் சிவில் சமூகமே இதன் அடிப்படையாக இருக்கிறது. எங்கோ ஓரிடத்தில் ஒட்டுமொத்த சமூக நலனை அது பேசுகிறது. அனைவருக்கும் நலத்திட்டங்கள் சென்று சேர்வதை அது உறுதி செய்கிறது.** மேட்டுக் குடியினரால் தீர்மானிக்கப் படும் விஷயங்களை அது எதிர்க்கிறது. இந்த உணர்வுடன்கூடிய சமூக நலக் கொள்கைகளை ஒரு அரசு முன்னெடுக்கும் போது, அது வளர்ச்சியை நோக்கி வேகமாக மக்களைச் செலுத்துகிறது. இந்திய வரலாற்றில் அண்ணா வின் முக்கியத்துவம் இங்கேதான் நிலை கொள்கிறது!

– கட்டுரையாளர் அமெரிக்காவின் பிரவுன் பல்கலைக்கழக ஆய்வாளர் ‘மாபெரும் தமிழ் கனவு’ நூலிலிருந்து

## வாசகர்களிடமிருந்து...

காஷ்மீர் பற்றிய வரலாற்றை எளிமையாக விளக்கியது நிமிர்வோம் கட்டுரை சிறப்பு உரிமை காஷ்மீர் மாநிலத்துக்கு மட்டுமல்ல; வடகிழக்கு மாநிலங்களுக்கும் இருக்கிறது என்பதை ஆதாரங் களுடன் கட்டுரை சுட்டிக் காட்டியுள்ளது. காஷ்மீரில் அமைதி திரும்பிவிட்டதாக பா.ஜ.க. அரசு செய்து வரும் பொய்ப் பிரச்சாரத்தக்கு தேசிய பார்ப்பன ஊடகங்களும் துணை போவது கடும் கண்டனத்துக்கு உரியது. பி.பி.சி. போன்ற சர்வதேச ஊடகங்கள் காஷ்மீரில் மக்கள் நடத்தும் போராட்டத்தை வெளிப்படுத்துவதையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். இதில் அம்பலமாவது தேசிய பார்ப்பன ஊடகங்கள் தான்!

**அறிவழகன், சென்னை–42**

இசை நாடகத் துறையில் பெரியார் இயக்கத்தின் கலகங்களை முனைவர் வே. இராமசாமி, குடிஅரசு இதழ்களிலிருந்து ஏராளமான செய்திகளுடன் எடுத்துக் காட்டியிருந்தார். பெரியாரே இரணியன் வேடம் போட்டு நடிக்க விரும்பிய செய்தி பெரியார் ஏதோ கலையையே வெறுத்தவர் என்ற தவறான புரிதலுக்கு நல்ல மறுப்பு அது மட்டுமின்றி நாடகம் 2 மணி நேரத்துக்குள் முடிவடைய வேண்டும். நாடகக் காட்சி தரும் உணர்ச்சிகளைப் பாதிக்கும் பாடல்கள் இடம் பெறக் கூடாது என்று பெரியார் பேசியிருப்பது நாடகத்துறை குறித்து பெரியாருக்கு இருந்த பார்வையை வெளிப்படுத்துகிறது. இளைய தலைமுறைக்கு இதுபோன்ற வரலாற்றுச் செய்திகளை நிமிர்வோம், தொடர்ந்து வெளியிட வேண்டும்.

**தேன்மொழி, பல்லடம்**




திருக்குறள் – தீண்டத்தகாத நூல் என்பதே பார்ப்பனர்கள் கருத்து. 1796இல் சென்னை வந்த எல்லீஸ் துரையிடம் அயோத்தி தாசரின் பாட்டனார் திருக்குறளைத் தந்தார் என்பது மிகச் சிறந்த வரலாற்றுக் குறிப்பு. திருக்குறளை சுவடி வடிவில் பாதுகாத்து வந்தவர் அயோத்தி தாசர் பண்டிதரின் பாட்டனார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**தமிழினியன்,** கோவை

# வங்கிகள் இணைப்பு : நிர்மலா சீதாராமன் வாதங்கள் சரியா?

ர. பிரகாஷ்

*பொருளாதார வீழ்ச்சி சரி செய்யப்படும் என்று கூறியுள்ள நிர்மலா சீதாராமன், அதற்குப் பின்னால் அறிவித்து வரும் அறிவிப்புகள், மேற்கொள்ளும் செயல்கள் யாவும் நாட்டு மக்களுக்கு அச்சத்தை மேலும் அதிகரிக்கவே செய்திருக்கிறது.*

தொடர்ந்து 2ஆவது முறையாக பாஜக ஆட்சியமைத்து 100 நாட்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் சிறு குறு நிறுவனங்கள் முதல் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பெரு நிறுவனங்கள் வரை கடுமையான தொழில் மந்தத்தை எதிர் கொண்டுள்ளதாக அன்றாடம் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அசோக் லேலாண்ட், டிவிஎஸ், மாருதி போன்ற முன்னணி வாகனத் தயாரிப்பு நிறுவனங்கள் ஊழியர்களுக்குக் கட்டாய விடுமுறை அளித்து நெருக்கடியை சமாளிக்க முயன்று வருகின்றன. பார்லே ஜி பிஸ்கட் தயாரிப்பு நிறுவனம் 10ஆயிரம் பேரை நீக்கத் திட்டமிட்டுள்ளது. பொருளாதார மந்த நிலையைச் சமாளிக்க முடியாமல் பல சிறு குறு நிறுவனங்கள் மூடுவிழா கண்டு வருகின்றன. கோவையில் வட இந்திய தொழிலாளர்கள் மட்டும் சுமார் 40 ஆயிரம் பேர் வேலையிழந்து சொந்த ஊர் திரும்பி வருவதாக அதிர்ச்சியளிக்கும் செய்திகள் வெளியாகின. ஒட்டுமொத்த பொருளாதாரமும் சரிந்து உற்பத்தித் துறை முற்றிலும் முடங்கியிருப்பதை உணர்த்தும் விதமாக நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 5 விழுக்காடாகச் சரிந்திருப்பதை புள்ளியல் துறை தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த சரிவு என்பது கடந்த 21 காலாண்டுகளில் இந்தியா கண்டிராத அளவுக்கு மிகப் பெரியது.

பொருளாதார வீழ்ச்சியை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் அரை குறையாக ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் இதற்கு நேர்மாறாக 100 நாள் ஆட்சியில் மிகப்பெரிய சாதனையைச் செய்துவிட்டோம் என்று கூறிவருகிறார் மோடி. வீழ்ச்சிப் பாதையில் கொண்டுசெல்வதுதான் இவர்களின் சாதனை போல. அது ஒருபுறம் இருக்கட்டும்.

உபரி நிதி ரூ.1.76 லட்சம் கோடியை மத்திய அரசுக்கு ரிசர்வ் வங்கி அளிப்பதாக அறிவித் திருக்கிறது. அந்த நிதியை என்ன செய்யப் போகிறார்கள் என்பதற்கும் இதுவரையில் விளக்கம் இல்லை. ரிசர்வ் வங்கியின் உபரி நிதியைப் பெறவே முன்னாள் ஆளுநர்கள் ரகுராம் ராஜன், உர்ஜித் பட்டேல் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டார்களா? அவர்கள் பதவி விலகச் செய்யப்பட்டு, மத்திய அரசுக்கு நெருக்கமான, பொருளாதாரத் துறைக்குச் சம்பந்தம் அற்ற ஐ.ஏ.எஸ்.அதிகாரி சக்திகாந்த தாஸ் ஆளுநராக நியமிக்கப்பட்டாரா என்ற சந்தேகமும் இப்போது வலுத்துள்ளது.

இதனிடையே ஆகஸ்ட் 30ஆம் தேதி டெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த

அமைச்சர் நிர்மலா சீதாராமன் 4 பெரிய பொதுத் துறை வங்கிகளுடன் 6 சிறிய பொதுத் துறை வங்கிகள் இணைக்கப்படுவதாக அறிவித்தார். இவரது அறிவிப்பின்படி பஞ்சாப் நேசனல் வங்கியுடன் (இந்த வங்கியில் தான் ரூ.13,800 கோடி மோசடி செய்துவிட்டு லண்டன் தப்பியோடினார் நீரவ் மோடி) ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ், யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா ஆகிய 2 வங்கிகள் இணைக்கப்படு கின்றன.

தமிழகத்தின் பட்டிதொட்டி தோறும் கிளைகளைப் பரப்பி, லாபகரமாக இயங்கும் கனரா வங்கியுடன் நட்டத்தில் இயங்கும் சிண்டிகேட் வங்கி இணைக்கப்படுகிறது. யூனியன் பாங்க் ஆப் இந்தியாவுடன் ஆந்திரா வங்கியும், கார்ப்பரேசன் வங்கியும் இணைக்கப்படு கின்றன. அதேபோல இந்தியன் வங்கியுடன் அலகாபாத் வங்கி இணைக்கப்படுகிறது. பொதுத்துறை வங்கிகள் தொடர்ந்து இணைக்கப் படுவதால் 2017இல் 27ஆக இருந்த பொதுத்துறை வங்கிகளின் எண்ணிக்கை தற்போது 12ஆகக் குறைந் துள்ளது. பொதுத் துறை வங்கிகள் இணைக்கப்படு வதால் உலகின் மிகப் பெரிய வங்கிகள் இந்தியா வில் இருக்கும் என்றும், இதன்மூலம் பொருளா தாரம் வளர்ச்சி அடையும் என்றும் நிர்மலா சீதாராமன் கூறுகிறார்.




வீழ்ச்சியடைந்த துறைகளின் பிரச்சினை களைக் கண்டறிந்து, அவற்றைச் சரிசெய்து மந்த நிலையைப் போக்காமல் வங்கியை இணைத்தால் போதும், எல்லாம் சரி ஆகிவிடும் என்ற நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் கருத்து ஏற்கத் தக்கதாக இல்லை. வங்கிகளை இணைத்து விட்டால் வங்கிகளின் பிரச்சினை தீருமா என்பதே மிகப் பெரிய கேள்விக்குறி.

இந்திய பொதுத் துறை வங்கிகளின் அடிப்படை சிக்கல் என்பதே வாராக் கடன்தான். மோடி ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த 6 ஆண்டுகளில் பொதுத் துறை வங்கிகளின் வாராக் கடன் கூடிதான் உள்ளதே தவிர குறைந்த பாடில்லை. 2019ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் தேதி கணக்குப்படி பொதுத்துறை வங்கிகளின் வாராக் கடன் அளவு 7.9 லட்சம் கோடி ரூபாய். இந்த கடனை மீட்பதற்கான முயற்சிகள் குறித்து எந்த அறிவிப்பையும் நிர்மலா சீதாராமன் வெளியிட வில்லை. அதற்கு மாறாக மறுமூலதன நிதி என்ற பெயரில் வாராக்கடன் சுமையி லிருந்து மீள அரசு உதவுவது போல நாடகங்கள் அரங்கேறுகிறது. பல ஆயிரம் கோடிகளில் கடனை பெற்றுவிட்டு வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்லும் நீரவ் மோடி, விஜய் மல்லையா போன்ற பண முதலைகளிடம் வாராக் கடனை வசூலிப்பதும், இனி ஏமாறாமல் இருப்பதும் தான் பொதுத் துறை வங்கிகளைக் காப்பாற்றும் என்பதுவே பொருளாதார ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. அது மட்டுமின்றி, உலகம் முழுவதும் 50 விழுக்காடு வங்கி இணைப்புகள் கூட வெற்றி அடையவில்லை என்கிறார் ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் ஒய்.வி.ரெட்டி.

வங்கி இணைப்பு நடவடிக்கையால் ஊர்ப் புறங்களில் உள்ள கிளைகள் ஒவ்வொன்றாகக் குறைக்கப்படலாம். ஏடிஎம்கள் எண்ணிக்கை குறைக்கப்படலாம். அவ்வாறு குறைக்கப் பட்டால் வாடிக்கையாளர்கள் சிரமத்திற்கு உள்ளாகலாம். தற்போது நாடு முழுவதும் 4 லட்சத்துக்கும் அதிகமான வங்கி ஊழியர்கள் உள்ளனர். வங்கி இணைப்பு வங்கி ஊழியர்களின் பணிக்கு உறுதியற்ற தன்மையை ஏற்படுத்தும். படிப்படியாக ஆட்குறைப்புகள்

செய்யப்படலாம். புதிய பணியிடங்களின் தேவை பெருமளவில் குறைந்துபோகும். பதவி உயர்வுகள் குறையும். இந்த அச்சத்தாலேயே வங்கி ஊழியர்கள் நாடு முழுவதும், போராட்டத்தில் குதித்தனர். ஆனால் வங்கி ஊழியர்கள் வேலை பறிபோகாது என்று நிர்மலா சீதாராமன் கூறுகிறார். பண மதிப்பழிப்பு, ஜிஎஸ்டியின் போதும்கூட எந்த பாதிப்பும் இல்லை என்று இப்படித்தான் நம்பிக்கை அளித்தார்கள். ஆனால் பொருளாதார சரிவுக்கு அடித்தளமிட்டதே அவையிரண்டும்தான் என்பதே ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

வங்கிகள் இணைக்கப்பட்டு பெரிய வங்கிகளாக இருந்தால் பொருளாதாரம் வளரும் என்பது உண்மையானால், மிகப்பெரிய வங்கியான எஸ்.பி.ஐ ஏன் வாராக் கடன் சுமையிலிருந்து மீள முடியாமல் தவிக்கிறது என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். எஸ்.பி.ஐ. வங்கியுடன் இதுவரை 5க்கும் மேற்பட்ட சிறிய வங்கிகள் இணைக்கப்பட்டுள்ளன. வங்கிகள் இணைக்கப் பட்ட பின்னர் வாராக் கடன் சுமை குறைய வில்லை, மாறாக அதிகரித்துக் கொண்டேதான் உள்ளது. நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் மட்டும் சுமார் ரூ. 32,000 கோடி மதிப்பிலான 2,480 வங்கி மோசடிகள் 18 பொதுத் துறை வங்கிகளில் நடந்துள்ளன. இதில் எஸ்.பி.ஐ வங்கியில் மட்டும் ரூ. 12,012.77 கோடி மதிப்பிலான 1,197 மோசடிகள் நடந்துள்ளன. அதாவது ஒட்டு மொத்த மோசடிகளில் சுமார் 50% எஸ்.பி.ஐ. வங்கியில்தான் நடந்துள்ளது. குறைவான மோசடிகள் நடந்த வங்கிகளாக இந்தியன் வங்கி, ஆந்திரா வங்கி, பஞ்சாப் மற்றும் சிந்து வங்கிகள் உள்ளன. இந்த தகவல்கள் ஆர்டிஐ மூலம் மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்தவரால் அண்மையில் பெறப் பட்டது. பெரிய வங்கிகள் எல்லாம் வலுவான வங்கிகள் என்று நம்பவைக்கும் தந்திரம் இதன் மூலம் பொய்த்துப்போனது.

இலாபகரமாக இயங்கும் பொதுத் துறை நிறுவனங்களுடன் நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை இணைத்தபோது இதற்கு முன்பும் பொருளாதாரம் வளர்ந்து விடவில்லை என்பதும், லாபத்தில் இயங்கிய நிறுவனங்களும் நட்டத்தை மேலும் சந்தித்ததுதான் மிச்சம் என்பதும் கவனத்தில் கொள்ளவேண்டியது. குறிப்பாக ஏர் இந்தியா நிறுவனம் ஒருகாலத்தில் லாபத்தில் இயங்கிக் கொண்டிருந்தது.

2007ஆம் ஆண்டில் இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனம் ஏர் இந்தியாவுடன் இணைக்கப் பட்டதில் இருந்துதான் ஏர் இந்தியா ஒவ்வொரு ஆண்டும் இழப்பைச் சந்தித்து வருகிறது. இன்று ஏர் இந்தியா 50,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான கடனில் சிக்கித் தவிக்கிறது. கடும் நெருக்கடியிலிருந்து ஏர் இந்தியாவை மீட்க முடியாமல் இப்போது அதனை விற்பதற்குத் தனியார் நிறுவனங்களின் கதவைத் தட்டி கொண்டிருக்கிறது மத்திய அரசு. ஆனால் எந்த நிறுவனமும் ஏர் இந்தியாவை வாங்க இதுவரையிலும் முன்வரவில்லை. வேறு வழியின்றி ஏர் இந்தியாவின் சொத்துகளை ஒவ்வொன்றாக விற்றுக்கொண்டிருக்கிறது மத்திய அரசு. ஏர் இந்தியா விமானங்களின் எண்ணிக்கையையும் படிப்படியாகக் குறைந்து வருகிறது. இதனால் ஊழியர்கள் வேலையிழப்பும் அரங்கேறி வருகிறது.

நட்டத்தை காரணம் காட்டி மற்ற பொதுத் துறை நிறுவனங்களை விற்கும் போக்கை போல, வாராக்கடனை காரணம் காட்டி நாளை பொதுத் துறை வங்கிகளும் தனியாருக்குத் தாரை வார்க்கப் படும் சூழலும் ஏற்படலாம். வங்கித் துறையை 100% தனியார் மயமாக்கும் முயற்சிக்கான அடித்தளமாக வங்கி இணைப்புகள் அமையலாம். ரயில்வே துறையையே தனியார் மயமாக்கத் துணிந்து விட்டவர்களுக்கு வங்கிகளை தனியார் மயமாக்கு வதில் மட்டும் என்ன தயக்கம் இருக்கப் போகிறது?

பொதுத்துறை வங்கிகளுக்கு மூடுவிழா காண ஒவ்வொன்றாக இணைத்து வங்கிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதைத் தீவிரப்படுத்தியுள்ளார்கள் என்பதாகத்தான் புரிந்துகொள்ள முடிகிறது.

கட்டுரையாளர் : பெரியாரிஸ்ட் - ஊடகவியலாளர்

பெரியார் பிறந்த நாள் சிந்தனை

# தன்னைப் பற்றி பெரியார்



*காலில் விலங்கோடு திரிந்த சிறுவன் தன் பிற்காலத்தில் சமூகத்தின் விலங்கொடிக்கத் தயாரானார். பெரியார் தன்னைப் பற்றி சுய விமர்சனத்தோடு எழுதிய கட்டுரை.*

---

சுயமரியாதை இயக்கம் என்பதாக ஒரு இயக்கம் 1925இல் என்னால் துவக்கப்பட்டது யாவரும் அறிந்ததேயாகும். அதைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டியவர்களுக்கு அதன் கொள்கை என்ன? அது ஏன் துவக்கப்பட்டது? என்கின்ற விஷயம் முதலில் எடுத்துக்கூற வேண்டியது அவசியமல்லவா? அதற்கு முன் என்னைப் பற்றி சில வார்த்தைகள் சொன்னால் தான் என்னைப் பொறுத்தவரை நான் செய்தது சரியா, தப்பா? என்பது விளங்கும்.

எனக்கு சிறு வயது முதற்கொண்டு ஜாதியோ மதமோ கிடையாது. அதாவது நான் அனுஷ்டிப்பது கிடையாது. ஆனால் நிர்ப்பந்தமுள்ள இடத்தில் போலியாகக் காட்டிக் கொண்டிருந்திருப்பேன். அது போலவே கடவுளைப் பற்றியும் மனதில் ஒரு நம்பிக்கையோ, பயமோ கொண்டிருந்ததும் இல்லை. நான் செய்ய வேண்டுமென்று கருதிய காரியம் எதையும் கடவுள் கோபிப்பாரே என்றோ தண்டிப்பாரே என்றோ கருதி (எந்தக் காரியத்தையும்) செய்யாமல் விட்டிருக்க மாட்டேன். கடவுள் மகிழ்ச்சி யடைவார் என்று கருதியோ, சன்மானமளிப்பாரென்று கருதியோ (எனக்கு அவசியமென்று தோன்றாத) எந்தக் காரியத்தையும் செய்திருக்கவு மாட்டேன்.

எனது வாழ்நாளில் என்றைக்காவது ஜாதி மதத்தையோ, கடவுளையோ உண்மையாக நம்பி இருந்தேனா என்று இன்னும் யோசிக்கிறேன். இதற்கு முன்பும் பல தடவை யோசித்திருக்கிறேன். எப்பொழு திருந்து எனக்கு இவைகளில் நம்பிக்கையில்லை யென்றும் யோசித்து யோசித்துப் பார்த்திருக்கிறேன். கண்டு பிடிக்கமுடியவே இல்லை.

எனது ஆறாவது வயதில் நான் ஒரு திண்ணைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பப்பட்டேன். அப்பள்ளிக் கூடம் ஈரோடு டவுனுக்குச் சற்று விலகிய தூரத்தில் இருந்தது. (இப்போது அது நடு ஊராய் விட்டது) அப்பள்ளிக்கூடத்தைச் சுற்றி வாணியச் செட்டிமார்களின் வீடுகள் உண்டு. எண்ணெய்ச் செக்கு சதா ஆடிக்கொண்டு இருக்கும். மூங்கிலில் பாய், முறம், கூடை பின்னுகின்றவர்கள், தெரு ஓரங்களில் குடிசை கட்டிக்கொண்டு தங்கள் வேலை செய்வார்கள். சில முஸ்லீம்கள் வீடும் குடிசை ரூபமாக அங்கே உண்டு.

ஆகவே அப்பள்ளிக்கூடத்தைச் சூழ்ந்திருந்த மக்கள் வாணியச் செட்டிமார், வேதக்காரர்கள் (கிறுத்தவர்கள்), சாயபுகள் ஆகியவர்கள். அந்த காலத்தில் இவர்கள் வீட்டில் மற்ற ஜாதியார்கள் என்பவர்கள் எவ்வித உணவும் அருந்த மாட்டார்களல்லவா? ஆகையால் என் வீட்டார்கள், நான் பள்ளிக்குப் போகும்போது எனக்கு ஞாபகமாய் சொல்லியனுப்புவார்கள். என்னவென்றால் "அங்குள்ள ஜாதியார், "பொழங்கக்கூடாத" ஜாதிக் காரர்கள். அவர்கள் வீட்டில் தண்ணீர் குடித்துவிடாதே. வேண்டுமானால் வாத்தியார் வீட்டில் வாங்கிக் குடி"யென்று சொல்லியனுப்புவார்கள். அதுபோலவே இரண்டொரு தடவை வாத்தியார் வீட்டில் தண்ணீர் கேட்டேன். வாத்தியார் ஓதுவார் ஜாதி. மாமிசம் சாப்பிடாத சைவர்கள். அவர்கள் வீட்டுச் சிறு பெண்

எனக்குத் தண்ணீர் கொடுக்கும்போது ஒரு வெண்கல டம்ளர் கீழே வைத்து அதில் தண்ணீர் ஊற்றி, எடுத்துத் தூக்கிக் குடிக்கச் சொல்லும். நான் குடித்த பிறகு கவிழ்த்து வைக்கச் சொல்லும். பிறகு அதன் மீது தண்ணீர் ஊற்றி அதை எடுத்து நிமிர்த்தி உள்ளேயும் தண்ணீர் ஊற்றிக் கழுவி உள்ளே எடுத்துக்கொண்டு போகும். இதற்குள் எனக்குத் தூக்கிக் குடிக்கத் தெரியாமல் குடிக்கும்போது பகுதி தண்ணீர் மூக்கிலும் உடல் மேலும் விழும். பகுதி தண்ணீர் தான் வாயில் விழும். மூக்கில் விழுந்த தண்ணீரால் புரைபோய் இருமல் வந்து வாய்த் தண்ணீர் கீழே விழும். இதையெல்லாம் பார்த்து அந்தப் பெண் அசிங்கப்படும். சில சமயம் கோபித்து வையும். அதனால் நான் தாகம் ஏற்பட்டாலும் வாத்தியார் வீட்டில் தண்ணீர் கேட்பதில்லை. வாணியச் செட்டியார் பிள்ளைகள் வாத்தியார் வீட்டில் தாகத்திற்குத் தண்ணீர் கேட்ப தில்லை. எழுந்து நின்று பெரு விரலை வாத்தியாருக்குக் காட்டியவுடன் "போய்விட்டுச் சீக்கிரம் வா" என்பார். பையன் ஓடோடி அவன் வீட்டிலோ, அவனது வீடு சற்று தூரமாய் இருந்தால் சமீபத்தில் உள்ள ஒரு செட்டியார் வீட்டிலோ குடித்து விட்டு ஓடிவருவான். ஒரு நாள் நானும் அங்கு போய்த் தண்ணீர் சாப்பிடலாமென்று கருதி ஒரு செட்டியார் பையன் எழுந்து பெருவிரல் நீட்டும் போது நானும் நீட்டினேன். இருவரையும் போகும்படி வாத்தியார் தலை யாட்டினார். இருவரும் ஓடினோம், வாத்தியார் "ராமா நீ எங்கே ஓடரை?" என்றார். "தண்ணீருக்கு ஐயா!" என்றேன். "தண்ணீக்கு அவன் கூடப் போறாயே?" என்றார். பிறகு நான் வாத்தியார் வீட்டுக்கு (அதாவது ஒரு கூரைச் சாலையில் ஒரு பாகம் நிரைச்சல் கட்டித் தடுத்து அதில் வாத்தியார் குடியிருக்கிறார்) போய் தண்ணீர் குடித்து தண்ணீரை தேகமெல்லாம் சிந்திக் கொண்டு வேஷ்டியையும் நனைத்துக்கொண்டு வந்து உட்கார்ந்து கொண்டேன். அடுத்த நாள் தண்ணீர் தாகமெடுத்த போது ஒரு செட்டியார் பையனுடன் கூடப் போகத் தீர்மானம் பண்ணிக் கொண்டு அந்தப் பையனிடம் பேசிவைத்து அவர் தண்ணீர்குடிக்கப் பெருவிரலைக் காட்டு முன்பே நான் ஒன்றுக்குப் போகக் கேட்பவன் போல் எழுந்து நின்று ஆள்காட்டி விரலை நட்டத்தில் நீட்டிக் காட்டினேன். வாத்தியார் தலையை அசைத்தார். நான் வாத்தியார் வீட்டுக்குப் பின்புறம் போய் நின்று கொண்டேன். செட்டியார் வீட்டுப் பையன் தண்ணீர் குடிக்க அனுமதி கேட்டுக்கொண்டு வந்தான். அவன் வீடும் பின்புறமாய் போகக் கூடியதுதான். அவனும் நானுமாக அந்தச் செட்டியார் வீட்டுக்கு ஓடி லோட்டாவில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். நான் சாதாரணமாக எங்கள் வீட்டில் குடிப்பதுபோல் லோட்டா விளிம்பை உதட்டில் வைத்து குடித்தேன். அந்தச் செட்டியார் வீட்டம்மாள் என்னைப் பார்த்ததும் "நீ நாய்க்கர் வீட்டுத் தம்பியா?" என்றார். நான் "ஆமாம்" என்றேன்.

**காலில் விலங்கு இடப்பட்டேன். அந்த விலங்குகளுடனேயே பிள்ளைகளுடன் கூடித் திரிவேன். ஒரு பதினைந்து நாள் இரண்டு கால்களிலும் விலங்குக்கட்டை போடப்பட்டேன். அப்பொழுதும் இரு தோளிலும் இரண்டு விலங்குகளைச் சுமந்துக்கொண்டு திரிந்தேன்.**

"இங்கே தண்ணீர் குடிக்கிறயே! உங்க வூட்டிலே ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா?" என்றார். "சொல்லமாட்டாங்கோ" என்று சொல்லிவிட்டு ஓடினேன். அந்தப் பையனும் என்கூட ஓடிவந்தான். அதற்குள் அந்தம்மாள் அந்தப் பையனைக் கூப்பிட்டு "டே பழனியப்பா அந்தச் சொம்பைக் கழுவி உள்ளே வைத்துவிட்டுப் போடா" என்றார்.

அதேமாதிரி அந்தப் பையன் லோட்டாவைக் கழுவி வைத்துவிட்டு வீதி வழியாக முன்புறம் பள்ளிக் கூடத்திற்கு வந்தான். நான் போன வழியிலேயே பின் புறமாக பள்ளிக்கூடத்திற்கு வந்தேன். பிறகு இப்படியே -இதே மாதிரியாக மற்றொரு சமயம் வேதக்காரன் வீட்டில் தண்ணீர் சாப்பிட்டேன். இது மெல்ல மெல்ல அவர்கள் வீட்டுப் பலகாரங்களும், பிறகு அவர்கள் வீட்டில் விசேஷ காலங்களில் செய்யப்படும் காய்கறி சாமான்களும் கூடச் சாப்பிடும்படியாகச் செய்து விட்டது. எங்கள் வீட்டுக்கு இந்தச் செய்தி எட்டியது. வீடோ நல்ல பணம் வருவாய் ஏற்பட்டு பணம் பெருகி அப்பொழுதுதான் பார்ப்பனர்களைப்போல் நடக்க ஆரம்பித்திருந்த காலம். எந்நேரம் பார்த்தாலும் ஆச்சாரம், அனுஷ்டானம் என்கின்ற வார்த்தைகள் தான் உச்சரிக்கப்படும். என்றாலும் என் தகப்பனாருக்கு இதைப்பற்றி (நான் கண்ட இடத்தில் சாப்பிடுவதைப் பற்றி) அதிகமான கவலை கிடையாது. "சீச்சி இனி அப்படிச் செய்யாதே" என்று சொல்லி விடுவதோடு அவர் வேலை ஒழிந்துவிடும். என் தாயார் ஏதோ முழுகி விட்டது போல் கருதி மிக துயரப்படுவார். என்ன பண்ணியும் காரியம் மிஞ்சிவிட்டது. சாயபுமார் பையன் கொடுத்த பண்டம் கூடச் சாப்பிட்டு விட்டேன் என்பது என் வீட்டிற்கு தெரிந்து விட்டது. இதற்குள் என் பள்ளிப்படிப்பு எனது பத்தாவது வருஷத்திற் குள்ளாகவே முடிந்து விட்டது. ஏனென்றால் என் சினேகம் தின்னாத (பொழங்கக்கூடாத) ஜாதியாருடன் தான் அதிகம், அதனாலே நான் முரடனாகிவிட்டேன் என்பது அவர்கள் எண்ணம். காலில் விலங்கு இடப் பட்டேன். அந்த விலங்குகளுடனேயே அந்தப் பிள்ளை களுடன் கூடித் திரிவேன். ஒரு பதினைந்து நாள் இரண்டு கால்களிலும் விலங்குக்கட்டை போடப் பட்டேன். அப்பொழுதும் இரு தோளிலும் இரண்டு விலங்குகளைச் சுமந்துக்கொண்டு திரிந்தேன். அப்போதும் அந்தப் பிள்ளைகளுடன் விளையாடப் போய்விடுவேன்.

கடைசியாக நான் அப்பள்ளிக்குப் போவது நிறுத்தப்பட்டு சர்க்கார் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப் பட்டேன். அதாவது முனிசிபல் பிரைமரி பள்ளிக் கூடத்துக்கு அதுவும் 2-ஆவதிலேயே, (10, 12வது வருஷத்திலேயே) நிறுத்தப்பட்டு எங்கள் கடையிலேயே வியாபாரத்தில் போடப்பட்டு விட்டேன். அதில் எனக்குள்ள வேலை, மூட்டைகளுக்கு விலாசம் போடுவது, சரக்குகள் ஏலங்கூறுவது, ஒழிந்த நேரங்களில் என் சொந்த வேலையாம் புராணங்களைப் பற்றி விவகாரம் செய்வது. இந்த வேலை எப்படி ஏற்பட்டதென்றால் எங்கள் வீட்டில் சந்நியாசி களுக்கும், பாகவதர்களுக்கும், சமயப் பிச்சைக்காரர் களுக்கும் (பார்ப்பனர்களுக்கும்) வித்துவான்களுக்கும் ரொம்பவும் செல்வாக்கு இருந்ததினாலும் அவர்களைக் கண்டு எனக்குப் பிடிக்காததாலும், அவர்கள் சொல்வதைப் பரிகாசம் செய்ய ஆரம்பித்து மறுத்துச் சொல்ல ஆரம்பித்து "விதண்டாவாத"க் கேள்விகள் கேட்க ஆரம்பித்து மெல்லமெல்ல அதுவே ஒழிந்த நேரவேலையாகவும் அதுவே இளைப்பாறுவதற்கு ஒரு துணைக் கருவியாகவும் எனக்கு உண்மையிலேயே உற்சாகமுள்ள வேலையாகவும் நேர்ந்துவிட்டது. நான் புராணங்களையோ வேறு எந்தத் தனிப்பட்ட புஸ்தகங்களையோ படித்த தில்லையென்றாலும் சைவம், வைணவம் ஆகிய இரு சமய சம்மந்தமாக உள்ள கதைகளோ, சரித்திரங்களோ சதா சர்வ காலம் எங்கள் வீட்டில் இரு சமய "பக்தர்"களாலும் பண்டிதர்களாலும், காலட்சேபம் செய்யப்பட்டு வந்தது. ஏன்? பணம் வந்து குவியும்போது தர்மம் செய்து தர்மப் பிரபு பட்டம் வாங்க வேண்டாமா? இவர்களைத்தானே தான பாத்திரங்களாகப் பேசப்படும். ஆதலால் இவர்கள் எங்கள் வீட்டில் குவிந்து கிடப்பார்கள். என் தாயார் இவர்கள் அளப்புகளை அதிக "பக்தி சிரத்தை"யுடன் கேட்டுக் கொண்டேயிருப்பார். தகப்பனாருக்கு இது ஒரு பெருமையாகவும் திருப்தியாகவும் இருக்கும். இதனால் எனக்கு சமய சம்மந்தமான புராண சம்மந்தமான விஷயங்கள் தானாகவே தெரியவரும். அவற்றிலிருந்தே நான் பல கேள்விகள் கேட்கவும் அவர்கள் (பக்தர்கள், பண்டிதர்கள்) பல கேள்விகளுக்கு பதில் தாறுமாறாக வும் ஆளுக்கு ஒரு விதமாகவும் சொல்லவுமாய் இருந்ததே எனக்கு அதிக உற்சாகத்தை விளைவித்த தோடு என்னை ஒரு "கெட்டிக்காரப் பேச்சுக்காரன்" என்று அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் சொல்லவுமான நிலைமை ஏற்பட்டது. என் தகப்பனார், நான் இப்படி "விதண்டாவாதமான" கேள்வி கேட்பதில் கோபம் வந்தாலும் உள்ளுக்குள் தனது மகன் இப்படி புத்தியாய் பேசுகிறானே என்கிற மகிழ்ச்சி உண்டு.

இந்தச் சம்பவங்கள் தான் எனக்கு மேலும் மேலும் ஜாதி மதத்திலும், கடவுள் சாஸ்திரங்கள் ஆகியவைகளிடத்திலும் நம்பிக்கையில்லாமல் போகும்படி செய்திருக்கலாமென்று நினைக்கிறேன்.

ஆனால் சுற்றுச்சார்புதான் ஒரு மனிதனின் வாழ்க்கை லட்சியம், கொள்கை ஆகியவைகளுக்குக் காரணமானது என்று சொல்லப்படுகிறது. அனுபவத் தில் பெரிதும் அப்படித்தான் இருந்தும் வருகிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரை ஒரு துறையிலாவது சுற்றுச்சார்பு என்னை அடிமைப்படுத்தியதாகச் சொல்லுவதற்கு இடமே கிடைக்கவில்லை. நான் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு தன்மையிலும் என்னைச் சுற்றி இருந்த சுற்றுச்சார்பு சகவாசம் ஆகியவைகளுக்கு மாறாகவே இருந்து வந்திருக்கிறேன்.

உதாரணமாக எனது நல்ல வாலிபப் பருவத்தில் 20 முதல் 32 வயது வரையில் சகபாடிகள் ஏறக்குறைய அந்தரங்க சகபாடிகள் எல்லோரும் மதுவருந்துபவர் களாவார்கள். அது மாத்திரமா? என்னிடத்தில் அதிக காதல் உள்ள சர்க்கார் அதிகாரிகள் ஜமீன், மிராசுதாரர்கள் ஆகியவர்களும் மதுவருந்துபவர்கள். மேல் கண்ட வயதில் அநேகமாக இரவெல்லாம் இந்த கூட்டத்தாருடனே கோலாகலமாய் இருந்து, காலை 6 மணிக்கு வீட்டுக்கு வந்து கொத்துச்சாவியை எடுத்துக் கொண்டு கடைதிறக்கப் போய்விடுவேன். ஒரு ராத்திரிக்கு 4 பாட்டல் 5 பாட்டல் (பிராந்தி) உடைபடும். எனக்கும் மாதத்தில் இந்தச்செலவு சுமார் 40, 50 ரூபாய் ஆகும். நானே என் கையால் டம்ளரில் ஊற்றி சோடா கலந்து கொடுப்பேன். சிலர் குடித்து விட்டு போதையில் என்மீது துப்புவார்கள். ஒரு காலத் தில் ஒரு டிப்டி கலெக்டரும் சால்ட் அசிஸ்டெண்ட் கமிஷனரும் நான் ஊற்றிக் கொடுத்ததையே சாப்பிட்டுவிட்டு என்னைப் பிடித்துக் கீழே தள்ளி என் வாயில் பலவந்தமாக ஊற்றினார்கள். அப்படியெல்லாம் இருந்தும் என்னை அந்த சகவாசமும் சுற்றுச்சார்பும் அது (மது அருந்தினால்) எப்படி இருக்கும் என்று யோசிக்கக்கூடத் தூண்டவில்லை. என் மனைவி யாருக்கு என் மீது அடிக்கடி சந்தேகம் தோன்றும். இம்மாதிரி கூட்டத்தில் இருந்து வீட்டுக்குப்போன உடன் என் வாயை ஊதிக்காட்டச் சொல்லுவார்கள். நான் கிராக்கி செய்வேன். கட்டாயத்தில் வாயை மோந்து பார்த்து திருப்தி அடைவார்கள்.

இதை எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால் சுற்றுச்சார்பு எதுவும் என்னை வசப்படுத்திக் கொள்ள வில்லை என்பதற்கு ஆகவேயாகும். இனியும் அம்மாதிரியான சம்பவங்களே அதிகப்படியாய்க் காணப்படு கின்றன. அது என்ன காரணம் என்பது எனக்கு விளங்கவில்லை.

இது இப்படியிருக்க, நான் இந்தக் கூட்டத்தில் இப்படிப்பட்ட கேளிக்கையில் இருந்து கொண்டே எனது வர்த்தகத் தொழிலில் நான் ஒரு அளவுக்கு வெற்றி பெற்றேன். எனது தகப்பனார் நம்பிக்கைக்குப் பாத்திரனானேன். என் தகப்பனார் இருக்கும்போது எங்கள் வியாபாரத்திற்கு தன் பெயரை எடுத்துவிட்டு

**சுயமரியாதை இயக்கத்திற்குத்தான் சுதந்திர உணர்ச்சி தோன்றும் - சுதந்திரம் தேவைப்படும்; சுதந்திரத்திற்குச் சுயமரியாதை தேவைப்படாது.**

என் பெயர் கொடுக்கப்பட்டு விட்டது. ஊர்ப் பெருமை விஷயங்களிலும் என் தகப்பனார் ஒவ்வொன்றிலும் இருந்து விலகிக்கொண்டு என்னையே தள்ளிவிட்டார்.

எங்கள் ஊர்ப் பொதுக்கோவில்கள், சர்க்கார் தேவஸ்தான சம்மந்தமான காரியங்கள் பெரிதும் எங்கள் வீட்டுச் சொந்தக்காரியம் போலவே நடைபெறும். ஆதலால் அவற்றிற்கு என்னையே முதன்மை யாக்கிவிட்டார்கள். ஒரு சமயம் இதனால் எனக்கு கடவுள் பக்தி ஏற்படலாம் என்கின்ற எண்ணமோ என்னமோ தேவஸ்தானக் கமிட்டி காரியதரிசியாகவும், தலைவனாகவும் ஆக்கப்பட்டு விட்டேன்.

இப்படியெல்லாம் இருந்தும் ஏற்றுக்கொண்ட காரியத்தைச் சரியாய் உண்மையாய்ச் செய்வதென்ப தல்லாமல் அநேக காரியங்களில் எனக்குப் பிடிவாதமான நம்பிக்கையென்பதே ஏற்பட்டது கிடையாது. எப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத காரியத்தை ஏற்றுக்கொண்டாலும் நாணயமாகவும் அதிக கவலையாகவுமே செய்து வருவேன்.

நிற்க, ஜாதி மதக் கொடுமை ஒழிக்கப்பட வேண்டுமென்பதிலும் கடவுள் என்ற மூட நம்பிக்கை ஒழிக்கப்பட வேண்டுமென்பதிலும் மாத்திரம் எனக்கு உண்மையான நம்பிக்கையும் உணர்ச்சியுள்ள சிரத்தையும் உண்டு. அதுவும் நான் தான் செய்ய வேண்டுமென்றோ, அதற்காகத்தான் இருக்கிறேன் என்றோ கருதுவது இல்லை.

என்ன காரணத்தாலோ நாம் சவுக்கியமாக உயிர் வாழ்கின்றோம். எப்படியோ உயிர் வாழ்வுக்கு மற்ற எவருடைய தயவையும் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லாத நிலைமையில் இருந்து வருகின்றோம். மனிதனுக்கு இந்த இரண்டு காரியந்தான் மேலான சம்பத்து (செல்வம்) ஆகும். அதாவது உழைக்க உறுதியும் ஆசையும் - அதாவது சோம்பேறித்தனமும் களுப்பிணித்தனமும் இல்லாத, திடம் உள்ள சரீரமும் தனது வாழ்வில் எந்தத் துறைக்கும் மற்றவர்களை எதிர்பார்க்கவோ, தனக்குச் சரியென்று தோன்றிய அபிப்பிராயங்களை முடிவுகளை தனது வாழ்க்கைக் காக வாழ்க்கை நலத்துக்காக மற்றவர்களின் தயவுக்காக மாற்றிக் கொள்ளவோ வேண்டிய அவசியமில்லாத - சாகும் வரை சுதந்திர உணர்ச்சியுடன் இருக்கத் தகுந்த விலை எதுவோ அதுவே மேல் கண்ட உயர்ந்த சம்பத்தாகும். அப்படிப்பட்ட நிலையில் நான் இருப்பதால் (இருக்கிறதாக நான் நினைத்துக் கொண்டிருப்பதால்) அந்த நிலையை பாழாக்குவதற்கு இஷ்டமில்லாமல் பயனுள்ள வேலையென்று எதைக் கருதுகின்றேனோ அதைச் செய்கிறேன் என்பதல்லா மல் வேறு எவ்விதப் பிடிவாதமும் எனக்குக் கிடையாது.

நாளை நான் சாகும்போது எனக்கு உணர்வு இருந்தால் நிம்மதியாகத்தான் சாவேனே ஒழிய ஒரு குறையும் இருப்பதாக நான் கருதமாட்டேன். எதையும் நான் குறையாய் விட்டு விட்டுப் போகிறேன் என்று அதிருப்திப் படமாட்டேன். நான் ஜீவனோடிருப்பதால் அதற்கு ஒரு வேலை இருந்து தானே ஆகவேண்டும்? ஏதாவது ஒரு வேலையில்லாமல் உயிர்வாழ முடியாதே என்று கருதி ஏதோ ஒரு வேலை என்பதில் இதை அதாவது ஜாதி, மதமென்ற கொடுமை ஒழிவதும், கடவுள் என்ற மூடநம்பிக்கை ஒழிவதும் மனித சமூகத்திற்கு நன்மையானது என்கின்ற கருத்தில் அதற்காக என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறேனோ அந்த வேலையைச் செய்கிறேன். இந்த உணர்ச்சி வலுத்துத்தான் அதே முக்கியமானதும், முடிவானதுமான வேலையென்று இறங்கி விட்டேன். இந்த எண்ணத்தின் மீதே சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தேன். இந்த எண்ணம் கைகூடினால் மனித சமூகத்தில் உள்ள போராட்டங்கள் மறைந்து விடும். தனிப்பட்ட மனிதர்களுக்குள்ள குறைகள் நீங்கிவிடும்; தனக்கு என்கின்ற பற்றும் ஒழிந்துவிடும். உற்சாகத்துக்காக வேண்டுமானால் போராட்டங்களும் குறைகளும் அதிருப்திகளும் கவலைகளும் இருக்கலாம். அதாவது பண்டிகைக்காக ஓய்வெடுத்துக்கொண்ட மக்கள் பலர் கூடி சதுரங்கமோ, சீட்டாட்டமோ விளையாடும்போது யோசனைகள், கவலைகள், அதிருப்திகள் காணப்படுவதுபோல் இயற்கையின் ஆதிக்கத்தால் நமது வாழ்வுக்கு அவசியமில்லாததும் பாதிக்காததுமான யோசனை, கவலைகள் முதலியன காணப்படலாம். இவை எந்த மனிதனுக்கும் மனிதனல்லாத மற்ற எந்த ஜீவனுக்கும் உயிருள்ளவரை இருந்து தான் தீரும். “சரீரமில்லாத ஆத்மாவுக்கும் கண்ணுக்குத் தெரியாத சூட்சம சரீரத்திற்கும்” கூட “மோட்சமும்” “முக்தியும்” கற்பித்திருப்பதில் ஜீவனுக்கு வேலை யில்லாமலும் அநுபவமில்லாமலும் மோடசம் - முக்தி கற்பிக்க முடியவில்லை. ஆதலால் ஏதாவது ஒரு வேலை செய்ய வேண்டி இருந்து தீர வேண்டியதை உத்தேசித்து இந்த வேலையை நான் மேற்கொண்டேன்.

### நிஷ்காமிய கர்மம் யாது?

இதைத்தான் நிஷ்காமிய கர்மம் என்று சொல்லலாம். மற்றபடி காமிய கர்மத்துக்குப் பலன் இல்லையென்றும் சொல்லலாம். நிஷ்காமிய கர்மத்துக்குத்தான் பலன் உண்டு என்றும் சொல்லப் படுவது முன்னுக்குப் பின் முரணான கருத்தேயாகும்.

எப்படியெனில் நிஷ்காமிய கர்மமென்பதை அதாவது பயனை எதிர் பார்க்காத காரியத்தை ஒரு மனிதன் ஏன் செய்ய வேண்டும்? நிஷ்காமியமாய்ச் செய்தால்தான் பலன் உண்டு என்றதாலேயே "ஒரு பலன் ஏற்பட வேண்டும்" என்பதற்காக வேண்டி செய்வது என்பது அருத்தமாகிறது அல்லவா? ஒரு மனிதன் ஒரு பலனை எதிர்பார்த்து காரியம் செய்கிறது என்பதில் எப்படிப் பட்ட காரியமானாலும் அதன் கவலை அவனைப் பிடித்துத்தான் தீரும். ஆனால் உண்மையிலேயே நாம் ஜீவனுள்ள வரையில் ஏதாவது ஒரு காரியம் செய்ய வேண்டுமே என்பதற்காக அதுவும் அந்த வேலையைத் தெரிந்தெடுக்க நமக்குச் சரியாகவோ, தப்பாகவோ உரிமையிருக்கிறது என்பதாகவே, இந்த வேலை சுயமரியாதை இயக்க வேலை செய்து வருகிறேன். ஆனால் இந்த வேலை நமக்கு எப்போதாவது ஏமாற்றத்தைக் கொடுத்து சலிப்பாக வேலை செய்யச் செய்யவில்லை; உற்சாகத்தையே ஊட்டி வருகிறது.

**சுயமரியாதை தத்துவம்**

சுயமரியாதை இயக்கத்தின் தத்துவம் உலகம் ஒப்புக் கொண்டதே யாகும். என்னவென்றால் காரணகாரிய தத்துவ உணர்ச்சியையும் காரண காரிய விசாரணையையும் உலகம் ஏற்றுக்கொண்டுவிட்டது. மனித வாழ்வின் ஒவ்வொரு எண்ணத்திற்கும் தோற்றத் திற்கும் காரண காரியத்தை மனித ஜீவன் தேடுகின்றது. இயற்கையையே ஆராயத் தலைப்பட்டாய் விட்டது. விபரம் தெரியாத வாழ்வை அடிமை வாழ்வு என்று கருதுகிறது. சுயமரியாதை இயக்கத்தின் தத்துவமே அதுதான். எந்தக் காரியமானாலும் காரண காரியமறிந்து செய்; சரியா, தப்பா என்பதை அந்த காரண காரிய அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் விட்டு விடு; எந்த நிர்ப்பந்த சமயத்திலும் அதன் முடிவுக்கு மரியாதை கொடு என்கின்றது. அதுதான் சுயமரியாதை. மனிதன் சரியென்று கருதிய எண்ணங்களுக்கும் முடிவு களுக்கும் மரியாதை கொடுப்பதுதான் சுதந்திரமாகும். சுதந்திரத்திற்கும் சுயமரியாதைக்கும் அதிக தூரமில்லை.

**சுயமரியாதையே சுதந்திரம்**

இன்றைய சுதந்திரவாதிகள் சுதந்திரத்திற்காகச் சுயமரியாதையை அலட்சியம் செய்கிறார்கள். அதாவது அடிமை தேசத்தில் சுயமரியாதைக்கு இடம் ஏது என்கிறார்கள். இது உண்மையிலே மூடவாதம் என்று சொல்லுவோம். சுயமரியாதை அற்றவர்களுக்கு சுயமரியாதை இல்லாதவர்களுக்கு சுதந்திரமேது என்பதுதான் சரியான வார்த்தையாகும்.

சுயமரியாதை இயக்கத்திற்குத்தான் சுதந்திர உணர்ச்சி தோன்றும் சுதந்திரம் தேவைப்படும்; சுதந்திரத்திற்குச் சுயமரியாதை தேவைப்படாது. சுயமரியாதைக்காரனின் சுதந்திரம் எல்லாவற்றிலும்

**நாளை நான் சாகும்போது எனக்கு உணர்வு இருந்தால் நிம்மதியாகத்தான் சாவேனே ஒழிய ஒரு குறையும் இருப்பதாக நான் கருதமாட்டேன். எதையும் நான் குறையாய் விட்டு விட்டுப் போகிறேன் என்று அதிருப்திப் படமாட்டேன்.**

சுதந்திரம் இருக்கத் தக்கதாய் இருக்குமென்றும் சுதந்திரக்காரனின் சுதந்திரமோ அவனுக்கே புரியாது; புரிந்தாலும் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பொருத்ததாக மாத்திரம் இருக்கும்.

உதாரணமாக இன்று அரசியல் சுதந்திரத்தை எடுத்துக் கொள்ளுவோம். இன்று அரசியல் உலகில் இருவர் பெயர் அடிபடுகின்றது. ஒன்று தோழர் காந்தியார் பெயர், மற்றொன்று தோழர் ஜவஹர்லால் பெயர். முந்தியவர் இந்தியாவில் உலக அனுபவமுள்ள சோம்பல் கூட்டத்தார், மத உணர்ச்சியாளர் (மூட நம்பிக்கைகாரர்கள்) பழமை விரும்பிகள் ஆகியவர்களது உலகில் மதிக்கப்படுகிறவர். அவரது சுதந்திரம் என்பதெல்லாம் பழமையை அனுபவிக்கச் சுதந்திரம் வேண்டுமென்பதே. பிந்தியவர் உலக அனுபவமற்ற உற்சாகக்கார புதுமை விரும்பிகள் உலகத்தில் மதிக்கப்படுகிறவர் என்பதோடு குறிப்பற்று ஏதாவதொரு மாறுதல் வேண்டுமென்பவர். இந்த இரண்டு பேருக்கும் தெளிவான ஞானம் கிடையாது என்றே சொல்லலாம். ஏனெனில் சுதந்திரத்தின் யோக்கியதையே சுதந்திரம் விரும்புகின்றவர்களின் தன்மையே அவ்வளவுதான். எப்படியெனில் இருவர் கோரும் சுதந்திரம் இன்று உலகில் எந்தப் பாகத்தில் இருப்பதாக வைத்துக்கொண்டாலும் அங்கெல்லாம் ஏறக்குறைய முழு மக்களும் சுயமரியாதை இல்லாமல் இருப்பதைக் காணலாம்.

காந்தியார் இந்து மதம் புனருத்தாரணம் ஆவதும் பழைய முறைகள் உயிர்ப்பிக்கப்படுவதும் சுதந்திரம் என்கிறார். ஜவஹர்லால் பண்டிதர் இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபடுவது சுதந்திரம் என்கிறார். இவர்கள் இருவரும் கோரும் சுதந்திரங்களில் எது வந்ததானாலும் அல்லது இரண்டும் வந்து விட்டாலும் மனித சமூக வாழ்க்கையில் உள்ள துன்பங்களில் எது ஒழிக்கப்பட்டுவிடும் என்று ஆராய்ந்து பார்த்தால் சுதந்திரம் சுயமரியாதை அளிக்காது என்பது விளங்கும். எவ்வளவு சுதந்திரம் ஏற்பட்டாலும் சுயமரியாதைக்குத் தேவை இருந்து கொண்டுதான் இருக்கும்.

முழு சுயராஜ்யமுள்ள பிரிட்டிஷ் தேசத்தில் குடிகளுக்கு ஏன்? ராஜாவுக்கே தன் இஷ்டப்படி கல்யாணம் செய்துகொள்ள சுதந்திரம் இல்லாமல்

ராஜ்யத்தை துறக்க வேண்டியதாகிவிட்டது என்றால் - அதுவும் ஜனப்பிரதிநிதிகளால் அதுவும் பொது ஜனங்களுடைய விருப்பம், ஆமோதிப்பு என்பவைகளின் பேரால் என்றால் ஜவஹர்லால் சுயராஜ்யத்தில் காந்தியார் சுதந்திரத்தில் மனிதனுக்கு கடுகளவாவது சுயமரியாதை இருக்க இடமுண்டா என்று கேட்கின்றோம்.

### சுயமரியாதையின் பெருமை

அப்படிக்கில்லாமல் சுயமரியாதை பெற்ற (சுயமரியாதைக்குப் பிறந்த) சுதந்திரமாய் இருந்தால் "காதலுக்கு" பிரிட்டிஷ் அரசுக்கு ஏற்பட்டது போல் விலங்கு இருக்குமா? என்று கேட்கிறேன். சுயமரியாதை என்பது என்போன்ற சாதாரண மனிதனால் கையாளப் பட்டதனால் அதன் பெருமை விளங்காமல் போய் விட்டது என்று சொல்லலாமே தவிர அதற்கு நிகர் உலகில் மனிதனுக்கு உயிரைத் தவிர வேறு ஒன்றுமே இல்லையென்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தப் பத்து வருஷகாலமாய் தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கம் தோன்றி வெகு சாதாரண முறையில் எவ்வளவோ எதிர்ப்புக் கிடையில் நேரப் போக்குப் பிரசாரமாக நடந்து வந்திருந்தபோதிலும் அதற்கு எத்தனையோ இடையூறுகள் பல கூட்டங்களில் இருந்து ஏன்? சுயமரியாதைக் கூட்டத்தில் இருந்தவர்களுக்குள் இருந்து கூட ஏற்பட்டு இருந்தாலும் ஒரு குடம் பாலுக்கு ஒரு சொட்டு விஷம் என்பதுபோல் தமிழ்நாடு, மலையாள நாடு, ஆந்திர நாடு ஆகியவைகளை சமுதாய இயலில் ஒரு கலக்குக்கலக்கி விட்டிருக்கிறது. மத இயலிலும் மகா பண்டிதர்கள் ஞானிகள், ஆச்சாரியார்கள் என்பவர்களையெல்லாம் மாறிக்கொள்ளச் செய்திருக்கிறது. தோழர் காந்தியாரையே பல கரணங்கள் போடச் செய்து விட்டது.

பெண்கள் உலகில் உண்மையான சுதந்திர வேட்கையைக் கிளப்பி விட்டு விட்டது. கீழ் ஜாதி மேல் ஜாதி யென்பவைகள் ஒடுவதற்கு ஓட்டத்தில் ஒன்றுக்கொன்று பந்தயம் போடுகின்றன. கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் பைபிளுக்கும் குர் ஆனுக்கும் புதிய வியாக்கியானங்கள் செய்யத் தலைப்பட்டு விட்டனர். தோழர் காந்தியாரோ அல்லது காங்கிரஸ் தொல்லையோ இல்லாமல் இருந்திருக்குமானால் இந்தியா பூராவையும் சுயமரியாதை இயக்கம் இன்னும் அதிகமாய் கலக்கி இருக்கும் என்பதோடு பார்ப்பனீயம் மாண்டு இருக்கும் என்றே சொல்லலாம்.

சுயமரியாதை இயக்கம் காந்தியாரை ஒரு அளவுக்கு மூலையில் உட்கார வைத்துவிட்டது என்றாலும் பார்ப்பனீயம் வேறு ஆட்களைப் பிடித்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முன்வந்து விட்டது. ஆனபோதிலும் காந்தீயம் பட்டு மாய்ந்து விட்டது என்பதில் சந்தேகமில்லை. அந்தப் பெருமை சுயமரியாதை இயக்கத்துக்கே உண்டு.

இனி இரண்டு மாதம் சென்றவுடனே ஜவஹர்லாலை சுயமரியாதை இயக்கம் மூலையில் உட்கார வைக்க முழு மூச்சில் முனையப் போகின்றது. சுயமரியாதை இயக்கம் இதுவரை செய்து வந்த பிரசாரத்துக்கு மேலாக, கேரள ஆந்திர கர்நாடக தேசம் மாத்திரமல்லாமல் இந்தியா முழுமைக்கும் பிரசாரம் செய்யப் போகின்றது. அது தனது பழைய வாலிபர்கள் பெரும் பாலோர் வாழ்க்கைப் பருவம் அடைந்து விட்டதால் புதிய வாலிபர்களைச் சேகரித்துக்கொண்டு வருகிறது. ஏராளமான வாலிபர்கள் இருக்கிறார்கள். எனக்கு ஒரு சமயம் "குறை" ஏற்பட்டாலும் சுயமரியாதைக்கு குறை ஏற்படாது.

வாலிபர்களே தயாராய் இருங்கள்!

(இக்கட்டுரை "நவமணி" ஆண்டு மலருக்காக பெரியார் எழுதியது) (18.7.1937)

**பெரியார் பிறந்த நாள் சிந்தனை**



# "காமராசருக்கு எதிர்ப்பில்லாத நிலையை நாம்தான் உருவாக்கினோம்"

நான் இப்புவியில் 85 ஆண்டுகள் வாழ்ந்து 86-வது ஆண்டில் புகுகிறேன்.

இந்த நாட்டில் மக்கள் வாழும் சராசரி வயது 10 ஆண்டுகளுக்கு முன் 32 வயதாக இருந்து, இன்று 48 வயதாக மாறியுள்ள இக்காலத்தில் ஒரு மனிதன் 85 ஆண்டு வாழ்ந்து, அதுவும் ஓய்வு என்பதை அறியாத தொண்டும், சுகம் என்பதை அறியாத வாழ்வும், கிடைத்ததைத் தின்று கொண்டு, வாய்த்த இடத்தில் தூங்கிக் கொண்டு திரிந்த நான் 85 ஆண்டு வாழ்ந்து விட்டேன் என்றால் என் ஆயுளைப்பற்றி நான் பாராட்டிக் கொள்ள வேண்டாமா ?

என்ன செய்து சாதித்துவிட்டாய்? என்று நீங்கள் கேட்கலாம். அதற்குப் பதில் நீங்களே (வாசகர்கள்) தான் தேடிப்பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஓய்வு ஒழிச்சல் இன்றி, சோம்பல் கழிப்பிணித் தனமின்றி உழைத்தேன். திருட்டு, புரட்டு, மோசடி இன்றி வெள்ளையாய் நடந்து கொண்டேன். என் நடத்தையில் பல தவறுகள், தகாத காரியங்கள் ஏற்பட்டு இருக்கலாம். என்னையே நீதிபதியாகக் கொண்டு எனக்கு சரி என்று பட்டதையும் தேவை என்று பட்டதையும் செய்தேன். அதுவும் ஒளிவு மறைவு இல்லாமல் செய்து வந்தேன்.

வாழ்வில், செயலில் பல ஏமாற்றம் அடைந்து இருக்கலாம். ஆனாலும் அதையே ஒரு படிப்பினை யாகக் கொண்டு முயற்சியில் சளைக்காமல் நடந்து கொண்டு தான் வருகிறேன்.

நான் ஒரு அநாமதேய வாழ்வு வாழவில்லை என்பதும், அநாவசியமான மனிதனாய் இருந்து வரவில்லை என்பதும் எனக்கு ஒரு ஆறுதல் தரத்தக்க விஷயமாக இருந்து வந்தது.

இப்படிப்பட்ட எனது வாழ்நாள் பற்றிய விளக்கம் என்னவென்றால் 1964 செப்டம்பர் 17-ந் தேதி வியாழக்கிழமைக்கு சரியான குரோதி வருஷம் புரட்டாசி மாதம் 1-ந் தேதிக்கு எனக்கு 85 வயது முடிகிறதென்றால் அது நான் பிறந்து ஓராயிரத்து இருபது (1020) மாதங்கள் ஆகிறதுடன், நான் பிறந்து இன்றைக்கு (17-9-1964-க்கு) முப்பத்தி ஓராயிரத்து நாற்பத் தேழு நாட்கள் வாழ்ந்துவிட்டேன் என்று ஆகிறது.

மற்றும் நான் (1034) ஓராயித்து முப்பத்தி நான்கு அமாவாசையையும், 1034 பவுணர்மியையும்,1034 பிறையையும் கண்டுவிட்டேன் என்று ஆகிறது. "ஆயிரம் பிறை கண்டவன் முழுஆயுள் வாழ்ந்தவனா வான்" என்று சொல்லுவார்கள். அதுபோல் முழு வாழ் நாள் வாழ்ந்துவிட்டேன். எனவே கிரமப்படி பார்த்தால் உங்களிடம் நாண் பயணம் சொல்லிக் கொள்ள வேண்டியதுதான் எனது நேர்மையான கடமை.

அதற்கேற்ப எனக்கு புத்திக்கோளாறு ஒன்றும் இல்லை என்று நான் கருதினாலும், ஞாபகக் கோளாறு அதிகமாகிவிட்டது. பேசப்பேச பேச்சுத் தொடர் மறந்து போகிறது, வெகு கெட்டிக்காரத்தனமாய் சமாளித்துக் கொள்ளுகிறேன். காது 100க்கு 40 சதவிகிதம் (செவிடு) சப்தம் கேட்பதில்லை. கண்கள் கண்ணாடி போட்டாலும் 10 அல்லது 20 வரி (அதுவும் பைக்கா-12 பாயிண்ட் எழுத்து)க்கு மேல் படிக்க முடிவ தில்லை. கண்களில் கண்ணீர் வந்து மறைத்துவிடுகிறது. நடை 10 எட்டு, அதாவது 15 அடி தூரத்துக்கு மேல் நடந்தால் நெஞ்சுத்துடிப்பு அதிகமாகி களைப்பு வந்துவிடுகிறது. அதுவும் துணை பிடிப்பு இல்லாமல் நடக்க முடிவதில்லை. ஹெர்ணியா என்னும் நோய் ( குடல் வாதம்) இருப்பதில் உட்கார்ந்திருக்கும் போது ஒரு இளநீர் அளவு பரிமாணம் குடல் இறங்கி சிறு வலி கொடுத்துக் கொண்டே இருக்கிறது. நின்றால் ஃபுட்பால் (உதை பந்து) அளவுக்கு பெருகி பெருவலி கொடுக்கிறது.

இந்தக் காரணங்களால் நானே என்னை கண்டெம்டுமேன்-வேலைக்குப் பயன்படமுடியாத தள்ளப்பட்ட மனிதன் - என்றே கருதி வாழ்ந்து வருகிறேன். இவ்வளவு குறைபாடுகளும் இயலாமை யும் இருந்தும் மக்கள் என்னிடம் வைத்து இருக்கும் அன்பும், மரியாதையும் ஜன்னி வந்தவனுக்கு ஏற்படும் பலம் சகிப்புத்தன்மை போல் எந்நிலை அறியாத அளவுக்கு வேலைகளையும், பொறுப்புக்களையும் நானாக மேற்போட்டுக் கொண்டு தொந்தரவடைந்து வருகிறேன். இந்த இப்படிப்பட்ட தொந்தரவுகளால் நான் அவஸ்தைப்படாமல் இருக்கத்தக்க வண்ணம், நோய் தெரியாமல் இருப்பதற்கு, டாக்டர்கள் குளோரஃபார்ம் (மயக்க மருந்து) கொடுப்பது போல் , பணம், பண்டம் (ரூபாய்) தாராளமாய்க் கொடுத்து உற்சாகப்படுத்தி விடுகிறார்கள்.

ஆதலாலேயே உடல்நிலையைப் பற்றி சிறிதும் சிந்திக்காமல் தொண்டாற்றி வர முடிகிறது என்று சொல்லுவேன். நல்ல அளவுக்கு, என் தகுதிக்கு ஏற்ப பணம் தேடிவிட்டேன். அதுவும் யாரையும் ஒரு காசு அளவுகூட தயவாய்க் கேட்காமல் வேண்டுகோள் விடுவதும், கட்டளை இடுவதும், ரேட் (விகிதம்) ஏற்படுத்துவதும், மக்கள் தாங்களாகவே மேல்விழுந்து கொடுக்க வருவதுமான தன்மையிலேயே இயக்கத் திற்குப் பணம் சேர முடிந்தது. அதைக் கொண்டு இயக்க நடப்புக்கும், பிரச்சாரத்துக்கும், காரியாலயக் கட்டடங்களும், இடமும், வயலும், தோப்பும், காலி மனைகளும், வீடுகளும், மண்டபங்களும், பள்ளிகளும், பள்ளிப் பிள்ளைகளுக்கு பயன்படும் தங்குமிடங்களும் செலவுக்கு வருவாய் வரத்தக்க வீடுகளும் ஒரு அளவு ஏற்பாடு செய்துமிருக்கிறேன்.

இவைகளையெல்லாம்விட குறிப்பிடத்தக்க விஷயம் ஒன்று என்னவென்றால், திருச்சியில் ஒரு கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்று இரண்டு

ஆண்டுகட்கு முன் முயற்சித்து சென்ற ஆண்டில் பெண்கள் கல்லூரியாக ஏற்படுத்த அரசாங்கத்தில், யுனிவர்ஸிட்டியில் அனுமதி பெற்று செயலில் இறங்கும் போது, அதற்கு மேலும் கட்டடம், நில ஆர்ச்சிதம் முதலிய காரியங்களும், துவக்கியதில் அதிகச் செலவு மாத்திரமல்லாமல் பல தொந்தரவுகளும் ஏற்படுவதா யிருந்தது பற்றி சிந்தித்து, செயல்பட இருக்கும்போது, இதை அறிந்த திருச்சி தோழர்கள் பலர் திருச்சிக்கு இப்போது அவசரமாய் வேண்டியிருப்பது ஆண்கள் கல்லூரி என்று பல காரணங்களைச் சொல்லி முறை யிட்டார்கள். எனது 10,15 வருஷ திருச்சி வாசத்தில் நான் கண்ட அனுபவம் அம்முறையீடுகளை உண்மைப் படுத்தியதால், பெண்கள் கல்லூரி விஷயம் பின்னால் கவனிக்கலாம். இப்போது அவசரமாக ஆண்கள் கல்லூரி விஷயம் கவனிக்க வேண்டியதாகும் என்பதாக எனக்குத் தோன்றியதால், அரசாங்க கல்வி அதிகாரியை அணுகி இதற்கு யோசனை கேட்டதில் “அவர்கள் அங்கு ஏற்கனவே மூன்று காலேஜுகள் ஆண்களுக்கு இருக்கின்றன. இரண்டு காலேஜுகள் பெண்களுக்கு இருக்கின்றன. மேற்கொண்டு இப்போது அவசர மில்லை என்று சர்க்கார் நினைக்கிறது” என்று சொல்லிவிட்டார்கள்.

பிறகு மேலும் அவர்களை வேண்டிக் கொண்டதன் மீது 5 லட்சம் ரூபாய் பொருளுதவி செய்தால் அரசாங்கம் கவனிக்கும் என்று சொல்லி விட்டார்கள். நாம் சொந்தத்தில் வைப்பதானால் 50 ஏக்கர் இடமும், சுமார் 4,5 லட்சம் ரூபாய் செலவிட வேண்டியதான கட்டடமும், 2,3 லட்ச ரூபாய்க்கு மேலாக தளவாட சாமான்கள், இவை தவிர காலேஜ் ஏற்பட்ட பிறகு 2, 3 ஆண்டுகளுக்கு மாதத்துக்கு ரூ.2000-3000 சிப்பந்திகள் செலவும் செய்ய வேண்டி வரும் என்று தெரியவந்ததால், அரசாங்க விருப்பப்படி அவர்கள் கேட்கும் தொகையைத் தருவதாக ஒப்புக் கொண்டு தொகையும் செலுத்தப்பட்டாய்விட்டது. அநேகமாக அடுத்த ஆண்டு காலேஜும் துவக்கப் படலாம்.

மற்றபடி நமது இயக்கப் பிரசார வேலைகள் எப்போதும் போல் நடந்து வந்தாலும் சில விஷயங்களில், அதாவது நம் மக்கள் எண்ணிக்கைப்படி அரசாங்கப் பள்ளிகளிலும், உத்யோகங்களிலும், பதவிகளிலும் விகிதாசார உரிமைபெற சில கிளர்ச்சிகள் நடத்தப்பட வேண்டியது நமது சென்ற ஆண்டினுடை யவும், வரும் ஆண்டினுடையவும் திட்டமாக இருந்தாலும் அரசாங்கத்தால் மற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டிய அவசியத்தை முன்னிட்டு, நாம் ஒரு அளவுக்கு அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டிய காரியத்தைச் செய்யவேண்டியது அவசியமாகத் தோன்றுகிறபடியால், மற்ற கிளர்ச்சிகளை சிறிது தள்ளிப் போட வேண்டியதாகிவிட்டதால், இப்போது

**இவ்வளவு குறைபாடுகளும் இயலாமையும் இருந்தும் மக்கள் என்னிடம் வைத்து இருக்கும் அன்பும், மரியாதையும் ஜன்னி வந்தவனுக்கு ஏற்படும் பலம் சகிப்புத்தன்மை போல் எந்நிலை அறியாத அளவுக்கு வேலைகளையும், பொறுப்புக்களையும் நானாக மேற்போட்டுக் கொண்டு தொந்தரவடைந்து வருகிறேன்.**

அது விஷயமாய் (வகுப்புவாரி உரிமை விஷயமாய்) பிரசார அளவில் இருக்க வேண்டியதாகிவிட்டது.

நமது அரசாங்கத்தின் சமதர்ம (சோஷ்யலிச) திட்டம் எளிதான திட்டம் அல்ல. அரசாங்கத்திற்கு மிகவும் சிரமமும், தொல்லை தரத்தக்கதுமான திட்டமாகும். நம் நாட்டில் பாமர மக்கள் பகுத்தறிவற்றவர்களாக இருப்பதாலும், ஆதிக்கத்தில் இருந்துவரும் பார்ப்பனரும், செல்வவான்களும் எந்தக் கேடான காரியமும் செய்யத்தக்க அளவுக்கு துணிவும், வசதியும் உடையவர்களாக இருப்பதாலும், இவர்கள் ஆதரவால் காலிகளும், முஸ்லீம்களும் பொறுப்பற்ற தன்மையில் அரசாங்கத்திற்கு எதிரிகளாய் இருப்பதாலும் அரசாங்கத்திற்கு பொதுமக்கள் ஆதரவு மிக மிகத் தேவைப்படுகிறது.

சுருக்கமாக சொல்ல வேண்டுமானால் அரசாங்கத்தின் சோஷ்யலிசத் திட்டம் நல்ல அளவுக்கு நிறைவேறும்படி செய்வோமானால், நமது திட்டங்கள் ஒரு நல்ல அளவுக்கு நிறைவேற வாய்ப்பு இருக்கிறது என்பது எனது கருத்தாகும்.

இப்போது அரசாங்கக் கல்வித் திட்டத்தினால் மக்களின் பாமரத்தன்மை ஒழிந்து வரும் என்பதில் ஆட்சேபணையில்லை. இந்த நிலை ஜாதி ஒழிப்புக்கு நல்ல ஆதரவான நிலையாகி விடும்.

பொருளாதார பேதம் ஒழிய வேண்டியது அவசியமேயானாலும், முதலில் கவனம் செலுத்த வேண்டியது ஜாதி ஒழிப்பு வேலையே ஆனதனால் அந்தக் காரியத்திற்கு, அரசாங்கத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவளிக்க வேண்டியவர்களாகிறோம்.

பொருளாதார பேதம் பெரிதும் உலகமெங்கிலும் இருந்துவரும் பேதம் என்பதோடு, அதை அவ்வளவு எளிதில் ஒழித்துவிடுவது என்பது மிக்க சிரமத்தைத் தரத்தக்கதாகும். ஏன் எனில் ஆட்சி ஜனநாயகமானாலும், ஆட்சியாளர்கள் ஜாதி ஆணவக்காரர்களாக இருக்கிறார்கள் என்பதோடு, பொருளாதார உணர்ச்சி கொண்டவர்களாக இருந்து வருகிறார்கள். பொதுவாக சொல்லுவதானால் நமது நாட்டு ஆட்சியாளர்கள் கட்சியான காங்கிரசில்

பார்ப்பனர் ஆதிக்கத்தைவிட பணக்காரர்கள் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. மந்திரிமார்கள் பெரிதும் செல்வவான்களும், செல்வத்தை சேர்க்க வேண்டும் என்ற பேராசை உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். அதோடு செல்வவான்கள் ஆட்சியில் நல்ல அளவுக்கு செல்வாக்கு பெற்றவர்களாகவும், தங்கள் செல்வ விருத்தியை முன்னிட்டே காங்கிரசை ஆதரிப்பவர் களாகவும் இருப்பதால், ஒரே சமயத்தில் இருவர் எதிர்ப்பையும் சமாளிப்பது அரசாங்கத்திற்கு பெருந் தொல்லையாக இருக்கும்.

ஆதலால் நமது மேற்கண்ட இரு திட்டங்களும் இன்று அரசியல் திட்டங்களாக இருக்கும் நேரத்தில் நாம், மற்ற நமது திட்டங்கள் விஷயமாய் பிரசாரத் திலும், மாநாடு கூட்டுவதிலும் லட்சியமாக இருக்க வேண்டியதுடன், கிளர்ச்சிக்காரர்களாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படக்கூடாது என்பது எனது கருத்து.

நமது இயக்க தோழர்கள் இன்று எந்தக் கிளர்ச்சிக்கும் தயாராயிருக்கிறார்கள் எனபதும், கிளர்ச்சி துவக்காத காரணத்தாலேயே என் மீது பலருக்கு சலிப்பு என்பதும் எனக்கு தெரியும். ஆனாலும் நமக்கு, அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுப்பதும், ஆட்சியின் சோஷ்யலிச திட்ட நடப்புக்கு எதிராக ஏற்படும் சமுதாய விரோதிகளின் கிளர்ச்சிகளையும், தொல்லைகளையும் முறியடிப்பதும் தான் இன்று முக்கியமான காரியமாக இருக்கவேண்டும். காங்கிரசுக்கு நம்மால் கூடியவரை பலம் ஏற்படும்படி செய்ய வேண்டும்.

தமிழர்களாகிய நமக்கு பெரிதும் அவரவர் சுயநலம் தான் முக்கியமே தவிர இனநலம் அலட்சியமாய்க் கருதக் கூடியதாக இருந்து வருகிறது. ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், தமிழன் என்ற உரிமையால் பதவிக்கு வந்து ஓட்டு கொடுக்கும் தமிழர்களில் 100-க்கு 90 பேர் அரசாங்க எதிரிகளாகவும், எதிரிகளின் கையாட்களாகவும் இருக்கிறார்கள். இன்று அரசாங்கத்துக்கு தமிழர்களில் படித்தவன் ஆதரவும் இல்லை. பணக்காரன் ஆதரவும் இல்லை. பதவி பெற்று ஓய்வெடுத்தவர்கள் ஆதரவுமில்லை. இது மாத்திர மல்லாமல் அரசாங்க பெரும்பதவி, சிறு பதவியில் இருப்பவர்கள் ஆதரவும் இல்லை. நாம் அப்படிப்பட்ட பிறவியாளர்களாக ஆகிவிட்டோம்.

ஆனதனால் நம் தலையில் விழுந்திருக்கும் பொறுப்பு மகத்தானது. இன்னும் சொல்ல வேண்டுமானால் அரசாங்கம் நம்மை ஒரு நல்ல அளவுக்கு நம்பித்தான் இவ்வளவு தீவிர திட்டத்தில் இறங்கி இருப்பதாக உணருகிறேன். இப்போது நாம் மேற்சொன்னபடி நிபந்தனை அற்ற ஆதரவாளர்களாக இல்லையானால் நாமும் மேற்கண்ட தமிழர் விரோதிகள் கூட்டத்தில் சேர்ந்தவர்கள் ஆகி விடுவோம்.

**“என்னையே நீதிபதியாகக் கொண்டு எனக்குச் சரி என்று பட்டதையும் தேவை என்று பட்டதையும் செய்தேன். அதுவும் ஒளிவு மறைவு இல்லாமல் செய்து வந்தேன்.”**

இன்று தமிழர் சமுதாயத்திற்கு மாத்திர மல்லாமல், ஏழை எளியவர்கள் சமுதாயத்திற்கும் இரட்சகர் என்கின்ற முறையில் காமராஜர் இருந்து வருகிறார். அவர் இல்லாவிட்டால் உள்ளது ஒன்றுமே இல்லை. இருக்கவேண்டியது ஒன்றுமே இல்லை எனபது மாத்திரமல்லாமல் எல்லாக் கேடுகளும் நம்மைச் சுற்றிக்கொண்டு இருக்கும்.

எனவே காமராஜரை உற்சாகப்படுத்தும் அளவுக்கு நமது ஆதரிப்பு ஆட்சிக்கும், காங்கிரசுக்கும் இருக்க வேண்டியது அவசியமாகும். இன்றியமையாத அவசியமாகும்.

இதுவரை நாம் ஒன்றும் செய்யவில்லை என்று கருதிவிடாதீர்கள். அரசியல் ரீதியில் இன்று காங்கிரசுக்கு, காமராஜருக்கு எதிர்ப்பு இல்லாமல் ஆக்கியது, நமது இயக்கம் தான். பார்ப்பான் குள்ளநரி ஆகிவிட்டான். முஸ்லீம்லீக் இன்று செல்லாக்காசு ஆகிவிட்டது. கண்ணீர்த்துளி நாட்டுக்கு நியூசென்சாகி விட்டது. இது யாரால் ? இதற்கு காங்கிரஸ் என்ன பாடுபட்டது ? ஆதலால் நாம் ஒன்றும் செய்யவில்லை என்று கருதி விடக்கூடாது.

ஆகவே நாம் ஒன்றும் செய்யவில்லை என்றோ, நமக்கு திட்டமில்லை என்றோ, கருதாமல் சலிப்படையாமல் நமது தோழர்கள் கடவுள், மத, சாஸ்திர, சம்பிரதாய ஒழிப்புக் காரியங்களைத் திட்டமாகக் கொண்டு பிரசாரம் செய்வது, மாநாடு கூட்டுவது ஆகிய காரியங்களில் ஈடுபட்டு தீவிரமாகக் காரியங்கள் செய்ய வேண்டிக்கொள்ளுகிறேன்.

கழக ஸ்தாபனங்கள், மாநாடுகள் கூட்ட வேண்டும். காங்கிரஸ்காரர்களை அவர்கள் கலந்து கொள்ள ஆசைப்படும் அளவுக்கு அழைக்கலாம். நாமும் அவர்கள் விரும்பும் அளவுக்கு கலந்து கொள்ளலாம். நம் தனிமையை எப்போதும் மறந்துவிடாமல் தொண்டாற்றலாம்.

இது தான் எனது 86-ஆம் ஆண்டு வேண்டுகோள் செய்தியாகும்.

‘விடுதலை’ - பெரியார் பிறந்த நாள் மலர்- 17-9-1964



# பழிப்புக்கும் எதிர்ப்புக்கும் அஞ்சுகிறவர்கள் சமுதாய மாற்றத்துக்குப் போராட முடியாது

சகோதரிகளே! சகோதரர்களே!

இந்த பெரியதும் முக்கியமானதுமான மகாநாட்டிற்கு என்னைத் தலைவனாக தெரிந்தெடுத்ததன் மூலம் தாங்கள் எனக்களித்த கௌரவத்திற்காக எனது மனமார்ந்த நன்றி அறிதலை தங்கள் எல்லோருக்கும் தெரிவித்து கொள்கிறேன்.

இம்மகாநாடு சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு என்று சொல்லப்படுகிறது. எனவே, இத்தகைய ஒரு மகாநாட்டுக்கு சீர்திருத்தத்தில் மிகுதியும் நம்பிக்கையுள்ள ஒருவரைத் தலைவராக தெரிந்தெடுத்திருப்பீர்களானால் அது மிகவும் பொருத்தமுடையதாக இருந்திருக்கும் என்று நான் சொல்வதற்காக என்னை மன்னிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனெனில் வரவர எனக்கு சீர்திருத்தம் என்பதில் உள்ள நம்பிக்கை மறைந்து கொண்டே போகின்றது. அன்றியும் நமது நாட்டை முன்னுக்கு கொண்டு வர வேண்டும் என்பவர்களுக்கும், நமது நாட்டு பெரும்பான்மையான மக்களுக்கு சுயமரியாதையும், சமத்துவமும், விடுதலையும் உண்டாக்கச் செய்ய வேண்டும் என்பவர்களுக்கும், எதிரில் இருக்கும் வேலை சீர்திருத்த வேலை அல்ல என்பதே எனது அபிப்பிராயம்.

மற்றென்னையெனில் உறுதியும் தைரியமும் கொண்ட அழிவு வேலையே ஆகும். அளவுக்கு மீறின பொறுமை கொண்ட யோசனையின் மீதே நான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறேன். உதாரணமாக ஒரு பெரிய கிணறு இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள்; அந்தக் கிணற்றிற்கு மிகப் பழமையானதும் விசேஷமானதுமான ஒரு புராணம் இருப்பதாகவே வைத்துக் கொள்ளுங்கள்; அதாவது அந்தக் கிணற்று தண்ணீரில் ஒரு துளி தண்ணீரை சாப்பிடுவதனாலோ, அல்லது மேலே தெளித்துக் கொள்வதினாலோ நம்முடைய எல்லாப் பாவமும் - மகா பாதகமான காரியம் என்று சொல்லப்பட்ட செய்கைகளைச் செய்தாலும் மன்னிக்கப்படுவதுடன் மோட்சலோகம் என்பது கிடைக்கும் என்று எழுதி இருப்பதாகவே வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் இப்போது அந்தக் கிணற்றுத் தண்ணீரில் ஒரு சிறிது சாப்பிட்டால் விஷபேதி காணக்கூடியதாகவும், அதில் ஸ்நானம் செய்தால் சரீரமெல்லாம் சொறி சிரங்கு வருவதாகவும் இருந்தால் அதற்காக நாம் செய்ய வேண்டிய வேலை என்ன? அந்தத் தண்ணிரில் விஷப் பூச்சிகள் உண்டாகி தண்ணீரைக் கெடுத்து விட்டது என்று கருதி அந்த விஷப் பூச்சிகள் சாகத் தக்க மருந்தை அந்த கிணற்றுக்குள் போடுவோம்.

அப்படிப் போட்ட பிறகும் அந்தத் தண்ணீரின் குணம் அப்படியே முன்போலவே இருக்குமானால் மேல் கொண்டு என்ன செய்வோம்; மருந்துக்குக் கட்டுப்படாத அளவு கெடுதி அந்தத் தண்ணீரில் உண்டாய் விட்டதாகக் கருதி அந்தக் கிணற்றுத் தண்ணீர் முழுவதையும் இறைத்து வெளியில் ஊற்றி அந்தக் கிணற்றையும் நன்றாய்க் கழுவி விடுவோம். அந்தப்படி செய்த பிறகும் மறுபடியும் அந்தத் தண்ணீரின் குணம் அப்படியே இருக்குமானால் அதனுடைய காரணம் என்ன? அந்த கிணற்றுக்குத் தண்ணீர் வரும் ஊற்றே விஷத்தன்மை பொருந்தியது. அதாவது விஷ நீர் ஊற்றுக் கிணறு என்றுதானே ஏற்படும். அப்படிப்பட்ட விஷநீர் ஊற்றுக் கிணற்றை என்ன செய்வீர்கள்? பழைய புராணத்தையும் அதில் உள்ள அந்தக் கிணற்றுப் பெருமையையும் மதித்து, அதிலேயே குளித்து அந்த நீரையே சாப்பிட்டு விஷபேதியையும் சொறி சிரங்கையும் அடைந்து கொண்டிருப்பீர்களா? அல்லது அந்தக் கிணத்தை மண்ணைக் கொட்டி மூடிவிடுவீர்களா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

எனவே, மருந்து போட்டு தண்ணீரைச் சுத்தம் செய்வதும், தண்ணீர் பூராவையும் இறைத்து கிணற்றைக் கழுவுவதும் சீர்திருத்த வேலையாகும். அடுத்தபடியான மண்ணைப் போட்டு நிரவி மூடிவிடுவதே அழிவு வேலையாகும். இந்த முறையில் தான் நான் ஒரு அழிவு வேலைக்காரன் என்பதாகத் தெரிவித்துக் கொண்டேன்.

நமது நாட்டைப் பொறுத்த வரையில் சீர்திருத்தம் என்பதெல்லாம் செய்து பார்த்தாய் விட்டது. நான் பார்த்தாய் விட்டது என்று சொல்வது இப்போது நடைபெற்று வரும் சீர்திருத்தம் என்பதைக் குறித்தல்ல. ஏனெனில், இது உண்மையான சீர்திருத்த மல்ல. இப்போதைய சீர்திருத்தம் என்று சொல்லப் படுவதுகளெல்லாம் பாமர மக்களை ஏய்த்து அவர்களிடம் செல்வாக்குப் பெறுவதற்காக படித்த கூட்டத்தார்களோ பணக்காரர்களோ தங்களில் ஒருவருக்கொருவர் போட்டி போடுவதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட அநேக சூட்சி ஆயுதங்களில் இதுவும் ஒன்றாகும். இது மேல்நாட்டாரைக் கண்டு பழகிய செய்கையாகும். இம்முறைகள் எல்லாம் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டியவர்களுடைய நன்மையைக் கருதி கண்டுபிடிக்கப்பட்டதல்ல. சீர்திருத்தம் செய்பவர்களுடைய சுயநலத்தை உத்தேசித்தே பெரிதும் கண்டுபிடிக்கப்பட்டதாகும்.

ஆனாலும், சீர்திருத்தம் பெற வேண்டிய மக்கள் இதை உண்மையாகவே நம்பி வந்திருக்கின்றார்கள். ஆனாலும், அதன் முடிவுகள் எல்லாம் மேலும் மேலும் மோசமான நிலைமைக்கே, அதாவது இனிமேல் சுலபத்தில் சீர்திருத்தம் செய்ய முடியாத நிலைமைக்குப் போய்க்கொண்டிருக்கின்றார்கள். இதன் முக்கிய காரணம் என்னவெனில், எந்தக் கூட்டத்தாரால் - எந்த மனப்பான்மை உடையவர்களால் மக்கள் கெட்டு சீர்திருத்தமடைய வேண்டிய நிலைமைக்கு வந்தார்களோ, யாருடைய எந்தக் கூட்டத்தாருடைய சுயநலத்திற்காக மக்கள் பெரிதும் நிலை குலைய வேண்டியதாயிற்றோ அந்தக் கூட்டத்தார்களேதான் மிகுதியும் சீர்திருத்தம் என்கின்ற துறையை உபயோகித்துப் பயன்பெற்று வந்திருக்கின்றார்கள். இனியும் அவர்களேதான் பெரும்பாலும் இத்துறையில் இருக்கின்றார்கள். அதனால்தான் நான் நமது மக்களின் நிலை சீர்திருத்த முடியாத நிலையை அடைந்து விட்டது என்று சொல்லுகின்றேன்.

சமுதாய சீர்திருத்தம் என்பது ஒவ்வொரு நாடுகளில் ஒவ்வொரு மாதிரியாக இருக்கின்றது. உதாரணமாக மேல்நாடுகளில் எல்லாம் சமுதாய சீர்திருத்தம் என்பது எல்லா மக்களையுமே பொறுத்தது. அதாவது, சீர்திருத்தம் செய்யப்பட வேண்டிய சமூகப் பழக்க வழக்கம் முதலியவைகள் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகவே இருப்பவைகளாகும். நமது நாட்டில் பெரும்பாலும் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டியவைகள் என்று சொல்லப்படுபவைகள் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு வகையானதாகும்.

நமக்குள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் சீர்திருத்தம் பொது மனித சமூகத்தில் தேவை. மக்களின் பிறப்பின் காரணமாக உயர்வு தாழ்வு கற்பிப்பதாகும். இந்த முறை நமது இந்தியாவைத் தவிர வேறு எந்த

**நான் ஒரு சீர்திருத்தவாதி அல்ல;
அழிவு வேலைக்காரன் என்பதாகத்
தெரிவித்துக் கொண்டேன்.**

நாட்டிலும் இவ்வளவு மோசமான கற்பனையின் மீது கையாளப்படுவதே இல்லை. அடுத்தபடியானது வாழ்க்கையில் இருந்து வரும் பழக்க வழக்கம், மூட பக்தி, குருட்டு நம்பிக்கை ஆகியது போன்ற வகைகள்; இவைகள் எல்லாம் நமது நாட்டில் விசேஷமாய் மதம், கடவுள், மோட்சம் என்பதன் பெயர்களாலேயே அவைகளை ஆதாரமாய் வைத்தே நடைபெற்று வருகின்றது. என்றாலும், இவைகளைச் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்கிற கவலை வெகுகாலத்திற்கு முன்னதாகவே ஏற்பட்டது என்று சொல்லலாம். அதாவது புத்தர், இராமானுஜர், திருவள்ளுவர் முதலிய பல பெரியோர் காலத்திலேயே ஏற்பட்டதாகச் சொல்லலாம். ஆனாலும், மேற்கண்ட துறைகளில் அதுமுதல் இதுவரை ஒரு சிறு காரியத்திலாவது வெற்றியேற்பட்டு அது நமக்குப் பயன்பட்டது என்று சொல்லுவதற்கு இல்லை. இப்போது ஏதாவது ஒரு சிறிதளவு மாறுதல் ஏற்பட்டு இருக்கின்றது என்று யாராவது சொல்லவருவார்களானால் அது வெளி நாடுகளில் நடைபெறும் சமூக சீர்திருத்தத்தின் சாரல் அல்லது ‘வெளிநாட்டார் தங்கள் சுயநலத்திற்காகச் செய்யப்பட்ட வேலைகளின் பலன்’ என்றுதான் சொல்லவேண்டும்.

நம் நாட்டில் நம் நாட்டு மக்களால் சமூக சீர்திருத்தம் என்பது ஒரு சிறிதும் செய்வதற்கு சாத்தியமே இல்லை. ஏனெனில், அவற்றிற்குத் தடையாய் கடவுள் உணர்ச்சியையும், மத உணர்ச்சியை யுமே நிறுத்தப்பட்டு இருப்பதால் முடியாததாய் இருக்கின்றது அன்றியும் இந்நிலை சிலருக்குப் பயன்படுவதாயு மிருக்கின்றது. இதுவரை செய்து வந்த காரியங்கள் எல்லாம் பயன்படாமல் போனதற்குக் காரணமே இதுதான் என்றே சொல்லுவேன்.

இதற்கு சமாதானம் சொல்ல வேண்டியவைகள் எல்லாம் சொல்லியாய்விட்டது. செய்ய வேண்டிய தெல்லாம் செய்து ஆய்விட்டது. அதாவது புத்தர், கபிலர், திருவள்ளுவர் முதலியவர்கள் சொன்னவை களுக்கு மேலாகவும், இராமானுஜர் செய்ததற்கு மேலாகவும் இனி ஒருவர் வந்து புதிய ஞானத்தை போதித்தோ, புதிய காரியத்தைச் செய்தோ விடமுடியும் என்பது இலேசான காரியம் அல்ல. அன்றியும் சமூக சீர்திருத்தத்திற்கு இப்போது விரோதிகளா யிருப்பவர்களுங்கூட தங்களுடைய தடை வேலையில் நம்பிக்கை வைத்திருப்பதன் காரணமும் இதுவேதான்.

ஆனாலும் அப்போதைய நிலைமையும், சௌகரியமும், அரசாங்கமும் வேறு; இப்போதைய நிலைமையும், சௌகரியமும் அரசாங்கமும் வேறு என்பதான ஒரு சிறிய திருப்தி சமூக சீர்திருத்தக்காரர்களுக்கு நம்பிக்கை கொடுக்கக் கூடியதாயிருந்தாலும், கடவுள் உணர்ச்சியும், மத உணர்ச்சியும், ஒரு சிறிதும் மாறுபாடடையாமல் இருப்பதால் இந்த நிலையில் நமது நாட்டுச் சமுதாயத்திற்குச் சீர்திருத்தம் என்பது முடியாத காரியம் என்றே முடிவு கட்ட வேண்டியிருக்கிறது. ஏனெனில் இந்த இரண்டையுமே மனிதனின் மூடபக்தியும், குருட்டு நம்பிக்கையும் என்கின்ற அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட்டிருக்கின்றது. ஏனெனில், குருட்டு நம்பிக்கையின் பயனாய் ஏற்பட்ட கடவுளினிடத்தில் தான் பெரிதும் மூட பக்தியால் ஏற்பட்ட மதத்தின் மூலம் கொள்கைகளை வகுத்து வாழ்க்கை நடத்துகிறோம். இம் மூட பக்தியையும், குருட்டு நம்பிக்கையும் ஒழிக்க வேண்டும் என்று சொல்லுவது சீர்திருத்த வேலையின் பாற்பட்டதல்ல; அது மனித சமூகத்தின் நன்மைக்காக அழிக்கப்பட வேண்டிய வேலையின் பாற்பட்டதாகும். ஏனெனில், அடியோடு அழித்துத் தரை மட்டமாக்கி புதுப்பிக்க வேண்டி இருக்கும் வேலை சீர்திருத்த வேலையாகாது, வேண்டுமானால் புனருத்தாரண வேலை Reconstruction என்று சொல்லலாம்.

இவ்வேலையில் ஈடுபடுபவர்களுக்கு மகத்தான மன உறுதியும் சந்தேகமற்ற தெளிவும் இருக்கவேண்டும். அஃதில்லாமல் ஆவேசத்தில் தலையிட்டு விட்டால் தற்கொலையாகவே முடியும். ஏனெனில் பலமானதும் இடையறாததுமான எதிர்ப்புகளிற்கிடையே இவ் வேலை செய்ய வேண்டி இருக்கிறது. காரணம் என்னவென்றால் வெகு காலமாக மனித சமூக இருதயத்தில் கலந்து ஊறி விட்டதும், இந்நிலை வெகு பேரினுடைய சுயநலத்திற்கு அனுகூலமாக யிருப்பதும் ஆகிய இரண்டு காரணங்களால்தான்.


எந்த காரணங்களால் உண்மையான சீர்திருத்தம் வெற்றி பெறவில்லையோ, என்ன என்ன சாதனங்கள் அச்சீர்திருத்தத்திற்குத் தடையோ அவைகளை வேருடன் அழிக்கத் தயாராயிருக்க வேண்டும். அவைகளில் ஒரு சிறு தாரையாவது கிளை வேரையாவது மீத்தி வைத்துக் கொண்டு சீர்திருத்தம் செய்யலாம் என்று எந்தவிதமான சீர்திருத்தக்காரர்கள் நினைத்தாலும் அவர்கள் ஒருக்காலமும் வெற்றி பெறமாட்டார்கள் என்பது எனது உறுதி.

அன்றியும் சிலர் சொல்லுவது போல் சீர்திருத்தக்காரர்களுக்கு நிதானமும் சாந்தமும் அளவுக்கு மீறி வேண்டும் என்பதையும் நான் ஒப்புக் கொள்ளுவதில்லை. அன்றியும் இவ்விஷயத்தில் வெறுப்பும் பிடிவாதமும் அடியோடு கூடாது என்பதையும் நான் ஒப்புக் கொள்வதில்லை.

நான் இப்படிச் சொல்லுவதால் அநேக பெரியோர்களுடைய அபிப்பிராயத்திற்கு முரண்பட்டவனாக பலருக்குக் காணப்படலாம். ஆம், இவ்வித அபிப்பிராயங்களில் நான் நன்றாக முரண்பட்டவன் தான். மேற்கண்டவிதம் சொல்லப்பட்டவர்களின் பொறுமையையும், நிதானத்தையும் சாந்தத்தையும், துவேஷமற்ற தன்மையையும் நான் என்னறிவுக்கு எட்டிய வரை கவனித்துப் பார்த்தேன். அவைகள் மிகுதியும் பயத்தாலும், ஒருவிதப் பலக் குறைவினாலும் இவ்விஷயத்தில் உபயோகப்படுத்தப்பட்ட வார்த்தைகள் என்றே கண்டேன்.

அன்னியர்கள் நம்மை மதிக்கமாட்டார்களே, பழிப்பார்களே, எதிர்ப்பு பலமாய் விடுமே என்கிற பயமும் பலக்குறைவும் யாரிடத்தில் இருக்கின்றதோ அவர்கள் ஒருக்காலமும் உண்மையான சீர்திருத்தத்திற்கு உதவவே மாட்டார்கள். அன்றியும் அக்குணங்களுடன் கூடியவர்களால் நடைபெறும் சீர்திருத்தம் ஒரு காலமும் பயனளிக்கவே முடியாது; அன்றியும் சீர்திருத்தம் செய்பவர்கள் எவ்விதக் கட்டுப்பாட்டிற்கும் ஆளாயிருத்தல் கூடாது. சீர்திருத்தத்திற்கு விரோதமான கட்டுப்பாடுகள் எல்லாம் உடைத்தெறிவதைக் கைக் கொள்வதுதான் சீர்திருத்தத்திற்கு முதன்மையான பாதையாகும். கட்டுப்பாடுகளுக்கு அடங்கிய சீர்திருத்தம் என்பது அதிலும் நம் நாட்டைப் பொருத்தவரை சிறிதும் பயனற்றது.

'குடிஅரசு' சொற்பொழிவு 2.12.1928



புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.org
ஆண்டுக் கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049 – periyarmuzhakkam@gmail.com

# அம்பேத்கர் பற்றிய கட்டுக் கதைகளுக்கு மறுப்பு

எட்வின் பிரபாகரன்




வெளியீடு : தலித் முரசு

விலை : ரூ. 130/-

தொடர்புக்கு : 044-28221314

அம்பேத்கர் வாழ்ந்த காலத்திலும் சரி, இப்போதும் சரி, அவரை இந்துவயப்படுத்த பல முயற்சிகள் நடந்தன; நடக்கின்றன. தலித் மக்களை கவர, அம்பேத்கரை தங்கள் அடையாளமாகக் காட்ட, சங் பரிவார் அமைப்பினர் தவறுவதில்லை. அம்பேத்கரை இந்துவயப்படுத்த பல நூல்கள் வெளிவந்துள்ளன. ஆர் எஸ் எஸ்காரர் அருண் ஷோரி எழுதிய “Worshipping False Gods” போன்ற நூல்கள் கடந்த காலங்களில் வெளிவந்தன. அதன் தொடர்ச்சியாக தற்போது ம. வெங்கடேசன் என்பவரை வைத்து “இந்துத்துவ அம்பேத்கர்” என்ற நூலை உருவாக்கியுள்ளது ஆர்.எஸ்.எஸ். “பெரியாரின் மறுபக்கம்” என்ற நூலை எழுதியவரும் இவரே!! ஆர் எஸ் எஸ் ஒருபுறம் அம்பேத்கரை தங்கள்வயப்படுத்த முயன்று வரும் நிலையில், மறுபுறம் காந்தியவாதிகளோ, அம்பேத்கரை தூற்றியும், காந்தியை போற்றியும் நூல்களை வெளியிட்டுள்ளனர்.

“காந்தியும் காங்கிரசும் தீண்டத்தகாத மக்களுக்கு செய்தது என்ன?” என்பது 400 பக்கங்களுக்கு மேல் அம்பேத்கர் எழுதிய விமர்சன நூலாகும். இந்நூலுக்கு எதிராக, காந்தியின் வேண்டுகோளின்படி, இருவர் மறுப்பு எழுதியுள்ளனர். பா. சந்தானம் என்பவர், “Ambedkar attack” என்ற நூலையும், குலக்கல்வி திட்டத்தை கொண்டு வந்த ராஜாஜி, “Ambedkar refuted” என்ற நூலையும் எழுதியுள்ளனர். குலக்கல்வி திட்டத்தை கொண்டு வந்தவரை மறுப்பு எழுதச்சொல்லும் அளவுக்கு தான் காந்தியின் சிந்தனைகள் இருந்துள்ளன. 400 பக்கங்களை கொண்ட அம்பேத்கரின் நூலுக்கு, ராஜாஜியால் 37 பக்கங்களில் தான் மறுப்பு எழுத முடிந்துள்ளது. பா. சந்தானம் எழுதிய மறுப்பில், பார்ப்பனர்கள் தகுதி, திறமையினால் தான் உயர்பொறுப்புகளில் இருக்கிறார்களே தவிர, பார்ப்பன ஆதிக்கமே இல்லை என்ற “அரிய” கருத்தை பதிவு செய்துள்ளார்.

இந்த ஆங்கில நூல்களை தமிழில் மொழிபெயர்த்து ஒரே நூலாக கொண்டு வந்துள்ளார் பூ. கொ. சரவணன். நூலின் பெயர் “அம்பேதகருக்கு மறுப்பு, அம்பேத்கரின் ஆய்வறிக்கை: மறு ஆய்வு” என்பதாகும். இவை போக, முருகு. இராசாங்கம் என்பவர், “பூனா ஒப்பந்தம்: புதைக்கப்பட்ட உண்மைகள்”

என்றொரு நூலை எழுதியுள்ளார். இரட்டை வாக்குரிமையை வழங்கும் இவ்வொப்பந்தம், இந்தியர்களை பிரிக்க ஆங்கிலேயர்கள் செய்த சதி என்பதை நிறுவ முயன்றுள்ளார். நூலின் பெயருக்கு ஏற்றவாறே பல உண்மைகளை நூலாசிரியரே புதைத்துள்ளார்.

அம்பேத்கரை தூற்றி எழுதப்பட்ட நூல்கள் ஒருபுறமிருக்க, அவற்றுக்கு மறுப்பாகவும் பல நூல்கள் வெளிவந்துள்ளன. தோழர் பா. பிரபாகரன் எழுதிய “அம்பேத்கரும் அவதூறு களும்: ஜெயமோகனுக்கு மறுப்பு”, தோழர் ம. மதிவண்ணன் எழுதிய “அண்ணல் அம்பேத்கர்: அவதூறுகளும் உண்மைகளும்”, தோழர் யாக்கன் எழுதிய “கழுவப்படும் பெயரழுக்கு” ஆகிய தமிழ் நூல்கள் குறிப்பிடத்தக்கனவாகும். அதே போன்று ஆங்கிலத்தில், போஜா தார்கம். கே. சத்திய நாராயணா, கே. லட்சுமி நாராயணா, கே. ஒய். ரத்தினம் ஆகியோர் இணைந்து எழுதிய, “Ambedkar can neither be adopted or appropriated by the Hindutva elements” என்ற நூல் போற்றுதலுக்குரிய நூலாகும். இந்த வரிசையில், அம்பேத்கரை இந்துவயப்படுத்த எழுதப்பட்ட நூல்களுக்கும், அம்பேத்கரை தூற்றி, காந்தியை போற்றி எழுதப்பட்ட நூல்களுக்கும், சரியான மறுப்பாக எழுதப்பட்டிருக்கும் முக்கியமான நூல் “அம்பேத்கர்: இந்துவயப்படுத்த முடியாத தத்துவம்” எனும் நூல். மருத்துவர் ஜெயராமன் இந்நூலை எழுதியுள்ளார். அம்பேத்கர் பெரியார் கார்ல் மார்க்ஸ் பண்பாட்டு இயக்கத்தின் தலைவராக இருக்கும் மருத்துவர், “காந்தியின் தீண்டாமை” (2008), “மகனுக்கு மடல்” (2014), “நான் ஏன் பதவி விலகினேன்? டாக்டர் அம்பேத்கரின் பாராளுமன்ற உரைகள்” (2017), “மேட்டுகுடி தலித்துகளுக்கு” (2019) ஆகிய நூல்களை படைத்த சிறப்புக்குரியவர் ஆவார்.

‘தலித் முரசு’ வெளியீடாக வந்திருக்கும் பார்ப்பனியத்தின் ஹிம்சை வடிவம் இந்துத்துவம் என்றால், அதன் அகிம்சை வடிவம் காந்தியம் என்பதை தெளிவாக நூலாசிரியர் விளக்கி யுள்ளார். பூனா ஒப்பந்தத்தின் போது காந்தியின் துரோகத்தையும், காந்தியின் ஒற்றை வாக்குரிமையுடன் கூடிய 148 தனித்தொகுதிகளை விட, அம்பேத்கரின் இரட்டை வாக்குரிமையுடன் கூடிய 71 தனித்தொகுதிகள் ஏன் சிறந்தவை என்பதையும், அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் எடுத்துரைத்துள்ளார். பெரியாரும் அம்பேத்கரும் இவ்வொப்பந்தத்தை ஆதரித்தனர். காந்தி ஒப்பந்தத்தை எதிர்த்து உண்ணாநோன்பு இருந்தார். காந்திக்காக தாழ்த்தப்பட்டோர் உரிமையை கைவிட வேண்டாமென பெரியார் அம்பேத்கருக்கு தந்தி அனுப்பினார். ஆரம்பத்தில் தனித்தொகுதி முறையையே எதிர்த்த காந்தி, பின்பு 148 தனித் தொகுதிகள் ஒதுக்குவதை ஏற்றுக் கொண்டார்.

காந்தியின் “அரிசன சேவா சங்கம்” வரவு செலவு கணக்கு கூட தாக்கல் செய்யப்படாமல், செயல்பாடற்று முடங்கிப் போனது. அதன் மோசமான செயல்பாடுகளால், சுவாமி சிரத்தானந்தர் போன்றோரும் விலக நேரிட்டது. ஜாதி ஒழிப்பை லட்சியமாக கொண்ட அம்பேத்கரை ஏதோ அரசியல் அதிகாரத்துக்கு மட்டும் போராடியவரைப் போன்று, காந்தியவாதிகள் கட்டமைக்கும் பிம்பத்தையும் உடைத்துள்ளார் நூலாசிரியர். “நால்வகை வர்ணம் உண்டு. பஞ்சமர் என்ற ஐந்தாவது வர்ணம் கிடையாது; எந்த வேதத்திலும் அப்படி கூறப்படவில்லை. எனவே இந்த ஐந்தாவது வர்ணத்தை ஒழிக்க வேண்டும்” என்றார் காந்தி. இது அவரது மோசமான சனாதனதர்ம சிந்தனையை வெளிப்படுத்தும்விதமாக உள்ளது. பெரியாரும் அம்பேத்கரும் “கிராமங்கள் அழிய வேண்டும்” என்று பிரசாரம் செய்து வந்த நிலையில், “இந்தியாவின் ஆன்மா கிராமங்களில் தான் உள்ளது” என்ற காந்தியிடம் வேறென்ன சிந்தனைகளை எதிர்ப்பார்க்க முடியும்?? ஒடுக்கப் பட்டவர்களுக்கு தனித்தொகுதி வழங்கினால் “இந்து மதத்துக்கு ஆபத்து; இந்து மதம் பிளவுபடும்” என்றவர்தான் நம் தேசத்தந்தை.

அம்பேத்கரை இந்துவயப்படுத்த துடிக்கும் எந்த இந்துத்துவவாதியும், காந்தியர்களின் நூல்களை மறுக்கத் துணியவில்லை. “இந்தி பேசும் சமவெளி மக்கள், துளசிதாசின் இந்தி ராமாயணத்துக்கு பதிலாக, வால்மீகியின் சமஸ்கிருத ராமாயணத்தை படிக்கும்போது தான் மக்கள் பிற்போக்கு தன்மையில் இருந்து விடுதலை அடைவார்கள்” என்று அம்பேத்கர் கூறியதற்கான காரணம், வால்மீகி ராமாயணம் அவ்வளவு மோசமானது என்பது தான். பெரியார் கம்பனை

புளுகன் என்று கூறியதை இதனோடு தொடர்பு படுத்திப் பார்க்கலாம். ஆனால், இந்துத்துவ வாதிகளோ அம்பேத்கரின் கருத்தை திரித்து, அம்பேத்கர் சமஸ்கிருதத்தை ஆதரிக்கிறார் என்று கதைகளை எழுதுகின்றனர். பெரியார் ராஜாஜியோடு நட்பாக இருந்ததை வைத்து பெரியாரை எப்படி இந்துவயப்படுத்த முடியாதோ, அதே போன்று, அம்பேத்கர் வீரசவர்க்கரோடு கடித பரிமாற்றங்கள் செய்ததை வைத்து அவரை இந்துவயப்படுத்த முடியாது. இந்து மத வண்டவாளங்களை "இந்துமத புதிர்கள்" நூல் மூலம் கிழித்தெறிந்த அம்பேத்கரை "இந்துத்துவ அம்பேத்கர்" என்பது நகைப்புக்குரியது. உபநிடதங்களை தீயிலிட்டு கொளுத்திய அம்பேத்கர் உபநிடதங்களை ஆதரித்ததாக ம. வெங்கடேசன் எழுதியிருப்பதை அவருடைய தனிப்பட்ட ஆசையாக எடுத்துக்கொள்ளலாமே தவிர, அதில் எள்ளளவும் உண்மையில்லை. காஷ்மீர் பிரிவினையை ஆதரித்ததற்காக அம்பேத்கர் எப்படி இந்துத்துவ அம்பேத்கராவார் ஏன்பதை ஆர்.எஸ்.எஸ். தான் விளக்க வேண்டும்.

இந்துக்களுக்கான கட்சியாக தன்னை காட்டிக்கொள்ளும் ஆர்.எஸ்.எஸ்., ஆணவப் படுகொலைகள் நடைபெறும்போது, ஏன் அவற்றை எதிர்த்து, ஜாதி மறுப்பு திருமணத்தை ஒரு இயக்கமாக முன்னெடுக்கவில்லை? வர்ண தர்மத்தை ஆதரிக்கும் ஆர்.எஸ்.எஸ்., நடத்தும் தீண்டாமை ஒழிப்பு, ஜாதி ஒழிப்பு நாடகங்களெல்லாம், மதமாற்றத்தை தடுப்பதற்கு தான். 1981இல் இருந்து பல இந்துத்துவ மடாதிபதிகள், தலித் மக்களுக்கும், கிராம பூசாரிகளுக்கும், ஆன்மீக போதனைகளை வழங்க ஆரம்பித்தனர். தீண்டாமையை தவிர்ப்பதாக காட்டிக் கொண்டனர். ஆனால் இதன் விளைவு, கிராம பூசாரிகளை இந்துவயப்படுத்த, சமஸ்கிருத மயமாக்கத் தான் பயன்பட்டதேயன்றி, தலித் மக்களின் இழிவை போக்க பயன்படவில்லை. "அம்பேத்கர் ஆர்.எஸ்.எஸ்., முகாம்களை பார்வையிட்டு பாராட்டினார்; முஸ்லிம்களை வெறுத்தார்; இந்து மதத்தின் ஒரு பிரிவு என்பதால் பவுத்தத்தை தேர்ந்தெடுத்தார்" என்று அம்பேத்கரை திரிக்க பயன்படும் அனைத்து கட்டுக்கதைகளையும் மருத்துவர் ஜெயராமனின் நூல் உடைத்துள்ளது. இந்நூலை படித்து, நூலில் சொல்லப்பட்டுள்ள கருத்துகளை பரப்புவது நம் கடமையாகும் ●

## வாசகர்களிடமிருந்து...

பிரேம் நாத் பசாஸ் எழுதிய இந்திய வரலாற்றில் பகவத் கீதை நூலிலிருந்து 'நிமிர்வோம்' வெளியிட்ட செய்திகள் மிகவும் சிறப்பானவை. தோழர்கள் இந்த வரலாற்றுக் குறிப்புகளைப் படித்து மேடைகளில் பேச வேண்டும். தொடர்ச்சியான வரலாற்றோடு இத்தகைய பார்ப்பனக் கொடுமைகளை விளக்கும்போதுதான் அது மக்களை சென்றடையும்.

**– இளம் பரிதி, திருச்செங்கோடு**

'நிமிர்வோம்' தலையங்கம் சிறப்பாக இருந்தது.

*"இந்தியாவை ஒற்றை ஆட்சி அதிகாரக் கட்டமைப்புக்குள் கொண்டு வந்துவிட வேண்டும் என்பது அவர்களின் முன்னுரிமைத் திட்டம். அந்த நோக்கத்தோடு மாநிலங்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு அதிகாரமற்றவைகளாக்கப்படுகின்றன. அதற்கான சட்டங்கள் வேகவேகமாக அதிரடியாக வந்து கொண்டிருக்கின்றன.*

*இந்த ஆபத்துகளை நாம் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்? மாநிலங்களின் முழுமையான உரிமைக்கான சுயஆட்சி உரிமைகளை வலியுறுத்தி,*




*அதை மக்கள் இயக்கமாக்க வேண்டும். தமிழ் நாட்டை வடவர் மயமாக்கி சமஸ்கிருதம், இந்தி, பார்ப்பனிய வேத கலாச்சார மரபுகளை திணிக்கிறார்கள். இவற்றிற்கு எதிரான இயக்கத்தை மாநில சுயாட்சி முழக்கங்களோடு இணைக்க வேண்டும். தமிழ்நாடு மட்டுமே இதற்காக வழிகாட்டும் மாநிலமாக இப்போது இருக்கிறது!"*

– என்று மிகச் சரியாக தலையங்கம் சுட்டிக் காட்டியிருக்கிறது.

**– இலக்கியா, சென்னை–82**

# பணமதிப்பு நீக்கத்திலிருந்தே தொடங்கிவிட்டது பொருளாதார பின்னடைவு




*இந்தியப் பொருளாதார சூழல் தற்போது எப்படி இருக்கிறது என்பது கண்கூடாகத் தெரிய ஆரம்பித்திருக்கிறது. பல முன்னணி நிறுவனங்கள் ஆயிரக்கணக்கான ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பிக்கொண்டிருக்கின்றன. நுகர்வு குறைந்துள்ளது. உற்பத்தி அதள பாதாளத்தில். தனியார் முதலீடு முற்றிலும் பூஜ்யமாக இருக்கிறது. அரசும் பொருளாதாரத்தை மீட்க பல சலுகைகளை, அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறது. ஆனால், அடிப்படையில் ஒரு விஷயத்தை அரசு நினைவில்கொள்ள மறுக்கிறதோ என்று தோன்றுகிறது.*

ஜார்கண்டில் 40 வயதான விவசாயி ஒருவர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியத்தை நம்பி தன்னுடைய விவசாய நிலத்தில் கிணறு வெட்டினார். இப்போது கிணறு இருக்கிறது. ஆனால், அவர் உயிரோடு இல்லை. வெட்டிய கிணற்றிலேயே குதித்து தற்கொலை செய்துகொண்டு இறந்து விட்டார். அவருடைய தற்கொலைக்குக் காரணம், அரசு தர வேண்டிய மானியத்தை தராததுதான். இன்றைய இந்தியப் பொருளாதாரத்தின் நிலையும் கிட்டதட்ட இதுதான்.

ஒரு தனிநபருக்கு அரசு சரியான நேரத்தில் கொடுக்க வேண்டிய உதவியை, நிதியைத் தராமல் போனதால் எப்படி அந்தக் குடும்பமே வாழ்க்கையை இழந்து நிற்கிறதோ, அத்தகைய நிலையில்தான் இன்றைய பொருளாதாரமும் இருக்கிறது. அதற்கு காரணமாக அரசே இருக்கிறது என்பதுதான் வேதனை தரும் விஷயமாக இருக்கிறது. மிக முக்கியத்துவம் வாய்ந்த பல துறைகளைச் சேர்ந்த நிறுவனங் களுக்கு அரசு தரப்பிலிருந்து செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகள் சில லட்சம் கோடிகள் உள்ளன.

குறிப்பாக பொதுத் துறை நிறுவனங்களின் நிலை இன்று மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது. மத்திய, மாநில அரசுகள் பொதுத் துறை நிறுவனங்கள்தானே என்று அவற்றிடமிருந்து பெறும் சேவைகளுக்கும் பொருட்களுக்குமான தொகையை சரியான நேரத்தில் வழங்காமல் காலம் தாழ்த்தி வருவதையே வழக்கமாக வைத்துள்ளன. இதன் விளைவு, நிறுவனங்கள் கடன் சுமையில், தொழிலைத் தொடர்ந்து நடத்த முடியாமல், நஷ்டத்தில் கிடந்து உழல்கின்றன. பணியாளர்கள் வேலை பறிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள். முதலீடு குறைகிறது, உற்பத்தி குறைகிறது. இப்படி பொருளாதாரத்தின் ஒவ்வொரு நிலைகளையும் பாதிக்கிறது. எந்தத் துறையில் எந்தெந்த நிறுவனங்களுக்கு எவ்வளவு தொகை நிலுவை இருக்கிறது என்பதைப் பார்த்தாலே, தற்போதைய பொருளாதார சரிவில் அரசின் பங்கு எந்த அளவுக்கு உள்ளது என்பது புலனாகும்.

***அரசு மானியம் :*** இந்தியாவின் தற்போதைய பொருளாதார இயக்கத்தைத் தீர்மானிக்கும் சக்தி

எரிபொருள். எரிபொருளுக்கு அரசு குறிப்பிட்ட மானியத்தை வழங்கிவருகிறது. ஆனால், இந்த மானியத் தொகையை எண்ணெய் நிறுவனங்களுக்கு அளிப்பதில் அரசு தாமதம் செய்கிறது. இந்த நிதி ஆண்டில் எரிபொருள் மற்றும் உர மானியத்தில் ரூ. 62 ஆயிரம் கோடியை அரசு செலுத்தாமல் நிலுவை வைத்து அடுத்த நிதி ஆண்டு கணக்குக்கு கொண்டு செல்ல இருக்கிறது. அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் இதில் அடக்கம். அரசிடமிருந்து வரவேண்டிய நிதி வராத பட்சத்தில் அவை கடன் வாங்க வேண்டிய நிலைக்கு ஆளாகின்றன. தொழிலில் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், கடன் நெருக்கடியால் திவால் ஆகும் நிலைக்கு ஆளாகின்றன. இந்த பட்ஜெட்டில் உரமானியம் ரூ.74 ஆயிரம் கோடியாகக் கணிக்கப்பட்டது.

ஆனால் சென்ற ஆண்டு செலுத்த வேண்டிய தொகையிலேயே ரூ. 32 ஆயிரம் கோடி நிலுவையில் உள்ளதால், இந்த நிதி ஆண்டில் நிலுவைத் தொகை இன்னும் அதிகரிக்கும் எனக் கூறப்படுகிறது. எரிபொருள் மானியம் வழங்கவேண்டிய தொகையில் இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகியவற்றுக்கு ரூ.63,100 கோடி செலுத்த வேண்டியிருக்கிறது. இந்த நிலையில் எண்ணெய் நிறுவனங்களுக்கு இருக்கும் கடன் அளவு மொத்தமாக ரூ.1.62 லட்சம் கோடியாக உள்ளது. இந்தியன் ஆயில் நிறுவனத்துக்கு ரூ.92,712 கோடியும். பாரத் பெட்ரோலியம் ரூ.42,915 கோடியும், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்துக்கு ரூ.26,036 கோடியும் என கடன்கள் உள்ளன. இத்தகைய கடன் நெருக்கடியில் அரசிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையும் சரிவர கிடைக்காமல் இருப்பதால் பெரும் நிதி நெருக்கடியைச் சந்திக்க நேரிடுகின்றன. இதுபோக ஏர் இந்தியா நிறுவனம் எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.5,000 கோடி பாக்கிவைத்துள்ளது. ஆட்டோமொபைல் துறை விற்பனை ஏற்கெனவே சரிவைச் சந்தித்துவரும் நிலையில், எரிபொருள் மானியத்துக்கான தொகையை அரசு தராமல் இருப்பது எப்படியான விளைவுகளை எண்ணெய் உற்பத்தி நிறுவனங்களிடையே ஏற்படுத்தும் என்பதை அரசு சிந்திக்க வேண்டும்.

**உணவு மானியம் :** அதேபோல் விவசாயிகளின் முக்கிய நம்பிக்கையாக விளங்கும் உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் மத்திய உணவு வாணிப கழகத்துக்கு வழங்கப்படும் மானியத்திலும் நிலுவையைவைத்துள்ளது அரசு. விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் உணவுப் பொருள்களுக்கான மானியத்தில் ரூ. 69,394 கோடி நிலுவையில் உள்ளது. மத்திய தணிக்கை ஆணையத்தின் தகவல்படி அரசின் மொத்த மானியத்தில் இந்த ஆண்டில் 74 சதவீதம் மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது மீதமுள்ள 26 சதவீதம் நிலுவையில் உள்ளது. சென்ற ஆண்டு 83 சதவீதம் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது.

**விவசாயிகளின் நிலை :** கரும்பு, கோதுமை உள்ளிட்டவற்றை விவசாயிகளிடமிருந்து பெற்றுக் கொண்டு அதற்கான விலையை வழங்குவதிலும் அரசுகள் மிகவும் தாமதப்படுத்துகின்றன. கரும்பு விவசாயிகளுக்குத் தர வேண்டிய விலை நிலுவையில் இருப்பதில் முதலிடத்தில் உத்திரப் பிரதேசம் இருக்கிறது. 2018-19 நிலவரப்படி உத்திரப்பிரதேச அரசு சர்க்கரை ஆலைகளுக்குத் தர வேண்டிய நிலுவைத் தொகை ரூ.7,364 கோடியாக உள்ளது.

**பி.எஸ்.என்.எல்., ஏர் இந்தியா :** பிஎஸ்என்எல், எம்டிஎன்எல் ஆகியவற்றுக்கும் அரசு தரப்பில் தர வேண்டிய நிலுவைத் தொகை பெருமளவில் இருந்தது. சமீபத்தில் ஊழியர்களுக்கு சம்பளம் தர முடியாத நெருக்கடி ஏற்பட்ட நிலையில்தான் அரசு தான் தரவேண்டிய தொகையை வழங்கியது. ஏர் இந்தியா நிதி நெருக்கடியில் திவாலாகும் தருணத்தை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறது. தொடர்ந்து செயல்பட அரசு தர வேண்டிய நிலுவைத் தொகையை செலுத்தினால் பயனாக இருக்கும் என்று கூறியும் அரசு அதைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

மின் விநியோகத் துறையின் நிலை இன்னும் மோசம். கிட்டதட்ட மாநில அரசுகள் ரூ.30 ஆயிரம் கோடி மின் விநியோக நிறுவனங்களுக்கு வழங்க வேண்டியிருக்கிறது. வீடுகளில் மின் கட்டணம் செலுத்த ஒரு நாள் தவறினாலும் பியூஸ் கேரியரை பிடுங்கி விடுகிறார்கள். ஆனால், அரசுகளை இவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இதிலும் உத்தரப்பிரதேச அரசு ரூ. 11,176 கோடி நிலுவைத் தொகையுடன் முதலிடத்தில் உள்ளது. இரண்டாம் இடத்தில் மகாராஷ்

டிரா ரூ.5,419 கோடி தர வேண்டி உள்ளது. தமிழகம் ரூ.1,396 கோடி நிலுவை வைத்துள்ளது.

**பிற துறைகள் :** ஜூட் எனப்படும் சாக்குப்பைகள் தயாரிக்கும் மில்களுக்கு அரசு தர வேண்டிய தொகை ரூ.1,950 கோடி. 2 லட்சம் பேர் இந்தத் துறையை நம்பி உள்ளனர். ஜூட் மில் நிறுவனங்கள் தாங்கள் வாங்கிய கடனை செலுத்த முடியாமல், பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க முடியாமல் திணறிவருவதாகத் தெரிவித்திருக் கிறார்கள். மொத்த ஜூட் உற்பத்தியில் 70 சதவீதத்தை அரசுதான் கொள்முதல் செய்கிறது. உணவு தானியங்களை பேக்கிங் செய்வதற்காக. ஆண்டுக்கு ரூ.6,500 கோடி அளவில் வாங்குகிறது. இவர்களுக்கு கடன் ரூ.1,200 கோடி உள்ளது. பணியாளர்களுக்கான ஊதிய பாக்கி ரூ.750 கோடியாக உள்ளது. தனியார் மருத்துவமனை களுக்கு அரசுகளின் இலவச காப்பீடு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ சேவைகளுக்கு வழங்கவேண்டிய தொகையில் ரூ.1,400 கோடி நிலுவை வைத்துள்ளது. அதேபோல் அரசு மருத்துவமனைகளுக்கு வாங்கப்படும் மருந்து களுக்கான தொகையும் நிலுவையில் உள்ளது.

ஐவுளித் துறைக்கு வழங்கவேண்டிய 'டெக்னாலஜி அப்கிரேட்' மானியம் ரூ.9,000 கோடியை அரசு நிலுவையில் வைத்துள்ளது. இந்த மானியம் வழங்கப்பட்டால் ஏற்றுமதி, வேலை வாய்ப்பு அனைத்துமே ஊக்குவிக்கப்படும் என்கிறார் ஐவுளித் துறை கூட்டமைப்பின் தலைவர் நட்ராஜ். ஐவுளித் துறை அமைச்சகத் தினால் தொடங்கப்பட்ட இந்த திட்டத்தினால் கடந்த இருபது ஆண்டுகளில் ரூ.3.75 லட்சம் கோடி முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. ஆனால், சரியான நேரத்தில் அரசு தர வேண்டிய மானியத்தைத் தராததால் பல வகைகளிலும் பணத்தட்டுப்பாடு உண்டாகிறது. புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கம் இல்லாத நிலையில் ஏற்கெனவே பணியில் இருப்பவர்கள் வேலை இழக்கும் அபாயம் உண்டாகிறது என்று அவர் கூறுகிறார்.

பங்குச் சந்தையில் மிகவும் நிபுணத்துவம் பெற்றவரான மோதிலால் ஆஸ்வால் ஃபைனான்சியல் சர்வீசஸ் இணை நிறுவனர் ராம்தியோ அகர்வால் கூறுகையில், 'அரசு

**இன்று புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 200, 500, 2,000 ரூபாய் நோட்டுகளில் கள்ள நோட்டுகள் அதிகமாகியுள்ளதாக அண்மையில் வந்த ரிசர்வ் வங்கியின் ஆண்டறிக்கை தெரிவிக்கின்றது.**

நிறுவனங்களுக்குத் தர வேண்டிய தொகையை சரியாகக் கொடுத்தாலே உள்நாட்டில் இருக்கும் பாதி பொருளாதார பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்கிறார். உடனேகூட கொடுக்க வேண்டாம், 30 நாட்களுக்குள் கொடுத்தால்கூட போதும் மூன்றில் ஒரு பங்கு பிரச்சினை தீர்ந்துவிடும் என்கிறார். பங்குச் சந்தையில் 40 வருடங்களில் இப்போது நடப்பது போன்ற ஒரு வீழ்ச்சியைக் கண்டதில்லை என்கிறார் ராம் தியோ அகர்வால்.

சந்தையை ஊக்குவிக்க, தொழிலை ஊக்குவிக்க நுகர்வை ஊக்குவிக்க என அரசு கூறி வருவதெல்லாம் தனியார் முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்பதற்குத்தான். அரசு முதலீடு செய்ய முன்வராதது ஒருபக்கம் என்றால், மறுபக்கம் நிறுவனங்களுக்குத் தர வேண்டிய தொகையைத் தராமல் காலம் தாழ்த்தி பல முக்கிய நிறுவனங் களை மெல்ல சாகடித்துக் கொண்டிருக்கிறது.

மக்களிடம் எப்படி வரியை சரியான நேரத்தில் செலுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கிறதோ அதைப் போலவே அரசு தர வேண்டிய நிலுவைத் தொகை, மானியம், நிதி உதவி போன்றவற்றையும் சரியான நேரத்தில் தர வேண்டுமல்லவா? ஒவ்வொரு நிதி ஆண்டிலும் நிதி நிலையை சமாளிக்க, நிதிப் பற்றாக்குறை யிலிருந்து தப்பிக்க செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்தாமல் அடுத்த நிதி ஆண்டுக்குக்கொண்டு செல்வதால் அந்த நிதி பற்றாக்குறை சரியாகிவிடுமா?

முதலீடு குறைவு, உற்பத்தி குறைவு, கடன் அதிகரிப்பு, வேலை வாய்ப்பின்மை அதிகரிப்பு என அனைத்துமே ஒன்றோடொன்று பிணைந்தவை. வட்டியைக் குறைப்பதாலும், அந்நிய முதலீடுகளை அதிகரிப்பதாலும் மட்டுமே தற்போதுள்ள பொருளாதார சரிவைச் சரி செய்துவிடமுடியாது என்பதை அரசு உணரும் தருணம் எப்போது வரும்?

**கிராமப் பொருளாதாரத்தின் பேரழிவு :** எந்தவொரு முன்னுதாரணமும் இல்லாமல், முன்னேற்பாடும் இல்லாமல் பணமதிப்பிழப்பு நடவடிக்கை நவம்பர் 8, 2016-ல் அறிவிக்கப் பட்டது. இந்த ஒரு நடவடிக்கைக்குப் பிறகுதான் GDP-ல் 12 சதவிகிதமாக இருந்த பணப்புழக்கம், 8.2 சதவிகிதமாக குறைந்தது. இது இயற்கையாக இருந்துவந்த மக்களின் ஒட்டுமொத்த நுகர்வு தேவைக்கு கொடுக்கப்பட்ட பெரிய அதிர்ச்சியாக அமைந்தது. ரொக்கப் பரிவர்த்தனை குறைந்து, டிஜிட்டல் பரிவர்த்தனைக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. இது நாட்டின் பெரும்பான்மை மக்களை நேரடியாகப் பாதித்தது.

அதிலும் முக்கியமாக சாதாரண, கிராமப் புற, முறைசாராத் துறைகளைச் சேர்ந்த மக்களின் வாங்கும் திறனை மிகக் கடுமையாக பாதித்தது. பொதுவாக இவர்கள் அனைவருமே தங்களின் பெரும்பகுதி வருமானத்தை செலவிடக் கூடியவர்கள். சேமிப்பு என்பதை கனவிலும் நினைக்காதவர்கள். பணமதிப்பிழப்பு நடவடிக்கை இந்த மக்களை முற்றிலுமாக பொருளாதாரப் பிணைப்பிலிருந்து துண்டித்தது என்றுதான் சொல்ல வேண்டும். இவையனைத்துக்கும் மேல் பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கான நோக்கமாக அறிவிக்கப்பட்ட கருப்புப் பணம் மற்றும் கள்ளப் பணம் எதையும் அரசு கண்டு பிடிக்கவில்லை.

மொத்தப் பணமும் வங்கிக்கு வந்து விட்டதை அறிவிக்க ரிசர்வ் வங்கி இரண்டு ஆண்டுகள் எடுத்துக்கொண்டதுதான் மிச்சம். அதுபோலவே ‘ஒரே நாடு ஒரே வரி’ என்ற முழக்கத்தோடு தொடங்கிய GST போது மான ஏற்பாடுகள் இல்லாமல் அவசர கோலத்தில் அமல்படுத்தப்பட்டு சிறுதொழில், சிறு, குறு வியாபாரிகளைப் பாதித்ததோடு மட்டுமல்லாமல் அரசுக்கும் போதுமான வரி வருவாயை ஈட்டித் தரவில்லை. அதுமட்டுமல்லாமல், டிஜிட்டல் பரிவர்த்தனையும் பெரிய அளவில் அதிகரிக்க வில்லை. பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்கு முன்பு நமது GDP-ல் ரொக்கத்தின் பங்கு 11-12 சதவீதமாக இருந்தது. மூன்றாண்டுகளுக்குப் பிறகு இன்று மீண்டும் அதே பழைய நிலையை எட்டிவிட்டது. அன்று 500, 1000 ரூபாய் நோட்டுகள் மொத்த பணத்தில் 85 சதவீதமாக இருந்தது. இன்று 500, 2000 ரூபாய் நோட்டுகள் 2019 மார்ச் மாத கடைசியில் 82.2 சதவீதத்தை எட்டியுள்ளது.

ஒரே வித்தியாசம் என்னவென்றால், அன்று அதிகமாக கள்ள நோட்டுகள் இல்லை. இன்று புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 200, 500, 2,000 ரூபாய் நோட்டுகளில் கள்ள நோட்டுகள் அதிகமாகியுள்ளதாக அண்மையில் வந்த ரிசர்வ் வங்கியின் ஆண்டறிக்கை தெரிவிக்கின்றது. பணமதிப்பிழப்பு, ஜிஎஸ்டி இந்த இரண்டு நடவடிக்கைகளும் மக்களின் ஒட்டுமொத்த தேவைகளை வெகுவாக குறைத்து பொருளா தாரத்தின் தொடர் சரிவுக்கு அடித்தளமிட்டது என்பதை இன்றுவரை அரசு நம்பத் தயாராக இல்லை.

இந்த இரு நடவடிக்கைகளின் தோல்வியை அரசு ஏற்காமல் தொடர்ந்து வெற்றிகரமான நடவடிக்கைகள் என்றே பாராட்டிக்கொண்டது. இதனால், பொருளாதார சரிவையும் ஒப்புக் கொள்ள மறுத்து அதை தடுக்கும் எந்த முக்கிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. மாறாக உலக பொருளாதாரத்தைக் காரணம் காட்டியது. இங்கு உள்நாட்டு பொருளாதார சரிவுடன் கூடவே தனியார் முதலீடுகள், குடும்ப சேமிப்புகள், உள்நாட்டு வெளிநாட்டு சந்தை முதலீடுகள், நுகர்வு என அனைத்துமே சரிந்து வந்தன. இவை அனைத்துக்கும் முக்கிய காரணம் உள்நாட்டு காரணிகள்தான் என்பது தெளிவாகத் தெரிந்தும் அரசு காதுகொடுக்கவில்லை.

பொருளாதார சரிவும் வேலை இழப்பும் பொருளாதார வளர்ச்சிக்கும் சாதாரண மக்களுக்கும் உள்ள முக்கிய தொடர்பு வேலை வாய்ப்புதான். இதை குருச்சரண் தாஸ் என்ற பொருளியல் பத்திரிகையாளர் பின்வருமாறு கூறுகிறார். 1 சதவீத GDP-யின் வளர்ச்சி சராசரியாக 15 லட்சம் நேரடி வேலை வாய்ப்புகளை உருவாக்கக் கூடியது. இதில் ஒவ்வொரு நேரடி வேலைவாய்ப்பும் 3 மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்கும். ஆக, 1 சதவீத GDP வளர்ச்சி 60 லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கவல்லது.

ஒவ்வொரு வேலையும் 5 பேர் உள்ள ஒரு குடும்பத்தை பாதுகாக்கும் என்றால், 1 சதவிகித GDP வளர்ச்சி 3 கோடி மக்களுக்கு வாழ்வளிக்கும். அதாவது GDP வளர்ச்சியில் கடந்த 3 ஆண்டுகளில் ஏற்பட்ட 3.2 சதவிகித சரிவு என்பது, 9.6 கோடி மக்களின் வாழ்வை பாதித்துள்ளது என்பதுதான்

நிதர்சனமான உண்மை. 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையின்மை உயர்ந்து உள்ளது என்று அரசின் NSSO புள்ளி விவரம் கூறுவதையும் இதனோடு ஒப்பிட்டுப்பார்த்தால் இந்த சரிவு எந்த அளவுக்கு நம்மை பாதித்துள்ளது என்பது தெளிவாகும். இந்த வரலாறு காணாத வேலை யிழப்பு, சாதாரண மக்களின் வருமானத்தை, ஒட்டு மொத்த தேவையை வெகுவாக குறைத்துள்ளது.

மத்திய பட்ஜெட்டில் எடுக்கப்பட்ட பல்வேறு கொள்கை முடிவுகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களிடையே அதிருப்தியை ஏற்படுத் தியதால் முதலீடுகளை எடுத்துக்கொண்டு வெளியேற ஆரம்பித்தனர். இதனால் பங்குச்சந்தை தொடர் சரிவைச் சந்தித்தது. இதையடுத்து தொழில் துறையினரிடையே எதிர்ப்பு கிளம்ப நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட்டில் அறிவித்த அறிவிப்புகளையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டார். இதுதவிர 'சிங்கிள் பிராண்ட் ரீடெய்ல்' விற்பனை, டிஜிட்டல் மீடியா மற்றும் நிலக்கரி போன்ற துறைகளில் அந்நிய நேரடி முதலீட்டை (FDI) ஊக்குவிக்க அதன் விதிகளை தளர்த்தும் அறிவிப்புகளை அரசு வெளியிட்டது.

இதன் மூலம் நுகர்வோர்கள் தேர்ந்தெடுக்க பல்வேறு வெளிநாட்டு பிராண்டுகள் அதிகமாக கிடைக்குமாம். இதுபோக கடன் சந்தையை ஊக்குவிக்க ரிசர்வ் வங்கி தொடர்ந்து நான்கு முறை வட்டிக் குறைப்பு நடவடிக்கையை எடுத்தது. இப்போது கூடவே ரூ.1.76 லட்சம் கோடி கையிருப் பினையும் அரசுக்குத் தாரைவார்க்க இருக்கிறது. 27 வங்கிகள் 12 வங்கிகளாக ஒருங்கிணைக்கப்பட உள்ளன. இன்னும் இதுபோன்ற பல அறிவிப்புகள் வரவும் வாய்ப்புள்ளது.

இந்தத் தொடர் பொருளாதார சரிவு கடந்த மூன்று ஆண்டுகளாக இருந்துகொண்டிருக்கிறது. பல பொருளாதார வல்லுநர்கள், தரச்சான்று நிறுவனங்கள் தொடர்ந்து எச்சரித்து வந்த நிலை யிலும், அரசு அதை அங்கீகரிக்காமல் பொருளா தாரம் நன்றாக உள்ளதாகவே சாதித்துவந்தது. ஆனால், பங்குச்சந்தையின் கடும் வீழ்ச்சி, அந்நிய முதலீடுகளின் திடீர் வெளியேற்றம், ரூபாய் மதிப்பின் சரிவு, நிறுவனங்கள் உற்பத்தி குறைப்பு, பணியாளர்கள் வேலை இழப்பு என்று ஒவ்வொன்றாகவே வெளிச்சத்து வரவே அரசு பொருளாதார சரிவை ஏற்க வேண்டிய நிர்பந்தத்துக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

அரசு தற்போது எடுத்துள்ள நடவடிக்கைகள் அனைத்தும் தனியார் தொழில் துறை முதலீட்டில், போதுமான உற்பத்தியை அளிப்பதில் (Supply Side) தடைகள்/பிரச்சினைகள் இருப்பதாக அரசு எண்ணிக்கொண்டிருப்பதால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். அதாவது வட்டி விகிதத்தை குறைத்து, வங்கிகள் கடன் வழங்குவதை அதிகரித்தால், வங்கிகளை ஒருங்கிணைத்தால், அந்நிய முதலீடுகளுக்கான தடைகளை தளர்த்தினால், இந்தியத் தொழில் துறையில் முதலீடுகள் பெருகி, வேலைவாய்ப்புகள் அதிகரித்து, தனிநபர் வருமானம் செழித்து பொருளாதாரம் சரியாகிவிடும் என்று அரசு எண்ணுகின்றது. ஆனால், கவலை என்னவெனில், இது முற்றிலும் தவறான புரிதல்.

இங்கே முதலீடுகளுக்கும், கடன்களுக்கும் உள்ள தடைகளைவிட நுகர்வும் தேவையும்தான் முற்றிலுமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. சாமான்ய மக்களின் தேவை கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து குறைந்து வந்துள்ளது. பணப்புழக்கமும், வாங்கும் திறனும் வெகுவாகப் பாதித்துள்ளன. இந்த அடிப்படையை புரிந்து கொள்ளாமல் ஏதேதோ நடவடிக்கைகளை யெல்லாம் அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆக, நமது பொருளாதாரத்தின் தொடர் சரிவுக்கு அடிப்படை காரணம் சரிந்து வரும் தேவை குறைவே. அதை சரி செய்ய கல்வி, சுகாதாரம், விவசாயம், கிராமப்புற கட்டமைப்பு போன்ற துறைகளில் அதிக முதலீடுகளைச் செய்து வேலைவாய்ப்புகளை உருவாக்கி அதன் மூலம் சாதாரண மக்களின் வருமானத்தையும், வாங்கும் திறனையும் உயர்த்தலாம்.


ஆனால், இவற்றையெல்லாம் செய்வதற்கு தேவையான நிதிநிலை அரசிடம் உள்ளதா என்பதும் பெரும் கேள்விக்குறியே. ஏனெனில், அரசு தனது ஒட்டுமொத்த செலவை கடந்த ஆண்டுகளில் ஜிடிபியில் 14 சதவீதம் என்ற நிலையிலிருந்து 12 சதவீதமாகக் குறைத்துள்ளது. ரிசர்வ் வங்கியிடமிருந்து பெற்ற ரூ. 1.76 லட்சம் கோடியையும் அரசு எப்படி பயன்படுத்தப் போகிறது என்பதும் அரசுக்கே வெளிச்சம்.

**- வணிக மணி**

சாதி அமைப்பு முறையைக் கடைப் பிடிக்கின்ற இந்துக்கள், பிரபஞ்ச சக்திகள்தான் ஒரு சாதியை இன்னொரு சாதியைவிட உயர்ந்ததாக ஆக்கியிருப்பதாக நம்புகின்றனர். படைப்புக் குறித்து இந்துக்கள் கொண்டுள்ள கட்டுக்கதைகளில் மிகப் பிரபலமான ஒன்று இப்படி அமைந்துள்ளது. ‘புருஷம் (சமஸ்கிருதத்தில் புருஷ்) என்ற ஒரு பண்டைய ஜீவனின் உடலிலிருந்து கடவுளர் இவ்வுலகத்தைப் படைத்தனர். புருஷத்தின் கண்ணிலிருந்து சூரியனும், அதன் மூளையிலிருந்து சந்திரனும், அதன் வாயிலிருந்து பிராமணர்களும், அதன் கைகளிலிருந்து சத்திரியர்களும், அதன்

வேண்டி யிருக்கும். பண்டைய சீனர்களிடம் மற்றொரு நம்பிக்கை இருந்தது. நூவா என்ற பெண் கடவுள் மண்ணிலிருந்து மனிதர்களைப் படைத்ததாகக் கூறுகின்ற அவர்கள், மேட்டுக்குடியினரை அருமையான மஞ்சள் நிற மண்ணிலிருந்தும், சாமானியர்களைப் பழுப்பு நிறச் சகதியிலிருந்தும் உருவாக்கியதாகக் கூறுகின்றனர்.

ஆனால், நமக்குத் தெரிந்தவரை, இந்த ‘மேல்-கீழ்’ என்ற அனைத்து அடுக்கதிகார அமைப்புகளும் மனிதக் கற்பனையின் விளைவாக உருவானவைதான். பிராமணர்களும் சூத்திரர்




# பார்ப்பனியம் கட்டமைத்த ஜாதிய ‘அடுக்கு அதிகாரம்’

**யுவால் நோவா ஹராரி**

***உலகம் முழுதும் அண்மையில் விற்பனையில் முதலிடம் பெற்றுள்ள நூல், யுவால் நோவோ ஹராரி எழுதிய ‘சேப்பியன்ஸ்’ என்ற மனித குல வரலாறு, 30 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் பார்ப்பனர்கள் திணித்த ‘ஜாதி – அடுக்கு முறை’ அதிகாரம் குறித்தும் அது கடவுளால் உருவாக்கப்பட்டது என்ற புரோகிதர்கள் புரட்டுகளையும் விளக்கும் பகுதி இது.***

தொடைகளிலிருந்து வைசியர்களும், அதன் கால்களிலிருந்து சூத்திரர்களும் படைக்கப் பட்டனர்’. நீங்கள் இந்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டால், பிராமணர்களுக்கும் சூத்திரர் களுக்கும் இடையேயான சமூக மற்றும் அரசியல் ரீதியான வேறுபாடுகள், சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையேயான வேறுபாடுகளைப் போல இயல்பானவைதான் என்றும் நிரந்தர மானவை என்றும் நீங்கள் ஒப்புக் கொள்ள

களும் ஒரு பழங்கால உயிரினத்தின் உடலின் பல உறுப்புகளிலிருந்து கடவுளரால் உருவாக்கப் பட்டவர்கள் அல்லர். மாறாக, சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வட இந்தியாவில் மனிதர்கள் உருவாக்கிய சட்டங்களும் கட்டுப்பாடு களும்தான் இவ்விரு சாதிகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தோற்று வித்தன. அடிமைகளுக்கும் சுதந்திரமான மனிதர்களுக்கும் இடையே உயிரியல்ரீதியாக எந்த

**பிராமணர்களும் சூத்திரர்களும் ஒரு பழங்கால உயிரினத்தின் உடலின் பல உறுப்புகளிலிருந்து கடவுளரால் உருவாக்கப்பட்டவர்கள் அல்லர். மாறாக, சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வட இந்தியாவில் மனிதர்கள் உருவாக்கிய சட்டங்களும் கட்டுப்பாடுகளும்தான் இவ்விரு சாதிகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தோற்றுவித்தன.**

வேறுபாடும் இல்லை. இது அரிஸ்டாட்டிலின் கருத்தோடு முரண்பட்டு நிற்கின்ற உண்மை. மனிதச் சட்டங்களும் கட்டுப்பாடுகளும்தான் சிலரை அடிமைகளாகவும் மற்றவர்களை எஜமானவர்களாகவும் மாற்றியுள்ளன. கறுப்பின மக்களுக்கும் வெள்ளையர்களுக்கும் இடையே பாரபட்சமற்ற உயிரியல் வேறுபாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, அவர்களுடைய தோலின் நிறம், தலைமுடியின் அமைப்பு ஆகியவற்றைக் கூறலாம். ஆனால், அறிவிலும் அறப்பண்பு களிலும் அவர்களுக்கு இடையே வேறுபாடுகள் இருப்பதற்கான சான்றுகள் எதுவும் நம்மிடம் இல்லை.

தங்களுடைய சமுதாய அடுக்கதிகார அமைப்பு மட்டுமே இயல்பானது என்றும் நியாயமானது என்றும், மற்றவற்றின் அடுக்கதிகார அமைப்புகள் தவறான மற்றும் நகைப்பிற்குரிய காரணிகளின் அடிப்படையில் அமைந்துள்ளன என்றும் சிலர் முழங்குகின்றனர். நவீன மேற்கத்தியர்கள், இனரீதியான அடுக்கதிகார அமைப்பைப் பற்றிய யோசனையை எள்ளி நகைக்கின்றனர். கறுப்பின மக்கள் வெள்ளையர்கள் வாழும் பகுதிகளில் வாழக் கூடாது. வெள்ளையர்களின் பள்ளிகளில் சேர்ந்து பயிலக் கூடாது. வெள்ளையர்களுக்கான மருத்துவமனைகளில் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படக் கூடாது என்று வலியுறுத்துகின்ற சட்டங்கள் அவர்களுக்கு அதிர்ச்சி அளிக்கின்றன. ஆனால், பணக்காரர்கள் மற்றும் ஏழைகளின் அடுக்கதிகார அமைப்பு அர்த்தம் வாய்ந்ததாக இருப்பதாகப் பல அமெரிக்கர்களும் ஐரோப்பியர் களும் கருதுகின்றனர். செல்வந்தர்கள் தனியான, அதிக ஆடம்பரமான வீடுகள் அமையப் பெற்றப் பகுதிகளில் வாழ்வதையும், அதிக மதிப்புமிக்கத் தனியார்ப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படிப்பதையும் தனியான மற்றும் சிறந்த மருத்துவக் கருவிகளைக் கொண்ட மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதையும் அந்த அடுக்கதிகார அமைப்பு ஓர் ஆணையாகவே செயல்படுத்தி யுள்ளது. ஆனாலும், பெரும் பாலான பணக்காரர்கள் பணக்காரர்களாக இருப்பதற்குக் காரணம் அவர்கள் ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்ததுதான் என்பதும், பெரும்பாலான ஏழைகள் தங்கள் வாழ்நாள் முழுவதும் ஏழைகளாக இருப்பதற்குக் காரணம் அவர்கள் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்ததுதான் என்பதும் நிரூபிக்கப்பட்ட ஓர் உண்மையாகும்.

துயரம் என்னவென்றால், சிக்கலான மனிதச் சமுதாயங்களுக்குக் கற்பனையான அடுக்கதிகார அமைப்புகளும் நியாயமற்றப் பாகுபாடுகளும் தேவையாக இருப்பதுபோலத் தெரிகிறது. எல்லா அடுக்கதிகார அமைப்புகளும் அறநெறி ரீதியாக ஒரே மாதிரியாக இல்லை. சில சமுதாயங்கள் மற்றவற்றைவிட மிகத் தீவிரமான பாகுபாட்டால் துன்புற்றன. ஆனால், பாகுபாட்டை ஒட்டு மொத்தமாகத் தூக்கியெறிந்த எந்தவொரு பெரிய சமுதாயத்தையும் பற்றி அறிஞர்கள் இதுவரை கேள்விப்பட்டதில்லை. மேல்வகுப்பினர் மற்றும் கீழ் வகுப்பினர் என்றும், வெள்ளையர்கள் மற்றும் கருப்பர்கள் என்றும், மேட்டுக்குடியினர் மற்றும் சாதாரண மக்கள் என்றும், பிராமணர்கள் மற்றும் சூத்திரர்கள் என்றும் கற்பனையான வகை களுக்குள் தங்கள் கூட்டத்தினரைப் பிரிப்பதன் மூலம் மக்கள் தங்களுடைய சமுதாயங்களில் மீண்டும் மீண்டும் ஒழுங்கை உருவாக்கி வந்துள்ளனர். சட்டரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் சிலரை மற்றவர்களைவிட அதிக மேன்மையானவர்களாக ஆக்கியதன் மூலம் கோடிக்கணக்கான மக்களுக்கு இடையேயான உறவுகளை இவ்வகைகள் முறைப்படுத்தியுள்ளன.

அடுக்கதிகார அமைப்புகள் ஒரு முக்கியமான விஷயத்திற்கு உதவுகின்றன. முன்பின் அறிமுகம் இல்லாத ஒருவரைத் தனிப்பட்ட முறையில் தெரிந்து கொள்ளுவதற்குத் தேவையான நேரத்தையும் ஆற்றலையும் விரயம் செய்யாமலேயே ஒருவரையொருவர் எவ்வாறு நடத்த வேண்டும் என்பதை அவை மக்களுக்குக்

கற்றுக் கொடுக்கின்றன. ஜார்ஜ் பெர்னார்டு ஷாவின் பிக்மேலியன் நாடகத்தில், எலைஸா டூலிட்டிலுடன் தான் எவ்வாறு பழக வேண்டும் என்பதைப் புரிந்து கொள்வதற்கு அவளோடு ஒரு நெருக்கமான பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை ஹென்ரி ஹிக்கின்ஸ்க்கு இருக்கவில்லை. ஏனெனில், அவள் கீழ்வகுப்பைச் சேர்ந்த ஒருத்தி என்பதையும், அவளைத் தன் விருப்பம்போலத் தன்னால் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதையும் அவள் பேசும் விதத்திலிருந்தே அவன் தெரிந்து கொள்கிறான். ஒரு பூக்கடையில் வேலை பார்க்கின்ற நவீனப் பெண்ணான எலைஸா, தினமும் தன் கடைக்கு வருகின்ற ஏராளமான மக்களிடம் ரோஜாக்களை விற்பதற்குத் தான் எவ்வளவு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டி யுள்ளது. ஒவ்வொரு தனிநபரின் ஆர்வம் என்ன, அவருடைய பர்ஸில் எவ்வளவு பணம் இருக்கிறது என்பதைப் பற்றி அவளால் விலாவாரியாக அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாது. மாறாக, அந்நபர் உடையணிந்திருக்கும் விதம், அவருடைய வயது போன்றவற்றையும், சில சமயங்களில் அநாகரீகமாக அவருடைய தோலின் நிறத்தையும் அவள் பயன்படுத்திக் கொள்ளு கிறாள். விலையுயர்ந்த ரோஜாக்களை அதிக எண்ணிக்கையில் வாங்கக்கூடிய சாத்தியம் கொண்ட ஓர் உயர் நிர்வாக அதிகாரியையும், ஒரு சில டெய்ஸி மலர்களை மட்டுமே வாங்கும் சக்தி கொண்ட ஒரு கடை நிலை ஊழியரையும் அவள் அப்படித்தான் உடனடியாக அடையாளம் காண்கிறாள்.

இயல்பான திறன்களில் உள்ள வேறுபாடு களும் சமுதாயப் பிரிவினைகளின் உருவாக்கத்தில் ஒரு பங்கு வகிக்கின்றன என்பதை மறுப்பதற் கில்லை. ஆனால், அத்தகைய இயல்பான திறன்களும் நடத்தைகளும் பொதுவாகக் கற்பனையான அடுக்கதிகார அமைப்புகளின் வாயிலாகவே உருவாக்கப்படுகின்றன. இது இரண்டு முக்கியமான வழிகளில் நடக்கிறது. முதலில், பெரும்பாலான திறன்கள் பராமரித்து வளர்க்கப்பட வேண்டியுள்ளன. ஒருவர் ஒரு குறிப்பிட்டத் திறனுடன் பிறந்திருந்தாலும்கூட, அது அக்கறையோடு வளர்க்கப்பட்டு மெரு

**அடுக்கதிகார அமைப்புகள் ஒரு முக்கியமான விஷயத்திற்கு உதவுகின்றன. முன்பின் அறிமுகம் இல்லாத ஒருவரைத் தனிப்பட்ட முறையில் தெரிந்து கொள்ளுவதற்குத் தேவையான நேரத்தையும் ஆற்றலையும் விரயம் செய்யாமலேயே ஒருவரையொருவர் எவ்வாறு நடத்த வேண்டும் என்பதை அவை மக்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றன.**

கூட்டப்பட்டுப் பயன்படுத்தப்படும் வரை அத்திறமை அவருக்குள் ஓரிடத்தில் வெறுமனே முடங்கிக் கிடக்கும். அவ்வளவுதான். தங்களுடைய திறன்களை வளர்ப்பதற்கும் மெருகூட்டுவதற்கு மான வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அவர்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கிறதா இல்லையா என்பது பொதுவாக அவர்கள் தங்கள் சமுதாயத்தின் கற்பனையான அடுக்கதிகார அமைப்பில் எந்த அடுக்கில் இருக்கிறார்கள் என்பதைச் சார்ந்திருக்கும். ஹாரி பாட்டர் (உலகப் புகழ் பெற்ற குழந்தைகளுக்கான காமிக் எழுத்தாளர்) இதற்கான ஒரு சிறந்த எடுத்துக் காட்டாவான். தன்னுடைய பிரபலமான மாயஜாலக் குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்டு, அறிவிலிகளால் வளர்க்கப்பட்ட அவன், மாயா ஜாலத்தில் எந்த அனுபவமும் இல்லாமல்தான் ஹார்வார்ட்ஸ் மாயாஜாலப் பள்ளிக்கு வருகிறான். தன்னுடைய சக்திகளைத் தன்னுடைய கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதற்கும் தனக்குள் இருக்கும் தனித்துவமான திறன்களை அறிந்து கொள்வதற்கும் அவனுக்கு ஏழு ஆண்டு களும் எண்ணற்ற சாகசங்களும் தேவைப்படு கின்றன.

இரண்டாவதாக, சமுதாயத்தில் வெவ்வேறு வகுப்புகளைச் சேர்ந்த மக்கள் துல்லியமாக அதே திறமைகளைத் தங்களிடம் வளர்த்துக் கொண்டாலும், சம அளவு வெற்றி அவர்களுக்குக் கிடைக்க வாய்ப்பில்லை. ஏனெனில், சமுதாய விதிமுறைகள் ஒரே மாதிரியானவையாக இருப்பதில்லை. ஆங்கிலேய ஆட்சியின்கீழ் இருந்த இந்தியாவில், தீண்டத்தகாதவர் ஒருவரும், ஒரு பிராமணரும், அயர்லாந்து நாட்டுக் குடிமகனான ஒரு கத்தோலிக்கரும், ஓர் ஆங்கிலேயப் புராட்டஸ்டென்டும் ஒரே மாதிரியான வியாபார அறிவைத் தங்களிடம் வளர்த்திருந்தாலும்,

பணக்காரர்களாக ஆவதற்கான வாய்ப்பு அவர்கள் எல்லோருக்கும் ஒன்றுபோல அமைந்திருக்காது. சட்டக் கட்டுப்பாடுகளும், நலிந்தவர்களை முன்னேற விடாதபடி தடுக்கின்ற அதிகார பூர்வமற்ற முட்டுக்கட்டைகளுமாகச் சேர்ந்து பொருளாதாரப் போட்டியில் தில்லு முள்ளுகளைச் செய்தன.

**நச்சுச் சுழற்சி**

அனைத்துச் சமுதாயங்களும் கற்பனையான அடுக்கதிகார அமைப்புகளின் அடிப்படை யிலேயே அமைந்துள்ளன என்றாலும், அவை ஒரே அடுக்கதிகார அமைப்பின் அடிப்படையில் அமையவில்லை. இந்த வேறுபாடுகளுக்கு எவை காரணம்? பாரம்பரிய இந்தியச் சமூகம் சாதியின் அடிப்படையிலும், ஓட்டோமான் (துருக்கி) சமுதாயம் மதத்தின் அடிப்படையிலும், அமெரிக்கச் சமுதாயம் இனத்தின் அடிப்படை யிலும் மக்களைப் பிரித்தது ஏன்? பெரும்பான்மை விஷயங்களில் தற்செயலான வரலாற்றுச் சூழல்களின் விளைவாகவே அடுக்கதிகார அமைப்புகள் முதலில் உருவாயின. ஆனால், பல்வேறு குழுக்களுக்கு அதில் தனிப்பட்ட ஆதாயம் இருந்ததால், பல தலைமுறைகளின் ஊடாக அவர்கள் அவற்றைத் தம்முடைய சமுதாயத்திற்குள் ஆழமாகப் புகுத்தி மெருகேற்றினர்.

எடுத்துக்காட்டாக, சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தோ-ஆரிய மக்கள் இந்தியத் துணைக் கண்டனத்தை ஆக்கிரமித்து உள்ளூர் மக்களை அடக்கி ஒடுக்கியபோதுதான் இந்து மதத்தின் சாதி அமைப்பு முறை வடிவம் பெற்றதாகப் பல அறிஞர்கள் ஊகிக்கின்றனர். அந்த இந்தோ-ஆரியர்கள் அச்சமூகத்தை ஓர் அடுக்கதிகார அமைப்பாகப் பிரித்தனர். அதில், வந்தேறிகளான புரோகிதர்களும் படைவீரர்களும் உயர்ந்த நிலையை வகித்தனர் (அதில் வியப்பதற்கு எதுவும் இல்லை). உள்ளூர்க்காரர்கள் வேலைக் காரர்களாகவும் அடிமைகளாகவும் வாழ்ந்தனர். எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்த ஆக்கிரமிப்பாளர்கள், சமுதாயத்தில் தங்களுடைய உயர்ந்த நிலையும் தனித்துவமான அடையாளமும் போய்விடுமோ என்று அஞ்சினர். இந்த

**சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தோ-ஆரிய மக்கள் இந்தியத் துணைக் கண்டத்தை ஆக்கிரமித்து உள்ளூர் மக்களை அடக்கி ஒடுக்கியபோதுதான் இந்து மதத்தின் சாதி அமைப்பு முறை வடிவம் பெற்றதாகப் பல அறிஞர்கள் ஊகிக்கின்றனர். அந்த இந்தோ-ஆரியர்கள் அச்சமூகத்தை ஓர் அடுக்கதிகார அமைப்பாகப் பிரித்தனர். அதில், வந்தேறிகளான புரோகிதர்களும் படைவீரர்களும் உயர்ந்த நிலையை வகித்தனர்**

அச்சத்தைத் தடுப்பதற்கு, மக்களை அவர்கள் பல சாதிகளாகப் பிரித்தனர். ஒவ்வொரு சாதியும் ஒரு குறிப்பிட்டத் தொழிலையோ அல்லது சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்டப் பாத்திரத்தையோ வகிக்கக் கட்டாயப்படுத்தப்பட்டன. ஒவ்வொரு சாதிக்கும் வெவ்வேறு சட்டத் தகுதி நிலையும் சலுகைகளும் கடமைகளும் உருவாக்கப்பட்டன. சாதிகள் ஒன்றோடொன்று கலப்பது தடை செய்யப்பட்டது. அதன்படி, வெவ்வேறு சாதி யினருக்கிடையே எந்தவிதமான சமூகத் தொடர்புகளும் இருக்கக் கூடாது. இருவேறு சாதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இடையே திருமணம் நடைபெறக் கூடாது. அவர்கள் ஒருவரோடு ஒருவர் உணவைப் பகிர்ந்து கொள்ளக்கூட அவர்களுக்கு அனுமதி இருக்க வில்லை. இந்த வேறுபாடுகள் சட்டபூர்வ மானவையாக இருந்ததோடு, மதரீதியான கட்டுக் கதைகளின் பிரிக்கப்பட முடியாத அம்சமாகவும் மத நடைமுறைகளின் ஒரு பகுதியாகவும் ஆயின.

சாதி அமைப்பு முறை ஒரு தற்செயலான வரலாற்று நிகழ்வு அல்ல. மாறாக, அது ஒரு நிரந்தரமான பிரபஞ்ச யதார்த்தத்தைப் பிரதிபலித்தது என்று அந்த ஆட்சியாளர்கள் வாதிட்டனர். தூய்மை, தூய்மை யின்மை ஆகிய கோட்பாடுகள் இந்து மதத்தில் இன்றியமையாத விஷயங்களாக இருந்தன. சமுதாயப் பிரமிடைத் தூக்கிப் பிடிக்க அவை வலிமைப்படுத்தப்பட்டன. வேறொரு சாதியைச் சேர்ந்தவர்களுடன் கலந்து பழகுவது தனிப்பட்ட முறையில் மட்டுமல்லாமல் ஒட்டு மொத்தச் சமுதாயத்தையும் மாசுபடுத்தி விடும் என்றும், எனவே, அத்தகைய தொடர்புகள் வெறுத்து ஒதுக்கப்பட வேண்டும் என்றும் சமயப் பற்றுக் கொண்ட இந்துக்களுக்குக் கற்றுக்

கொடுக்கப்பட்டது. இப்படிப்பட்ட யோசனைகள் இந்துக்களுக்கு மட்டுமே தனித்துவமானவை அல்ல. வரலாறு நெடுகிலும், கிட்டத்தட்ட அனைத்துச் சமுதாயங்களிலும், சமுதாயப் பிரிவு களையும் அரசியல் பிரிவுகளையும் வலியுறுத்து வதில் தீட்டு, தூய்மை ஆகிய கோட்பாடுகள் ஒரு முன்னணிப் பங்கு வகித்து வந்துள்ளன. ஆட்சியதிகாரத்தில் இருந்தவர்கள் தங்களுடைய சலுகைகளைத் தக்க வைத்துக் கொள்ளுவதற்காக அவற்றைத் தங்களுக்கு ஏற்ற விதத்தில் வளைத்து வந்துள்ளனர். ஆனால், தீட்டு குறித்த அச்சம் முழுக்க முழுக்க மதகுருக்களும் அரசர்களும் புனைந்து வந்துள்ள ஒன்று அல்ல. உயிர் பிழைத்து இருப்பதற்கு நம்முள் செயல்படுகின்ற ஓர் உள்ளுணர்விலேயே அது வேரூன்றியிருக்கலாம். நோயாளிகள், சடலங்கள் போன்ற நோய்களைப் பரப்பக்கூடிய எந்தவொரு காரணியையும் கண்டவுடன் நமக்குள் ஓர் அருவருப்பும் வெறுப் பும் ஏற்படும்படி செய்வது இந்த உள்ளுணர்வு தான். பெண்கள், யூதர்கள், ரோமா பழங்குடியினர், ஓரினச் சேர்க்கையாளர்கள், கருப்பர்கள் போன்ற ஏதேனும்ஒரு மனிதக் குழுவைத் தனிமைப்படுத்த நீங்கள் விரும்பினால், இவர்கள் எல்லோரும் தீட்டுப்பட்டவர்கள் என்றும், தீட்டைப் பரப்புபவர்கள் என்றும் மற்றவர்களை நீங்கள் நம்ப வைத்துவிட்டால் போதும்.

இந்து மதத்தின் சாதி அமைப்பு முறையும் இனக் கலப்பிற்கு எதிரான சட்டதிட்டங்களும் இந்தியக் கலாச்சாரத்தில் ஆழமாக வேரூன்றி யுள்ளன. இந்தோ-ஆரிய ஆக்கிரமிப்பு மறக்கப்பட்டு நெடுங்காலத்திற்குப் பிறகும்கூட இந்தியர்கள் சாதி அமைப்பு முறையில் தொடர்ந்து நம்பிக்கைக் கொண்டனர். தீட்டு உருவாகி விட்டது என்று கருதப்பட்டாலும், காவிய அடையாளம் அப்படியே நீடிக்கவில்லை. அவற்றிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. உண்மையில், காலப்போக்கில் பெரிய சாதிகளுக்குள் பல உட்பிரிவுகள் தோன்றின. இறுதியில் முதன்முதலாகத் தோன்றிய நான்கு சாதிகள் மூவாயிரம் வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்தன. சாதிகள் இவ்வாறு பெருகியபோதும், சாதி அமைப்புமுறையின் அடிப்படைக் கொள்கை மட்டும் மாறவில்லை. அதாவது, ஒவ்வொரு நபரும் சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட அடுக்கு நிலைக்குள் பிறக்கிறார். அந்நிலையின் விதிமுறைகளை அவர் மீறினால் அது அவருக்கும் ஒட்டு மொத்தச் சமுதாயத்திற்கும் தீட்டு ஏற்படுத்தி விடுகிறது என்ற கொள்கை தொடர்ந்து நீடிக்கிறது. ஒருவருடைய தொழிலையும், அவர் என்ன உண்ணலாம் என்பதையும், அவர் எங்கு வாழலாம் என்பதையும், யாரை அவர் மண முடிக்கலாம் என்பதையும் அவருடைய சாதிதான் தீர்மானிக்கிறது. பொதுவாக, ஒரு நபரால் தன்னுடைய சாதிக்கு உள்ளேயேதான் மண முடிக்க முடியும். அதனால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் அதே சாதியைச் சேர்ந்தவர்களாக ஆகின்றனர்.

ஒரு புதிய தொழில் உருவாகியபோது அல்லது ஒரு புதிய மக்கட் குழு தோன்றியபோது, இந்துச் சமுதாயத்திற்குள் முறையான ஓர் இடம் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்றால் அவர்கள் ஒரு சாதியாக அங்கீகரிக்கப்பட வேண்டி யிருந்தது. ஒரு சாதி என்ற அங்கீகாரத்தைப் பெறத் தவறிய குழுவினர் விலக்கி வைக்கப்பட்டனர். பல பிரிவுகளைக் கொண்ட அச்சமுதாயத்தில் கீழ்மட்ட நிலையில்கூட அவர்கள் இல்லை. அவர்கள் தீண்டத்தகாதவர்களாக ஆனார்கள். அவர்கள் மற்றவர்களிடமிருந்து முற்றிலுமாக விலகி வாழ வேண்டியிருந்தது. குப்பைக் கூளங் களைக் கிளறி அவற்றிலிருந்து கிடைத்தவற்றை உட்கொண்டு மிகவும் அருவருப்பான, மிகவும் அவலமானதொரு வழியில் அவர்கள் வாழ வேண்டியிருந்தது. சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருந்த சாதியினர்கூட அந்தத் தீண்டத்தகாதவர் களுடன் கலந்து பழகுவதையும், சேர்ந்து உண வருந்துவதையும், அவர்களைத் தொடுவதையும், அவர்களைத் திருமணம் செய்து கொள்ளுவதை யும் தவிர்த்தனர்.

சாதி வேறுபாடுகளைக் களையவும் சாதிக் கலப்பினால் தீட்டு எதுவும் ஏற்படுவதில்லை என்று இந்துக்களை ஒப்புக் கொள்ள வைக்கவும் இந்திய அரசாங்கம் முயற்சிகள் மேற் கொண்டும்கூட, நவீன இந்தியாவில், திருமணம், வேலை ஆகிய விஷயங்கள் மீது சாதி அமைப்பு முறை இன்றளவும் ஓர் அளப்பரிய தாக்கம் ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கிறது.

●



# சனி திசையில் சனி புத்தி

குத்தூசி குருசாமி

“இந்த ஜோஸ்யர்களைப் போலப் பித்தலாட்டக்காரர்களை நான் பார்த்ததேயில்லையப்பா! எந்த ஜோஸ்யராவது நடக்கப் போவதைச் சரியாகச் சொல்லிக் கேட்டிருக்கிறாயா?” என்றேன், எதிரில் வந்து நின்ற என் நண்பர் சொக்கனிடம்.

“நடந்து போனதை மட்டும் என்ன, சரியாய்ச் சொல்லிக் கிழிக்கிறார்களோ? எல்லாம் பார்த்தாச்சப்பா! ஒரு தடவை என் அப்பா என் தங்கைக்கு திருமணம் செய்வதற்காக ஜாகதத்தை எடுத்துக் கொண்டு போனார். சுமார் 6 மணி நேரம் பார்த்துவிட்டு ரொம்ப சந்தோஷத்தோடு 10 ரூபாய் பணமும் கொடுத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினார். ‘என்ன சொன்னார் ஜோசியர்’ என்று கேட்டேன். ‘அடுத்த மூன்று மாதத்திற்குள் கலியாணம் நிச்சயம் ஆகியே தீருமென்றும், புருஷன் ரொம்ப நெருங்கிய சொந்தமாயிருப்பானென்றும், ஒரு இலட்ச ரூபாய்க்குக் குறையாத சொத்துள்ளவனென்றும், நல்ல படிப்பாளியென்றும் சொன்னார்!’ என்றார் என் தகப்பனார். இதைக் கேட்டுக் கொண்டே வந்த என் தாயார், ‘அது சரி! அவள் ஜாதகத்தைத்தான் தஞ்சாவூருக்கு அனுப்பியிருக்கிறோமே நகல் இல்லையென்று கூட சொல்லிகிட்டுயிருந்தியளே!’ என்று கேட்டாள். அப்பா திடுக்கிட்டுப் போய் ஜாதகம் இருந்த மேஜை ‘டிராயரை’த் திறந்து பார்த்தார். அங்கு வேறு ஜாதகமே இல்லை. என் கையிலிருந்த ஜாதகத்தின் (ஓலையில் எழுதப்பட்டது) பின்புறத்தைப் பார்த்தார். ‘சுந்தரி’ என்று எழுதியிருந்தது. தூள் தூளாகக் கிழித்தெறிந்தார்.”

“ஏன் அதைக் கிழித்தெறிய வேண்டும்?”

“ஏனா? அது என் மற்றொரு தங்கையின் ஜாதகம். அவளுக்கும் சுந்தரிக்கும் ஒரே வயசுதான் வித்தியாசம். இளம் வயதில் விதவையான அந்தத் தங்கை இறந்து போய் இரண்டு வருஷமாகி விட்டது. தவறுதலாக அந்த ஜாதகத்தை எடுத்துப் போய் காட்டி விட்டார். அந்தக் குரு (சோதி)டனுக்கோ உயிரோடிருப்பவர் ஜாதகமா செத்துப் போனவர் ஜாதகமா என்பதைக்கூட கண்டுபிடிக்க முடியவில்லை. இது தான் ஜோசியத்தின் இலட்சணம்! எப்படியிருக்கிறது?” என்றான் என் நண்பன்.

“யாரப்பா அந்தச் சோதிட நிபுணர்?”

“அவர்தான் உலகப் புகழ் நேரு ஜோசியர்.”

“ஓஹோ! அவரா? பலே பேர் வழி ஆச்சே! ஒரு இலட்ச ரூபாய்க்கு மேல் சம்பாதித்து விட்டாராமே! அவர் நேற்று என்ன சொன்னார் தெரியுமா?

“அட்டமாதிபனும் குசனுமே கூடி ஆறு பனிரெண்டு இடத்திருக்கில், துட்டர் ஆயுதத்தால் மரணம்.’ அதாவது ‘எட்டுக்குடையவனும் செட்டுக்குடைய செட்டியாகிய செவ்வாயும் கூடி 6, 12 இடங்களிலிருந்தால், துஷ்டர் ஆயுதத்தால் மரணம் சம்பவிக்கும்” என்று சொன்னார்.

“யாருக்கு மரணம் சம்பவிக்கும்? எனக்கா, உங்களுக்கா?” என்று கேட்டேன். “உனக்கு எல்லாம் கிண்டல்தானப்பா? சோதிடத்தைப் பழிக்காதே! சொன்னால் சொன்னபடி நடக்கும்” என்றார்.

"அப்படியானால் நேரு சோதிடரே! எத்தனையோ நிபுணர்கள் இருக்கிறார்களே, உங்களைப் போன்றவர்கள்? எந்தப் பாவியாவது நம்ப காந்தியார் மரணத்தை முன் கூட்டியே ஒரு வார்த்தை சொல்லித் தொலைக்கக் கூடாதா?" என்று கேட்டேன்.

"ஹஹ்ஹா!" என்று சிரித்தார்.

"என்ன ஓய், சிரிக்கிறீர்? என் வயிறு எரிகிறது, நீர் இளிக்கிறீரே!... ஓஹோ! ஹிந்து மகாசபைத் தலைவரல்லவா நீர்? உம் பிள்ளைதான் ராஷ்ட்ரீய சேவா சங்கமாச்சே! செத்துப் போனதற்கு இனிப்பு வழங்கிய கிராதகக் கூட்டத்தைச் சோந்தவராச்சே!" என்றேன், எதிர்பாராத ஆத்திரமடைந்தவனாய்!

"ஏனப்பா ஆத்திரப்படுகிறாய்? அவர் ப்ராப்தம் அவர் கொலையுண்டு மாண்டார். நீயும் நானும் என்ன செய்ய முடியும்? சும்மா மிரட்டாதே! நாங்களெல்லாம் பழைய ஆசாமிகள் போன்றவர்கள் என்று நினைக்காதே! இப்போதெல்லாம் எங்கள் முறை மாறியிருக்கிறது, தெரியுமா? ரிக் வேதத்தின்மேல் ரிவால்வரை வைத்துப் பூஜை செய்கிறோம், என்பதை மறந்து விடாதே! அது சரி! மகாத்மா கொல்லப்படுவார் என்பது எனக்கா தெரியாது? அவர் ஜாதகமே பேசுகிறதே! சொல்கிறேன், கேள்!

அவருக்கு இப்போது நடப்பது சனி திசை யில் சனி புத்தி. அவர் பிறந்தது சுக்கில வருஷம் புரட்டாசி மாதம் 18ந் தேதி, சனி வாரம் துவாதசி திதி, மக நக்ஷத்திரம். (இது உண்மையான தேதி)

திசா நாதனகாகிய சனியுடன், ஜாதகத்தில் அவயோகம் கொடுக்கும்படியான குரு பகவான் சஞ்சரிக்கிறான். ஜாதகரின் ஜனன காலத்தில் குருவும் சனியும் அங்காரகன் வீட்டில் இருந்தார்கள். அந்த அங்காரகன் இப்போது சிம்ம லக்கினத்தில் வக்கரித்து நிற்கிறார். அவயோக கிரகமாகிய குரு பகவான் விருச்சிகத்தில் தற்காலம் சஞ்சரிப்பதனால் கெடுதல் சம்பவம் நிச்சயமாக ஏற்படும். சூன்ய கிரகமாகிய சனி திசை நடப்பதனாலும், ஜாதகத்தில் சனி நின்ற ராசியில் குரு சஞ்சரிப்பதாலும், துர் மரணந்தான் சம்பவிக்க வேண்டும் என்பது...."

இதைக் கேட்டுக் கொண்டிருந்த என் நண்பன், விட்டான் ஒரு அறை, சோதிடர் கன்னத்தில்! இரண்டு பற்கள் விழுந்தன! இரத்தமும் சொட்டிற்று.

"உமக்கு இந்த நிமிஷம் எந்த திசையில் எந்தப் புத்தி அய்யா, சொல்லும் ஜோசியரே!" என்று கேட்டான், என் நண்பன்.

"அவருக்கா? தெற்குத் திசையில் அற்பப் புத்தி! ஏனப்பா, அவர அடிக்கிறே, பாவம்! ஏதோ வயிற்றுப் பிழைப்புக்கு நேரு ஜோசியர், ராஜாஜி ஜோசியர் என்று பேர் வைத்துக் கொண்டால் அதற்காகவா இப்படி அறைகிறது?" என்று சமாதானம் சொன்னேன்.

"போதும்! நீ சும்மா இருப்பா! என் ஆத்திரத்தைக் கிளறாதே! இந்த ஆள் அளந்த அளப்பெல்லாம் ஜனவரி 30ந் தேதிக்கு முன்னால் காணோமே! அயோக்கியப் பிழைப்பு! ஜோசியமாம் ஜோசியம்! இனிமேல் எந்த முட்டாள் பயல் இந்த நாட்டில் இந்தப் பித்தலாட்டப் பிழைப்பை நம்பப் போகிறான்? மகாத்மாவின் மரணத்தையே முன்கூட்டிச் சொல்ல முடியல்லே! இப்போ உளறுகிறான்கள்! நீயும் கேட்டுக் கொண்டிருக்கிறாய்!" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

"அவன் ஒரு மாதிரி முன் கோபக்காரன்! போனால் போகிறான்! நீர் அடிபட வேண்டிய பிராப்தம்! அழுகாதீர்; குழாயில் வாயைக் கொப்புளியும்! இனிமேலாவது வேறு ஏதாவது ஒரு நல்ல தொழிலாகப் பார்த்துக் கொள்ளும்! போங்காணும், போம்! வீட்டுக்குப் போம்! உம் வீட்டில் அங்காரகன் வந்து குடியேறிவிடப் போகிறான்! காலங்கெட்டுக் கிடக்கிறது! வீடில்லா தவர்கள் பிறருடைய காலி வீட்டில் பலாத் காரமாகக் குடியேறுகிறார்களாம்! நீர் சூரியன் வீட்டையும் சந்திரன் வீட்டையும் பற்றியே பேசிக் கொண்டு உம் வீட்டைக் கோட்டை விட்டுவிடப் போகிறீர்! போங்காணும்!"

- என்று சமதானம் கூறி அனுப்பி வைத்தேன். நீங்களும் யாராவது அவரைக் கண்டால் ஆறுதல் சொல்லுங்கள்! உயரமான சிவந்த ஆள்; உச்சிக் குடுமி! பகலில் வீட்டிலிருப்பார்; இரவில் இந்து மகா சபையிலிருப்பார். வெளியே வரும்போது கதர் வேஷ்டி கட்டிக் கொண்டு வருவார்; காந்திக் குல்லாகூடப் போட்டிருப்பார். கண்டால் புத்தி சொல்லுங்கள்! பாவம்! ●



# அப்படி என்னதான் இருக்கிறது பின்லாந்து கல்விமுறையில்?

***உலக அளவில் 'கல்வியின் மெக்கா' என அழைக்கப்படுவது பின்லாந்து. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத்தில் எவ்வளவு மேம்பட்ட நிலையில் இருந்தாலும், அனைத்து பிரச்னைகளையும் தீர்ப்பதற்கான டாலர் என்ற ஆயுதத்தை வைத்திருந்தாலும், அவர்களால் கல்வியில் பின்லாந்துடன் போட்டிபோட முடியவில்லை.***

அப்படி என்னதான் இருக்கிறது பின்லாந்து கல்விமுறையில்?

'பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு' (OCED- organisation for economic co-operation and development) என்பது வளர்ச்சியடைந்த நாடுகளின் கூட்டமைப்பு. இதன் சார்பில், தங்கள் நாட்டு மாணவர்களின் கல்வித் திறன் குறித்த ஆய்வு அவ்வப்போது நடைபெறும். இதற்கு PISA-Programme for international students assessment என்று பெயர்.

மற்ற நாடுகள் விருப்பப்பட்டால், இதில் சேர்ந்து கொள்ளலாம். இந்த ஆய்வில் உலகின் மற்ற நாடுகள் பின்வரிசையில் இருக்க பின்லாந்து எப்போதும் முன்வரிசையிலேயே இடம் பிடிக்கிறது. அப்படி என்னதான் இருக்கிறது பின்லாந்து கல்வி முறையில்?

பின்லாந்தில் ஏழு வயதில்தான் ஒரு குழந்தை பள்ளிக்குச் செல்லத் தொடங்குகிறது. ஒன்றரை வயதில் ப்ளே ஸ்கூல், இரண்டரை வயதில் ப்ரீ-கே.ஜி., மூன்று வயதில் எல்.கே.ஜி., நான்கு வயதில் யு.கே.ஜி. என்ற சித்ரவதை அங்கே இல்லை.

கருவறையில் இருந்து வெளியில் வந்ததுமே குடுகுடுவென ஓடிச்சென்று பள்ளியில் உட்கார்ந்து கொள்ளும் எந்த அவசரமும் அவர்களுக்கு இல்லை. எல்லா நேரமும் கற்றலுக்கான துடிப்புடன் இயங்கும் குழந்தையின் சின்னஞ்சிறு மூளை, தனது சுற்றத்தின் ஒவ்வோர் அசைவில் இருந்தும் ஒவ்வோர் ஒலியில் இருந்தும் கற்கிறது. இலை உதிர்வதும், செடி துளிர்ப்பதும், இசை ஒலிப்பதும், பறவை பறப்பதும் குழந்தைக்குக் கல்விதான். இவற்றில் இருந்து வேரோடு பிடுங்கி வகுப்பறைக்குள் நடுவதால், அறிவு அதிவேக வளர்ச்சி அடையும் என எண்ணுவது மூடநம்பிக்கை.

ஏழு வயதில் பள்ளிக்குச் செல்லும் பின்லாந்து குழந்தை, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு கிட்டத்தட்ட ஆண்டின் பாதி நாட்கள்தான் பள்ளிக்கூடம் செல்கிறது. மீதி நாட்கள் விடுமுறை. ஒவ்வொரு நாளும் பள்ளி இயங்கும் நேரமும் குறைவுதான். அந்த நேரத்திலும்கூட, படிப்புக்குக் கொடுக்கப்படும் அதே முக்கியத்துவம் இசை, ஓவியம், விளையாட்டு, மற்றும் ஆய கலைகள் 64-க்கும் முக்கியத்துவம் உண்டு. ஒவ்வொரு பள்ளியிலும் ஓர் ஓய்வறை இருக்கும். படிக்கப் பிடிக்கவில்லை அல்லது சோர்வாக இருக்கிறது என்றால், மாணவர்கள் அங்கு சென்று ஓய்வு எடுக்கலாம்.

முக்கியமாக, 13 வயது வரை ரேங்கிங் என்ற தரம் பிரிக்கும் கலாச்சாரம் கிடையாது; பிராக்ரசு ரிப்போர்ட் தந்து பெற்றோரிடம் கையெழுத்து வாங்கி வரச் சொல்லும் வன்முறை கிடையாது. தங்கள் பிள்ளையின் கற்றல் திறன் குறித்து தெரிந்து கொள்ள வேண்டும் என பெற்றோர்கள் விரும்பினால், தனிப்பட்ட முறையில் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

- கற்றலில் போட்டி கிடையாது என்பதால், தேர்வுகளில் அதிக மதிப்பெண் எடுக்கும் மன உளைச்சல்கள் மாணவர்களுக்கு இல்லை.
- சக மாணவர்களைப் போட்டியாளர்களாகக் கருதும் மனப்பாங்கும் இல்லை.
- இவர்களுக்கு வீட்டுப்பாடம் தரப்படுவது இல்லை.

- மாணவர்களுக்கு எந்தப் பாடம் பிடிக்கிறதோ அதில் இருந்து அவர்களே வீட்டுப்பாடம் செய்து வரலாம்.
- ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மருத்துவர் இருப்பார். அவர், மாணவர்களின் உடல் நிலையை தனிப்பட்ட முறையில் கவனித்து ஆலோசனைகள் வழங்குவார்.
- ஒரு பள்ளியில் அதிகபட்சமாக 600 மாணவர்கள் இருக்கலாம்; அதற்கு அதிக எண்ணிக்கை கூடவே கூடாது.
- முக்கியமாக பின்லாந்தில் தனியார் பள்ளிக் கூடமே கிடையாது. அங்கு கல்வி என்பது முழுக்க முழுக்க அரசின் வசம். கோடீசுவரராக இருந்தாலும், நடுத்தர வர்க்கத்தினராக இருந்தாலும், ஏழையாக இருந்தாலும் அனைவரின் குழந்தைகளும் ஒரே பள்ளியில் தான் படிக்க வேண்டும். 'என் பொண்ணு இன்டர்நேஸனல் ஸ்கூல்ல படிக்கிறா' என சீன் போட முடியாது. அனைவருக்கும் சம தரமுள்ள கல்வி அங்கு உத்தரவாதப் படுத்தப்பட்டு உள்ளது. அதனால்தான் பின்லாந்தில் 99 சதவிகிதம் குழந்தைகள் ஆரம்பக் கல்வியைப் பெற்றுவிடுகின்றனர்.
- அதில் 94 சதவிகிதம் பேர் உயர்கல்விக்குச் செல்கின்றனர். 'டியூஷன்' என்ற அருவருப்பான கலாச்சாரம், அந்த நாட்டுக்கு அறிமுகமே இல்லை.
- தேர்வுகளை அடிப்படையாகக் கொள்ளாத இந்தக் கல்வி முறையில் பயின்றுவரும் மாணவர்கள்தான், உலகளாவிய அளவில் நடைபெறும் பல்வேறு தேர்வுகளில் முதல் இடங்களைப் பிடிக்கின்றனர். இது எப்படி என்பது கல்வியாளர்களுக்கே புரியாத புதிர். அந்தப் புதிருக்கான விடையை, ஐ.நா சபையின் ஆய்வு முடிவு அவிழ்த்தது.

உலகிலேயே மகிழ்ச்சியாக இருக்கும் குழந்தைகள் பற்றிய தரவரிசை ஆய்வு ஒன்றை, ஐக்கிய நாடுகள் சபை ஒவ்வோர் ஆண்டும் வெளியிடுகிறது. இதில் பின்லாந்து எப்போதும் முன்னணியில் இருக்கிறது. மகிழ்ச்சியின் நறுமணத்தில் திளைக்கும் குழந்தைகள், அறிவை ஆர்வத்துடன் சுவைப்பதில் புதிர் எதுவும் இல்லை.

பின்லாந்து கல்விமுறையின் இத்தகைய சிறப்புகள் குறித்து அறிந்து வருவதற்காக, உலகமெங்கும் உள்ள கல்வியாளர்களும், பிரதிநிதிகளும் அந்த நாட்டை நோக்கிக் குவிகின்றனர். உலகின் 56 நாடுகளில் இருந்து 15,000 பிரதிநிதிகள் ஒவ்வோர் ஆண்டும் செல்கின்றனர். நாட்டின் அந்நியச் செலாவணியில் கணிசமான சதவிகிதம் கல்விச் சுற்றுலாவின் மூலமே வருகிறது.

ஆனால், இப்படி தங்களை நோக்கி வீசப்படும் புகழ்மாலைகளை பின்லாந்தின் கல்வியாளர்களும் அமைச்சர்களும் ஓடோடி வந்து ஏந்திக்கொள்வது இல்லை. 'பின்லாந்து கல்விமுறைதான் (Finnish Education system) உலகிலேயே சிறந்தது எனச் சொல்ல முடியாது. ஆய்வில் எல்லா நாடுகளும் பங்கேற்காத நிலையில் இப்படி ஒரு முடிவை வந்தடைய முடியாது. எங்களைவிட சிறந்த கல்வி முறையும் இருக்க முடியும்' என்கிறார்கள். இல்லாத நாற்காலியைத் தேடி எடுத்து ஏறி அமர்ந்து, தனக்குத்தானே முடிசூட்டிக்கொள்ளும் தற்பெருமையாளர்கள் நிறைந்த உலகத்தில் இது பண்புமிக்க பார்வை; மதிக்கத்தக்க மனநிலை.

கல்வியில் இருந்து நாம் பெறவேண்டிய சாராம்சம் இதுதான். இத்தகைய சிறந்த கல்வி முறையை உருவாக்கியதிலும், பராமரிப்பதிலும் பின்லாந்தின் ஆசிரியர்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. சொல்லப்போனால் பின்லாந்து ஆசிரியர்கள் தான் இதற்கு முழுமுதல் காரணம். பின்லாந்தில் ஆசிரியர் பணி என்பது, நம் ஊர் ஐ.ஏ.எஸ்.,

ஐ.பி.எஸ் போல மிகுந்த சமூகக் கௌரவம் உடையது. அரசின் கொள்கை வகுக்கும் முடிவுகளில், திட்டங்களின் செயலாக்கத்தில் ஆசிரியர்களுக்கு முக்கியப் பங்கு உண்டு. மூன்றில் ஒரு பின்லாந்து குழந்தைக்கு, ஆசிரியர் ஆவதுதான் தன் வாழ் நாள் லட்சியம். அதே நேரம் அங்கு ஆசிரியர் ஆவது அத்தனை சுலபம் அல்ல!

மேல்நிலை வகுப்பில் சிறந்து விளங்கும் மாணவர்களில் இருந்து ஆசிரியர் பயிற்சிக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். ஐந்து ஆண்டுகள் உண்டு, உறைவிடப் பள்ளிகளில் சேர்ந்து கடும் பயிற்சி எடுக்க வேண்டும். பிறகு, ஆறு மாத காலம் இராணுவப் பயிற்சி. ஒரு வருடத்துக்கு வெவ்வேறு பள்ளிகளில் நேரடியாக வகுப்பறையில் ஆசிரியர் பயிற்சி, ஏதாவது ஒரு பாடத்தில் பிராஜெக்ட், குழந்தை உரிமைப் பயிலரங்கங்களில் பங்கேற்பது, நாட்டின் சட்டத் திட்டங்கள் குறித்த தெளிவுக்காக தேசிய அமைப்புகளிடம் இருந்து சான்றிதழ், தீயணைப்பு, தற்காப்புப் பயிற்சி, முதலுதவி செய்வதற்கான மருத்துவச் சான்று என ஆசிரியர் பயிற்சிக்கு சுமார் ஏழு வருடங்களைச் செலவிட வேண்டும். இப்படி ஆசிரியர்களை உருவாக்கும் விதத்தில் பின்லாந்து மேற்கொள்ளும் சமரசம் இல்லாத முயற்சிகள்தான், அங்கு கல்வியில் மாபெரும் மறுமலர்ச்சியை உருவாக்கி இருக்கிறது!

பாடம் படிப்போம் தாய்மொழி வழிக் கல்விப் பயிலும் பின்லாந்து போராளிகளிடம்.

**- இணையத்திலிருந்து திருப்பூர் விஜயகுமார்**

**கீதையின் வஞ்சகப் பின்னணி (2)**

# ஒழுக்க நெறியை கீதை ஏன் வளர்க்கவில்லை?



**பிரேம் நாத்பசாஸ் ஆங்கிலத்தில் எழுதிய நூலை - தமிழில் 'இந்திய வரலாற்றில் பகவத் கீதை' எனும் தலைப்பில் விடியல் பதிப்பகமும், சூலூர் வெளியீட்டகமும் இணைந்து வெளியிட்டுள்ளன. 1975ம் ஆண்டு, இந்நூலை எழுதிய பிரேம்நாத் பசாஸ் - ஒரு காஷ்மீரி. தந்தை பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பு - கடவுள் மறுப்புக் கொள்கைக் கண்ணோட்டத்தோடு இந்த நூல் எழுதப்பட்டுள்ளது இதன் தனிச் சிறப்பாகும்.**

**பெரியார் இயக்கத்துக்கான வர லாற்று ஆவணம் என்று கூறுமள வுக்கு, ஏராளமான வரலாற்றுச் செய்திகளை உரிய ஆதாரங்களுடன் தொகுத்தளித்துள்ளது. அதிலிருந்து சில முக்கிய பகுதிகள்:**

- "கடவுள் இல்லை; கடவுள் இல்லவே இல்லை; கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்; பரப்பியவன் அயோக்கியன்; வணங்குகிறவன் காட்டுமிராண்டி" என்று பெரியார் கூறிய கருத்துகள் - தங்களைப் புண்படுத்துவதாகப் பார்ப்பனர்கள் கூக்குரலிடுவது வாடிக்கையாக இருக்கிறது. ஆனால், கீதையில் "வேதாந்தங்களை"த் தவிர (பார்ப்பனிய கருத்துகள்) மற்றக் கருத்துகளைப் பின்பற்று கிறவர்களுக்கு, தந்துள்ள பட்டங்கள் - படுமோசமானவை. துஷ்கருமன் (தீம்பு செய்பவன்), நர ஆத்மா (கீழ்மகன்), ஹத ஞானம் (செத்த அறிவு), அல்ப மேதாவி (அறிவு கெட்டவன்), அபுத்துவன் (அறிவில் லாதவன்), நஷ்டன் (அழிந்து போனவன்), அசேதனன் (மூளையற்றவன்), சம்ஸய ஆத்மா (சந்தேகப் பிராணி), கடவுள் மறுப்பாளர்களுக்கு - கிருஷ்ணன் வழங்கியுள்ள பட்டங்கள் என்ன தெரியுமா? நஷ்டாத்துமா (அழிந்துபட்ட ஆத்மா), இடம்பமான் (இடம்பம் பேசுபவன்), மதன வித்தன் (அகந்தையானவன்), அசுரன், ராட்சசன், கடவுள் மறுப்பாளர்களை விளிக்கும் போதெல்லாம், இதே சொற் களையே கிருஷ்ணன் பயன்படுத்துகிறான்.
- அரசதிகாரத்தில் இருந்த சத்திரியர்கள் - ஒரு இயக்கமாக செயல்பட்டதால் தான் பார்ப்பனர்கள், ஆதிக்க நிலை ஆட்டம் கண்டது என்பதை 'கிருஷ்ணன்' நன்றாகவே உணர்ந்திருந்தான். எனவே பார்ப்பனியம் பாதுகாப்புடன் நீடிக்க வேண்டுமானால் சத்திரியர்கள் ஒற்றுமைக்கு முடிவு கட்ட வேண்டும், என்றும், அவர்களின் போரிடும் ஆற்றலை மழுங்கடிக்க வேண்டும் என்றும் திட்டமிட்டான். இதற்கு நல்வாய்ப்பாக கிருஷ்ணன் மகாபாரதப் போரைப் பயன் படுத்திக் கொண்டான் என்கிறார் நூலாசிரியர்.
- போரில் வெற்றி பெற்று, பாண்டவர்கள் தலைநகருக்குத் திரும்பும்போது அவர்களை ஆரவாரத்துடன் வரவேற்றது பார்ப்பனர்கள் தான். பாண்டவர்களின் குலத்தினரோ, போரில் உயிரிழந்த குடும்பத்தைச் சார்ந்த வர்களோ அல்ல; பார்ப்பனக் கூட்டத்தில் நின்றிருந்த ஒரு சார்வாகன் (கடவுள் மறுப்பாளன்) யுதிஷ்டிரனைப் பார்த்து, "உற்றார் உறவினரைக் கொன்று அழித்து என்ன பயன் கண்டாய்?" என்று கோபத்துடன் கேட் கிறான் யுதிஷ்டிரன், தலைகுனிந்து நின்றான்; உடனே

உயிரை மாய்த்துக் கொள்ளவும் துணிந்தான். உடனே கூடியிருந்த பார்ப்பனர்கள், "அவன் ஒரு அசுரன், கவலைப்படாதீர்கள்" என்று யுதிஷ்டிரனுக்கு ஆறுதல் கூறினர்; உடனே சார்வாகனைப் பார்ப்பனர்கள் பிடித்து, நெருப்பிலிட்டுக் கொளுத்தி விட்டார்கள் என்று மகாபாரதம் கூறுகிறது.

- பாரதப் போரினால் கிருஷ்ணனின் வஞ்சகத் திட்டங்கள் அனைத்தும் நிறைவேறின. பார்ப்பனர்கள் மீண்டும் ஆதிக்கம் பெற்றார்கள். மரணப் படுக்கையிலிருந்த பீஷ்மன், வெற்றி வேந்தனாகிய யுதிஷ்டிரனுக்கு, கூறும் அறிவுரையே இதற்கு சரியான சான்று:

  "பார்ப்பனர்களுக்கு பிரம்மதானம் கொடுப்பதே வேந்தனுக்கு அழகு. பார்ப்பனர்களுக்கு அளிக்கும் தானம் அசுவமேத யாகத்தைவிட சிறந்தது. பார்ப்பனர்களுக்கு இவ்வாறு தானம் செய்வதன் மூலம் - சத்திரியன் சொர்க்கத்தை அடைகிறான். பார்ப்பனர்களுக்கும், கடவுள்களுக்கும் மட்டுமே நிலங்கள் சொந்தமாக்கப்பட வேண்டும். பார்ப்பனர்களிடமிருந்து நிலங்களைப் பறிப்பது மன்னிக்க முடியாத குற்றம். தவறிக்கூடப் பார்ப்பனரைத் தண்டிக்காதே. பார்ப்பனர்கள்தான் மனிதரில் உயர்ந்தவர்கள். நீரிலிருந்து நெருப்பு பிறக்கிறது. பார்ப்பனரிலிருந்து சத்திரியன் பிறக்கிறான். பாறையிலிருந்து இரும்பு உண்டாகிறது. இரும்பு பாறையை வெட்டும் போதும், நீர் நெருப்பை அணைக்கும் போதும் பார்ப்பனுக்கு சத்திரியன் பகைவன் ஆகிறான். அதன் பின் அவர்கள் முகமிழந்து அழிந்து போகிறார்கள். பார்ப்பனர்களுக்குச் சமமாகத் தங்களைக் கூறிக் கொள்கிறவர்களைத் தண்டிக்க வேண்டியது அரசனனது கடமை." (மேற்கோள் ஆதாரம்: எம்.என்.ராய் எழுதிய மெட்டிரியலிசம்)

- "ஆத்மா அழிவற்றது; எனவே கொலை செய்வது பாவமல்ல" என்று படுகொலையை நியாயப்படுத்துகிறான் கிருஷ்ணன். (காந்தியைக் கொன்ற பார்ப்பான் கோட்சே, நீதிமன்றத்தில் தந்த வாக்கு மூலத்தில், தனது செயலுக்கு நியாயம் கற்பிக்க, கீதையின் இந்தக் கருத்தைத்தான் எடுத்துக் காட்டினான்). கிருஷ்ணனின் இந்தக் கருத்துக்கு, திலகர், டாக்டர் ராதாகிருஷ்ணன், சித்பவானந்தர் போன்ற பார்ப்பன விளக்க உரையாளர்கள் முட்டுக் கொடுக்கும் விளக்கங்களை முன் வைத்து நியாயப்படுத்துகிறார்கள். இப்போது கண்மூடித்தனமான ஆன்மிக போதையில் சிக்கியுள்ள ரஜினிகாந்தும் கிருஷ்ணன்-அர்ஜூனன் பெருமை பேசுகிறார்.

**போர்க்களத்தில் தத்துவம் பேச முடியுமா?**

- கீதையின் காலம் குறித்தும் - அது ஒருவரால் தான் இயற்றப்பட்டது என்பது குறித்தும் - குழப்பமான கருத்துகள் நிலவுகின்றன.
- "சாதியக் கட்டமைப்பின் இறுக்கம் நொறுங்கிக் கொண்டிருந்த காலகட்டத்தில் மீண்டும் சாதியக் கட்டுமானத்தை வலிமைப்படுத்தவே கீதை வந்தது என்கிறார், ஆய்வாளர் டி.பி.ஹில்.
- பாரதப் போரில் அர்ச்சுனனுக்கு, தேரோட்டுபவனாக இருந்த கிருஷ்ணன், அர்ச்சுனனுக்கு கூறிய அறிவுரைதான் கீதை என்ற கருத்தை ஏற்க இயலாது. போர்க்களத்தில் போர்ச் சூழல் பற்றிய உரையாடல்கள் தான் நடந்திருக்க முடியுமே தவிர வேறு பல தத்துவங்கள் பற்றிப் பேச, போர்க்களம் உரிய இடமாக இருக்காது. எனவே கீதையின் உள்ளடக்கம், பிற்காலத்தில் விரிவுபடுத்தி எழுதப்பட்டது என்பது பல ஆய்வாளர்களின் கருத்து. ஆனால் பகவத்கீதை இறைவனால் 'அருளப்பட்டது' என்று பார்ப்பனர்கள் கூறுகிறார்கள்.
- கீதை - ஒரு வரலாற்று நிகழ்வு என்பது சந்தேகத்துக்குரியது என்கிறார் காந்தியார். கீதையில் இடைச் செருகல்கள் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்கிறார் டாக்டர் இராதாகிருஷ்ணன். ஆனால், ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கீதையை எழுதினார்கள் என்பதை மட்டும் அவர் ஒப்புக் கொள்ள மறுக்கிறார்.
- கீதை எழுதப்பட்ட காலம் கி.மு.500 முதல் கி.பி. 300 வரை என்கிறார்கள். அதாவது 800 ஆண்டுகால இடைவெளியில் கீதை எழுதப்பட்டதாம். காலத்தைத் தவறாக நிர்ணயிக்க முயலுகிறார்கள் என்று சந்தேகத்தையே இது உருவாக்குகிறது. உண்மையில் கி.பி.400க்குப் பிறகே கீதை எழுதப் பட்டுள்ளது என்பது பல ஆய்வாளர்களின் கருத்து.

(தொடரும்)

தொகுப்பு: விடுதலை இராசேந்திரன்

# ஒரே சத்தம்....?

ஆரூர் புதியவன்

ஒரே...
ஒரே..
என்றாக்குவதே
ஒரே லட்சியம்
என்றிருப்பவரைச் சுற்றி
ஒரே மாதிரி சிந்திப்போரே
ஒரே கூட்டமாய்
இருந்தனர்
அங்கு
ஒரே கூச்சல்...

ஒரு நாடு
ஒரே மதம் என்றார்

ஒரு நாடு
ஒரே மொழி என்றார்

ஒரு நாடு
ஒரே பண்பாடு என்றார்

ஒரு நாடு
ஒரே ரேஷன் கார்டு என்றார்

ஒரு நாடு
ஒரே தேர்தல் என்றார்

ஒரு நாடு
ஒரே ஆட்சி என்றார்

ஒரு நாடு
ஒரே பதவி என்றார்

ஒரு நாடு
ஒரே தட்பவெப்ப நிலை
என்றார்...

கூட்டம்
ஆம்... ஆம்...
ராம்... ராம்...
என்று
கூச்சல் போட்டது...

வேறெதையெல்லாம்
'ஒரே' ஆக்கலாம்
என்ற
விளம்பினார்
விளம்பர நாயகர்...!

கிளம்பின
'ஒரே' குறித்த
வெவ்வேறு யோசனைகள்...!

பிரபோ...?
"வெவ்வேறு நாள்களில்
குழந்தைகள் பிறப்பது
வேற்றுமையை வளர்க்கும்...
எனவே
ஒரு நாடு
ஒரே பிறந்தநாள்"
என
அறிவிக்கலாம்...
என்றார்
வினயமாய் ஒருவர்.

ஆவேசமாய் எழுந்த
அடுத்த அறிவாளி
"ஒரு நாடு
ஒரே பிறந்தநாள்
என்ற திட்டத்தோடு
'ஒரு நாடு
ஒரே இறந்தநாள்'
என்ற திட்டமும்
கொண்டு வரப்பட வேண்டும்
ஆளுக்கொரு நாளில்
செத்தால்
அன்னை தேச ஒற்றுமை
செத்து விடாதா?"
என்றார்...

"மகளிர் சார்பாக
ஓங்கிக் குரல் கொடுத்த
பெண்மணி
அந்த மூன்று நாள்களும்
கூட
அகில இந்தியாவுக்கும்
ஒன்றாக இருக்க வேண்டும்
பாரத் மாதாவின்
பிள்ளைகளிடையே
வெவ்வேறு மூன்று நாள்கள்
விரோதத்தை வளர்க்கும்"
என்றார்...

"உணவகங்களில் இருக்கும்
மெனு கார்டுகளைத்
தடை செய்ய வேண்டும்...
ஒரு நாடு
ஒரே உணவு..."
என்று
கைஉயர்த்தி முழங்கினார்
காவி அஸ்திரத்தை
தரைவரைக்கும் போட்டவர்

அதுசரி
"ஒரு நாடு
ஒரே சாதி
என்று அறிவித்தால்
என்ன" என்றார்.

கூட்டத்தில் கலந்திருந்த
ஒரு கறுப்புச் சட்டைக்காரர்

"ஹேய் ஆன்ட்டி இண்டியன்"
என்று அனைவரும்
ஒரே குரலில்
ஓங்கிக் கத்தினர்...

ஒரே சத்தம்...!?

- தீக்கதிர் வண்ணக்கதிர்

Printed by K.RAJENDRAN. Published and Owned by K.RAJENDRAN and Printed at BEAUTIFUL PRINTER, 27/65, Devaraj Street, Royapettah,Chennai-600014 and Published at Old No.29, New No.16, Ist Street, Journalists Colony, Srinivasapuram, Thiruvanmiyur, Chennai-600041. Editor:K.RAJENDRAN